இணுவில் மருதனார்மடம்



# ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் வரலாற்றுப்

# புகழ் மாலை

உ

# ஸ்ரீ சுந்தர பஞ்சமுக ஆஞ்சநேயர்.



# இணுவில் மருதனார்மடம்



ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர்

# வரலாற்றுப் புகழ் மாலை



**Arulvalar Sri Sunthara Aanchaneyar Kovil**

**அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**

Regd. No HA/5/JA/924 T.P: 021 2223648

Sivasri R. Sunthareswara Kurukkal சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்



MARUTHANARMADAM, INUVIL, CHUNNAKAM, JAFFNA, SRI LANKA.

நாயன்மார்கள் பாடிய பாடல்கள் இன்றும் எம்மால் பாடப்பட்டு அதன் பயனை அடைகிறோம் அதே போல் காலத்துக்குக் காலம் பல அடியவர்கள் தோன்றி இறைவன் அருளால் பல ஆலயங்களின் மேல் பாடப்பட்ட பக்திப்பாடல்கள் அடியவர்களால் ஓதப்பட்டு அதன் மூலம் அவர்கள் பெறும் பலன்களை நாம் அறிவோம் அந்தவகையில் "அருட்கவி ஐயா வினாசித்தம்பி" அவர்கள் முதன் முதலில் ஆஞ்சநேயப் பெருமான் மேல் பாடிய பாடலே இன்றும் ஆலயத்தில் முதலாவதாக ஓதப்பட்டு வருகின்றது. பாடல் அர்த்தமும் அருள்வலுவும் கொண்டது.

"ஞான ஏந்தல்" திரு வயிரமுத்து சிவநேசன் அவர்கள் இளமை முதல் இறைபக்தி கொண்டு பல ஆலயங்களுக்கும் சென்று பாடிப் பணிபவர். இவ்வேளையில் ஆண்டு 2001இல் ஆஞ்சநேயப்பெருமானது கோயில் குடமுழுக்கிலிருந்து தினமும் ஆலயம் வருகை தந்து, பஜனைபாடி, பாசுரம் ஓதி தொண்டுகள் செய்து வரும் அடியவர் ஆஞ்சநேயர் அருளினால் அவர் இன்றுவரை ஆலயத்தில் நடைபெறும் வைபவங்களையும் சிறப்புக்களையும் வெளிக்கொண்ர்வு முகமாக பாடல்களை இயற்றி பெருமானை வேண்டி ஆலயத்தின் வளர்ச்சியில் பங்கு கொண்டு வருகிறார்.

ஆஞ்சநேயரிடம் உரிமையோடு வேண்டுவது மட்டுமின்றி தான் கண்டு பரவசமுற்ற காட்சிகளையும் ஆலயவரலாற்றையும் இவர் பாடல்களில் காணக்கூடியதாக உள்ளது. அத்தகைய சிறப்புமிக்க பாடல்கள் இன்று நூல் வடிவில் வெளிவருகின்றது. இதனை அனைவரும் பெற்றுப் பெருமானின் அருளைப்பெறவேண்டும் என்று வேண்டுகிறேன்.

அத்துடன் இப்பணியில் ஈடுபட்டிருக்கும் சிவநேசன் இறையருள் கிடைக்கப்பெற்று பல்லாண்டு பல்லாண்டு காலம் இறைபணி ஆற்றவேண்டும் என்று ஆஞ்சநேயரிடம் வேண்டி எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்**
**ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும்**
**ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**
**மருதனார்மடம், சுன்னாகம்,**
**இலங்கை**

## அருள்வாக்குச் சித்தரும் முருகபக்தருமான பெருமைக்குரிய பிரம்மஸ்ரீ இ.கேதீஸ்வரக்குருக்கள் மனமுவந்தருளிய ஆசியுரை

கம்பன் போற்றும் கவியரசன் மாருதி, மருதனார்மடத்திலே கோயில் கொண்ட 2001 முதல் இன்றுவரை, ஆஞ்சநேயப்பெருமானிடம் பேரன்பு கொண்டு, பெருந்தொண்டனாகி வழிபாடு செய்வதோடு பஜனை வழிபாட்டைச் சிறப்பாகச் செய்து சிறப்பாக ஓதுவராகி அருட்பாடல்களை இயற்றி, பக்தியோடு பாராயணம் செய்து, வருகின்ற அடியவரை, மனங்குளிர வைக்கின்ற, பெருந்தன்மை பொருந்திய, அருளாளர் திரு.வ.சிவநேசனாவார். இவர் இயற்றிய அருட்பாடல்கள் ஆண்டு 2013இல் நடக்கப்போகின்ற கும்பாபிஷேக நினைவு மலராக வெளியிடப்படுகின்றதை அறிந்து, மனம் மகிழ்ந்து, மனமார்ந்த ஆசியை இந்த நூலுக்கும், இவருக்கும், அருளுகின்றேன். எனவே இந்த பக்தி நிறைந்த பாடற்புத்தகத்தை யாபேரும் வேண்டிப் பாடிப் பணிந்து சுந்தர ஆஞ்சநேயருடைய அருளைப் பெறவேண்டும் என்று ஆசீர்வதிக்கிறேன்.

**இங்ஙனம்,**
**இ.கேதீஸ்வரக்குருக்கள.**

# முகவுரை

ராம நாம சங்கீர்த்தனம் ராமா! ராமா!

எல்லாம் வல்ல இறைவனின் நினைவுகளோடு இந்நூலின் முகவுரையை ஆரம்பிக்கின்றேன். இதை ஒரு வரலாறு என்றே கூறலாம். சிறுவயதிலிருந்து இந்த நம்பிக்கை என் மனதில் ஆழமாகப்பதிந்திருந்து. அந்த நம்பிக்கையின் பலனாக புராண இதிகாசக் கதைகளை மிக ஆவலுடன் கேட்டும் படித்தும் வந்தேன் அதன் வளர்ச்சிப்படியில் ஆலயங்களில் புராணங்களைப் படிக்கும் ஆற்றல் ஏற்பட்டது.

அந்த வகையில் கம்பராமாயணத்தை ஆவலுடன் படித்தேன் கம்பனால் சொல்லின் செல்வன் என வர்ணிக்கப்பட்ட அனுமன்மேல் எனக்கு ஒரு பக்தி ஏற்பட்டது. இப்படியே தலைவனாகி எனது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டது. இந்தக் கால கட்டத்தில் 1995ம் ஆண்டு அக்டோபர் மாதம் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையால் அகதிகளாக கொழும்பு சென்றேன். அந்த நாட்களில் றம்பொடை ஆஞ்சநேயர் ஸ்தானம் சம்பந்தமாக செயற்பாடுகள் பல அன்பர்களால் நடந்துவந்தது. அவர்களுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்ட போதும் அதில் எனக்குப் பெரிதாக ஈடுபாடு ஏற்படவில்லை இடம் பெயர்வு வாழ்க்கையின் துன்பம் என் மனதை ஆக்கிரமித்திருந்தது.

நாம் மருதானையில் தங்கியிருந்தோம். தினமும் அருகில் உள்ள கப்பித்தாவத்தை பால செல்வவிநாயகர் ஆலயத்துக்குச் சென்று பாடிப்பணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். இளம்வயதில் இருந்தே சுயமாகப் பஜனைப் பாடல்களைப் பாடும் ஆற்றல் என்னிடத்தில் இருந்தது. கதிர்காமப் பஜனைகளிலும் நல்லூர் செல்லச்சந்நிதி, பஜைனைகளிலும் சேர்ந்து பாடிவந்த அனுபவம் எனக்கு இந்த ஆற்றலை வளர்த்து வந்தது.

இடம் பெயர்ந்து கொழும்பில் வசித்து வந்த நேரத்தில் கப்பித்தவத்தை செல்வபால விநாயகர் ஆலயத்தில் பரிவாரமூர்த்தமாக சிறிய ஆஞ்சநேயரை வைப்பதற்கான குடமுழுக்கு ஆயத்தம்

நடைபெற்றது. அந்நேரத்தில் எங்கள் துன்பநிலைக்கு ஒரு விடிவு போல என்னையறியாமலே ஆஞ்சநேயர்மேல் பொதுப்படையாக பத்து வெண்பாக்களை இயற்றினேன் அத்துடன் ஒரு அகவலும் எழுதினேன். அதை எழுதும் பொழுது அதன் சிறப்பு எனக்குப் புரியவில்லை. ஆஞ்சநேயர் குடமுழுக்கின் போது பாடுவது தான் எனது நோக்கமாக இருந்தது. அப்பாடல்களைக் கோயில் பிரதம குரு சண்முகரட்ணசர்மா குருக்களிடம் காட்டினேன். அவர் அதைப்படித்துப் பார்த்து விட்டு வெண்பாவுக்கு அன்று புகழேந்தி இன்று சிவநேசன் என சிரித்தவாறு சிரித்ததுமட்டுமன்றி கும்பாபிஷேக திகதியில் அவருடைய ஆசியுடன் பாடி அரங்கேற்றினேன். பாடலைக்கேட்ட யூனிஆட்ஸ் நிறுவனத்தினர் பாடலை அச்சுப்படுத்தி அழகிய புத்தகமாக மண்டலாபிஷேகத்தில் வெளியிட்டனர்.

இன் நிகழ்ச்சி எங்களுக்கு ஒரு விடிவெள்ளியானது வெகு சீக்கிரத்தில் ஆஞ்சநேயர் கொழும்பிலிருந்து விடை தந்து யாழ்ப்பாணம் அனுப்பிவைத்தார். அக்கால கட்டத்தில் கொழும்பில் ஆஞ்சநேயர் வழிபாடு தீவிரமாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரியில் தங்கி இருந்த கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மாவைச் சந்தித்தேன். கொழும்பில் ஆஞ்சநேயர் வழிபாட்டின் சிறப்பைப் பற்றியும் எனது ஈடுபாட்டைப்பற்றியும் சொன்னேன். சுந்தரேசக்குருக்கள் ஆஞ்சநேயர் பக்தர் என்றும் அவர் கோவில் ஒன்று கட்ட பொருத்தமான இடம் தேடித் திரிகிறார் என்றும் எனவே உங்கள் எண்ணம் நிறைவேறும் என்றும் அன்போடு சொன்னார்.

ஒரு சில மாதங்களிலே மருதனார்மடத்தில் சிறப்பான இடத்தில் காணி கிடைக்கப்பெற்று நல்ல முகூர்த்தத்தில் அளவையூர் பெருமைக்குரிய வினாசித்தம்பி ஐயாவினால் நிலயம் வகுக்கப்பட்டு மாடிக்கோயில் சிறப்பாக அமைக்கப்பட்டு வந்தது. கட்டிடத்தைப் பார்வையிட அடியேன் செல்வது வழக்கம் கற்பக்கிரக மண்டலத்துடன் இருந்து நான் இயற்றிய பாடல்களைப் பாடுவேன். ஆஞ்சநேயர் கோயில் கட்டுவதற்கு பல எதிர்ப்புக்கள் இருந்தன. எனவே தடங்கலின்றி கோவில் கட்டிமுடிந்து கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும் என்ற நோக்கிலேயே நான் கற்பக்கிரக ஆசாரியாரும் ஆதரித்து என்னை அழைப்புடன் வரவேற்று பாடும் பணிக்கு ஒத்துழைப்புரிவார்.

கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்ற சில ஆண்டுகளில் கோபுரம் கட்டும் பணி ஆரம்பமானது. இப்பணி ஆரம்பமான போது சூரியவணக்கம் பாடவேண்டும் என்ற குருக்கள் ஐயாவின் பணிப்பின் பேரில் பாடல் இயற்றிப்பாடினேன். அத்துடன் கோபுரவேலை தடங்கல் இன்றி குறிக்கப்பட்ட நாளில் குடமுழுக்கு நடைபெற வேண்டும் என வேண்டுதல் செய்து ஆஞ்சநேயரைப் பாடினேன் எவ்வித தடங்களிலின்றி கோபுரம் சிறப்பாக அமைந்தது குடமுழுக்கும் நடந்தது.

சிரஞ்சீவி அன்னதான மடம் ஆரம்பித்த போது ஆரம்பத்திலேயே மாபெருந்தடை ஏற்பட்டது. ஆயினும் மடம் தடங்கலின்றி நடைபெற பாடல் எழுதித்தினம் மன்றாடிப்பாடி வர தடைகள் அகன்று மடமும் சிறப்பாக அமைந்து வருகின்றது.

அடுத்து வீதிசுற்றி வந்து வணங்கக் காணி இல்லையே என்று பாடிவர வடக்கு எல்லையில் அமைந்த காணி கிடைக்கப்பெற்றது காணி வந்தது எழுந்தருளி வேண்டும் என்று பாடிவேண்டி சுவிஸ் அன்பர்களின் பஞ்சமுக ஆஞ்சநேயர் வார்க்கப்பட்டது தொடக்கம் கும்பாபிஷேக தினம் வரையும் படிமுறை வளர்ச்சி சிறப்பாக அமைய வேண்டும் என வேண்டிப்பாடினேன். சுவிஸ் அன்பர்களின் ஆதரவுடன் திரு. அ. பத்மநாதன் அவர்களின் தலைமையில் குடமுழுக்குச்சிறப்பாக நடநடதேறியது.

அடுத்து பஞ்சமுக சுந்தர ஆஞ்சநேயர் தேர் ஏறிவரும் காட்சியை நினைத்து பாடுகிறேன் இவ்வாறு ஆலய வளர்ச்சியை மனதில் நினைந்து அருள் பெருகி எம் இனம் உரிமையோடும் பெருமையோடும் வாழவேண்டும் என்ற சிந்தனையுடன் பாடப்பெற்ற பாடல்களே இவை.

இவற்றை நூல் வடிவில் வெளியிடவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் எனது பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை ஆனால் குருக்கள் ஐயாவின் ஆதரவோடு சுவிஸ் அன்பர் திரு. அ. பத்மநாதன் ஆதரவால் இப்பாடல்கள் நூலாக வர இருக்கின்றது.

ஆஞ்சநேயரது கருணையினால் பாடப்பட்ட இப்பாடல்கள் சிறப்பாக நூல்வடிவில் வெளியிடுவதற்கு முதலில் ஆஞ்சநேயருக்கும், ஆதீனகர்த்தா சுந்தரரேசக்குருக்கள் ஐயாவுக்கும், ஏனைய பிராமண உத்தமர்கட்கும், ஆலயத்துக்குத் தப்பாடல் வருகை தரும் அன்பர்கட்கும் சுவிஸ் அன்பர் திரு. அ. பத்மநாதன் அவர்கட்கும் நூல் அன்பர் வடிவில் ஆக்கித்தந்த "இணுவில் வைரஸ் கிரபிக்ஸ்" நிறுவனத்தினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வயிரமுத்து சிவநேசன்**
**"கமலை", மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம்.**

உ

## கணபதி துணை

ராமஜெயம்

### கணபதி

### காப்பு

அல்லல் வினைதீர்த்து அடியேனை ஆட்கொண்ட
அளவோலைப் பதியமர்ந்த ஐங்கரனே - உன் அன்பன்
பெரும் தவிப்பாய்ச் செய்கின்ற அனுமந்தன் வெளியீட்டை
பெரும் சிறப்பாய் அருள் நிறைவாய் மங்களமாய் நிறைவேற்றிவை.

### அனுமந்தன்
### காப்பு

என்சிந்தை குடிகொண்டு உன் பாடலாக்காணவைத்து
அன்போடு ஓதவைத்த அனுமந்தா - உன் பதிக்கு
தவிப்போடு வருமடியார் மனமுருக ஓதுதற்கு
என்பாடல் அத்தனையும் சிறப்பான நூலாக வெளியிட்டுவை.

அளவையூர் சஞ்சீவி ஐயா அவர்களின் அருட்பெரும் பாடல்
சிந்தனைக் கரியோனாகி சிவனுருத்தாங்கி
ராமமந்திர மூர்த்தியாகி, வருமடியார்க்கு எல்லாம்
பந்தனை நீக்கி வேண்டும் பலனெலாம் கொடுக்கும்
செல்வ சுந்தர ஆஞ்சநேய சுவாமியே போற்றி போற்றி.

### கப்பித்தாவத்தை ஆஞ்சநேயப் பெருமானின் கும்பாபிஷேக நாளிலே (23.11.1997ல்) மனமுருகிப்பாடிய பாடல்.

### வெண்பா

01. அஞ்சனையின் சுதனாகி அன்புருவே வடிவாகி
ஆண்மைக்கோர் சிங்கமாய் வடிவு கொண்ட - அனுமன்
அடிமலரில் சரண்புகுந்து அன்பாய்ப்பணிந்திடுவேன்
திருநிறைந்த பெருவாழ்வருள்.

02. வாயு சுதனாகி வானரனாய் அவதரித்து
இராமனையே தெய்வமெனத் தினமிறைஞ்சி நாவின்றி
இராமனது திருநாமம் செபமாய்ச் சொல்லிநிற்கும்
தூயவனே எங்களையும் வாழவை.

03. சிரசினிலே முடிசூடி கரத்தினிலே கதமேந்தி
இதயத்தில் இராமனையே இருப்பாக்கி - விருப்போடு
சஞ்சீவிமலை டீந்தி ரகுகுலம் காத்தவனே
எங்களை நீ என்றென்றும் கார்.

04. ஆனந்த அருட்கேலம் அனுமந்தத் திருக்கோலம்
அடியவருள் தலைசிறந்த தவக்கோலம் கண்டு
வினை அகன்று பிணி தீரவிரும்பி வரம் தந்து
அருள் நிறைந்த அருட்காட்சி அருள்.

05. உள்ளத்தில் இராமனையே நினைத்து மனமுழுகி
இதயத்தில் இராமனையே உறைய வைத்து - பெருவிருப்பாய்
இராமனுக்கே பெருந்தொண்டு தவிப்பாய்ச் செய்தவனே
எங்களுக்கும் பெரும் பக்தித் தவிப்பதனைத் தா.

06. பத்துத் தலை கொண்ட வஞ்சக இராவணன் செய்
வஞ்சனைகள் அத்தனையும் தீர்ப்பதற்கு - இராமனுக்கு
அரிய பெருந்துணையாய் அருகிருந்து அருள் செய்த
அனுமந்தா எமக்கென்றும் அருள்.

07. சொல்லில் அடங்காத தூய பேருள்ளத்
காண்பவர்கள் மனமுழுக்கும் அருட்தோற்றம் - இராமன்முன்
பணிவான அன்படக்கம் கொண்டவனே
எங்களுக்கும் பணிவடக்கப் பழக்கம் தா.

08. நாமத்தின் மகிமை தனை நாநில மறிய வைத்தாய்
நாமத்தைச் சொல்லியே கடல் கடந்தாய் - இராவணன் முன்
பெருவலியைக் காட்டிப்பேருருவம் கொண்டு நின்று
தீமையறத் தீயிட்ட பெருமானே திருவருளை அருள்.

09. அன்பான பணிவடக்கம் ஆண்மை மிகு பெருந்தோற்றம்
நாமத்தை நல்விருப்பாய் உச்சரிக்கும் பெருந்தன்மை - அத்தனைக்கும்
உறைவிடமாய் வாழ்ந்த உத்தமனே என்றென்றும்
உன்போன்ற பெரும் பக்தி அருள்.

10. தூயவனே பெரியவனே இராமபெரும் தூதுவனே
துதியாக உன் புகளைச் சொல்லி நின்றேன் - நீ விரும்பி
நாட்டினிலே அமைதி தந்து நரல்வாழ்வு எமக்கருளி
அருள் நிறைந்த பெருவாழ்வு அருள்.

❁❁❁❁❁❁

## அனுமந்தன் பஜனாஞ்சலி

| | |
|---|---|
| தலைசிறந்த பக்தனே | எங்கள் அனுமானே |
| தாழிணையில் பணிந்து நின்றோம் | எங்கள் அனுமானே |
| துதிபாட நாடிவந்தோம் | எங்கள் அனுமானே |
| தூய்மையான உள்ளம் தந்து | எங்கள் அனுமானே |
| மனமுருகிப் பாடவைப்பாய் | எங்கள் அனுமானே |
| ராம தாசன் ஆனவனே | எங்கள் அனுமானே |
| ராம நாமப் பிரியனே | எங்கள் அனுமானே |
| இராம நாமம் சொல்லி ஐயா | எங்கள் அனுமானே |
| கடல் நாமம் சொல்லி ஐயா | எங்கள் அனுமானே |
| வாயு சுதன் ஆனவனே | எங்கள் அனுமானே |
| வாழும் வழி காட்டி நிற்பாய் | எங்கள் அனுமானே |
| அஞ்சனையின் சுதனானாய் | எங்கள் அனுமானே |
| அஞ்சவென்று அபயம் தரும் | எங்கள் அனுமானே |
| வஞ்சகக் கொடியோரை | எங்கள் அனுமானே |
| வதம் செய்யவேண்டுமையா | எங்கள் அனுமானே |
| தஞ்சமென்று சரண்புகுந்தோம் | எங்கள் அனுமானே |
| அஞ்சலென்று ஆண்டருள்வாய் | எங்கள் அனுமானே |
| முடிசூடிக் கதமேந்தி | எங்கள் அனுமானே |
| முன்னான வாருமையா | எங்கள் அனுமானே |

இரவு பகல் சிந்தையிலே	எங்கள் அனுமானே
ராம நாமம் ஓதிடுவீர்	எங்கள் அனுமானே
ராம நாமம் சொல்வாரோடு	எங்கள் அனுமானே
கூடவே நீ இருப்பாய்	எங்கள் அனுமானே
எமை மறந்து ராம நாமம்	எங்கள் அனுமானே
எங்களை நீ சொல்ல வைப்பாய்	எங்கள் அனுமானே
கிட்கிந்தை வாசனே	எங்கள் அனுமானே
கிருபை செய்ய வேண்டுமையா	எங்கள் அனுமானே
தங்களைப்போல் பக்தி செய்ய	எங்கள் அனுமானே
தயை கூர்ந்து அருளுமையா	எங்கள் அனுமானே
வல்லக்கன் இராவணன் முன்	எங்கள் அனுமானே
கோபமுற்று நின்று ஐயா	எங்கள் அனுமானே
விஸ்வரூபம் கொண்டவனே	எங்கள் அனுமானே
விஸ்வரூபக் காட்சிகாண	எங்கள் அனுமானே
கொடுத்துவைக்க வேண்டுமையா	எங்கள் அனுமானே
பாடிப்பணியும் அன்பர் முன்	எங்கள் அனுமானே
விஸ்வரூபம் காட்டி நிற்பாய்	எங்கள் அனுமானே
தொல்லை நிறைந்த உலகினிலே	எங்கள் அனுமானே
அல்லல் வினை தீருமையா	எங்கள் அனுமானே
இராமாயணப் போரினிலே	எங்கள் அனுமானே
இராக்ககதரை வதம் செய்தீர்	எங்கள் அனுமானே
அசோக வனம் தன்னை	எங்கள் அனுமானே
ஆட்டிப் படைத்தவனே	எங்கள் அனுமானே
தலை சிறந்த பிரம்பசாரி	எங்கள் அனுமானே
தங்களைப் போல் யாரும் இல்லை	எங்கள் அனுமானே
பக்தருள் தலை சிறந்த	எங்கள் அனுமானே
தங்களைப் போல் பக்தரில்லை	எங்கள் அனுமானே
அடக்கம் ஒடுக்கம் அன்பு பண்பு	எங்கள் அனுமானே
அத்தனைக்கும் உறைவிடம் நீ	எங்கள் அனுமானே
சிரஞ்சீவி ஆனவனே	எங்கள் அனுமானே
வரம் தந்து ஆளுமையா	எங்கள் அனுமானே
சஞ்சீவி கொண்டு வந்து	எங்கள் அனுமானே
ரகுகுலம் காத்தவனே	எங்கள் அனுமானே

நுளையாத இடமெல்லாம் எங்கள் அனுமானே
நுளைந்து வரும் பெருமானே எங்கள் அனுமானே
பாடிப் பாடி நாம் மகிழ எங்கள் அனுமானே
ஆடி ஆடி நீ வருவாய் எங்கள் அனுமானே
பக்தி பெருக அருளுமையா எங்கள் அனுமானே
பக்தனாக வாழவைப்பாய் எங்கள் அனுமானே
ஐம்புலனை அடக்க வைப்பாய் எங்கள் அனுமானே
ஆசையை ஒழித்திடுவாய் எங்கள் அனுமானே
தொண்டு செய்து வாழவைப்பாய் எங்கள் அனுமானே
தோத்திரங்கள் சொல்ல வைப்பாய் எங்கள் அனுமானே
நெஞ்சம் என்றும் சிறக்க வைப்பாய் எங்கள் அனுமானே
நேர்மைத்தீர தருவாய் நீ எங்கள் அனுமானே
அழுக்காறு அறுத்திடுவாய் எங்கள் அனுமானே
நல்லவர்கள் இணக்கம் தந்து எங்கள் அனுமானே
நாளும் பாடி மகிழவைப்பாய் எங்கள் அனுமானே
எத்தொழிலைச் செய்தாலும் எங்கள் அனுமானே
தங்கள் நினைவு மாறாமல் எங்கள் அனுமானே
இருக்க வரம் தாருமையா எங்கள் அனுமானே
தொண்டனாக வாழவைப்பாய் எங்கள் அனுமானே
அன்பனாக வாழவைப்பாய் எங்கள் அனுமானே
மறந்தும் பிறன் கேடு ஐயா எங்கள் அனுமானே
மனத்தாலும் எண்ணாமல் எங்கள் அனுமானே
எங்களை நீ மிஞ்சிவாழ எங்கள் அனுமானே
வல்லமைகள் தாருமையா எங்கள் அனுமானே
நினைத்த வேளை எங்கள் முன் எங்கள் அனுமானே
அன்பு கொண்டு வரவேண்டும் எங்கள் அனுமானே
அன்பு அறிவு பணிவு அடக்கம் எங்கள் அனுமானே
ஆபரணமாக வேண்டும் எங்கள் அனுமானே
மூவாசை ஒழிய வேண்டும் எங்கள் அனுமானே
மும்மலங்கள் அழிய வேண்டும் எங்கள் அனுமானே
இருவினையில் ஒப்பு வேண்டும் எங்கள் அனுமானே
இறை அடியைக் காண வேண்டும் எங்கள் அனுமானே
மான சீக பூசை செய்து எங்கள் அனுமானே

மனதினிலே தொழுதவேளை எங்கள் அனுமானே
ஞான ஜோதி தெரிய வேண்டும் எங்கள் அனுமானே
எடுத்த கருமம் ஈடேறி எங்கள் அனுமானே
என்றும் வெற்றி எமக்கருள்வாய் எங்கள் அனுமானே
அன்பர் கூட்டம் சேர்ந்து ஐயா எங்கள் அனுமானே
அன்பாக இராம ஜெயம் எங்கள் அனுமானே
என்றென்றும் சொல்ல வைப்பாய் எங்கள் அனுமானே
இராம ஜெயம் சொல்லச்சொல்ல எங்கள் அனுமானே
இரட்சிக்க நீ வருவாய் எங்கள் அனுமானே
கல்வி வளரவேண்டுமையா எங்கள் அனுமானே
கலைகள் சிறக்க வேண்டுமையா எங்கள் அனுமானே
ஒழுக்கம் சிறக்க வேண்டுமையா எங்கள் அனுமானே
உண்மை விளங்க வேண்டுமையா எங்கள் அனுமானே
நீதி விளங்க வேண்டுமையா எங்கள் அனுமானே
பக்தி வளர வேண்டுமையா எங்கள் அனுமானே
பகடம் ஒழிய வேண்டுமையா எங்கள் அனுமானே
முத்தித் தரை சேர வேண்டும் எங்கள் அனுமானே
முழுமையாய வாழ்வு வேண்டும் எங்கள் அனுமானே
நீதியான அரசு வேண்டும் எங்கள் அனுமானே
நீதியான மன்னனாக எங்கள் அனுமானே
வந்து வாழ்வு தாருமையா எங்கள் அனுமானே
இன்பமே சூழ்ந்திடவும் எங்கள் அனுமானே
வந்து வாழ்வு தாருமையா எங்கள் அனுமானே
மங்களங்கள் பொங்க வைத்து எங்கள் அனுமானே
மக்கள் மனம் குளிர வைப்பாய் எங்கள் அனுமானே
சரணம் சரணமையா எங்கள் அனுமானே
திருவடியில் சரணமையா எங்கள் அனுமானே

இராம ஜெயம்
சுபம்
ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா.

❁❁❁❁❁❁

# ஸ்ரீ ஆஞ்சநேயர் அர்ச்சனை நாமங்கள் 108

| | | |
|---|---|---|
| ஓம் | கவிகுல திலகனே | நமக |
| ஓம் | கிட்கிந்த வாசனே | நமக |
| ஓம் | கிரீடதாரியே | நமக |
| ஓம் | கதாயுத வீரனே | நமக |
| ஓம் | கருணா நிதியே | நமக |
| ஓம் | கற்பக சுந்தரனே | நமக |
| ஓம் | ஞான சொரூபியே | நமக |
| ஓம் | ஞானக் கனலே | நமக |
| ஓம் | நாரண மோகனாய | நமக |
| ஓம் | நாம சங்கீர்த்தனாய | நமக |
| ஓம் | பஜனா வாரிதியே | நமக |
| ஓம் | பஜனப் பிரியாய | நமக |
| ஓம் | பஜன மோகனாய | நமக |
| ஓம் | புஜபல பராக்கிரமாய | நமக |
| ஓம் | வாயு சதூாய | நமக |
| ஓம் | லீம சோதராய | நமக |
| ஓம் | விஸ்வ ரூபாய | நமக |
| ஓம் | வீர அனுமானே | நமக |
| ஓம் | வீரப்பிரதாபாய | நமக |
| ஓம் | காம நாசாய | நமக |
| ஓம் | பக்த சொரூபாய | நமக |
| ஓம் | தவ சிரேஷ்டாய | நமக |
| ஓம் | கிரகதோஷநிவாரணியே | நமக |
| ஓம் | கீதப்பிரியாய | நமக |
| ஓம் | சதாநாமப் பிரியாய | நமக |
| ஓம் | சர்வலோக சஞ்சாரியே | நமக |
| ஓம் | சத்துரு சங்காராய | நமக |
| ஓம் | அஞ்சனை பாலனே | நமக |
| ஓம் | அஞ்சாநெஞ்சவீரனே | நமக |
| ஓம் | தொண்டின் சிகரமே | நமக |
| ஓம் | தோத்திர மர்த்தியே | நமக |
| ஓம் | சாத்திர வல்லபாய | நமக |
| ஓம் | சீதா ராமப் பிரியாய | நமக |
| ஓம் | சிவப்பிரகாசாய | நமக |
| ஓம் | சுத்த போஜனாய | நமக |

ஓம் சுந்தரமார்பனே நமக
ஓம் சுகானந்த வாரிதியே நமக
ஓம் சங்கட சங்கரனே நமக
ஓம் ஜெமங்கள வீரனே நமக
ஓம் சுபமங்கள வீரனே நமக
ஓம் கலியுக கர்த்தனே நமக
ஓம் கண்ணிறை ஜோதியே நமக
ஓம் திருநிறை மார்பனே நமக
ஓம் திருவருட் ஜோதியே நமக
ஓம் வச்சிரகாயனே நமக
ஓம் வரமருள் வள்ளலே நமக
ஓம் வாமன தாசனே நமக
ஓம் வானரத்திருவே நமக
ஓம் வாழ்முதல் பொருளே நமக
ஓம் வாயு சுதனே நமக
ஓம் தாளப் பிரியாய நமக
ஓம் தவப் பிரகாசனே நமக
ஓம் தரும சொரூபனே நமக
ஓம் தரித்திர நாசனே நமக
ஓம் தாமரை இதயனே நமக
ஓம் சதாராம சித்தனே நமக
ஓம் மகா அனுபவனே நமக
ஓம் மலர்மாலை மார்பனே நமக
ஓம் மாமணி விளக்கே நமக
ஓம் மாதவச் சுடரே நமக
ஓம் மாமலை விளக்கே நமக
ஓம் ரோக நிவாரணியே நமக
ஓம் போக ஐஸ்வரியாய நமக
ஓம் போக அனுட்டானனே நமக
ஓம் யோக ஆசனாய நமக
ஓம் யோகானத்த சித்தனே நமக
ஓம் கார்க் கோட வல்லபனே நமக
ஓம் கார்வண்ணன் தாசனே நமக
ஓம் காருண்யசீலனே நமக
ஓம் பிரம்மச் சாரியனே நமக
ஓம் பக்த சிகரமே நமக
ஓம் வீர திலகனனே நமக
ஓம் தொண்டர் திலகனே நமக

ஓம் தோத்திர மோகனே நமக
ஓம் தோன்றாத் துணையே நமக
ஓம் பாவ நாசனே நமக
ஓம் பரம தயாளனே நமக
ஓம் பாவ விமோசனாய நமக
ஓம் பஞ்சபூத வல்லவனே நமக
ஓம் மணிகுஞ்சவாலனே நமக
ஓம் மாருதி நாமனே நமக
ஓம் மாஜா ஜால வல்லவனே நமக
ஓம் மாமணிக் கிரீட தாரியே நமக
ஓம் வாயு லேகனே நமக
ஓம் வாயுப் பிரியனே நமக
ஓம் வனவாசப் பிரியனே நமக
ஓம் தவராஜ மைந்தனே நமக
ஓம் அட்ட ஐஸ்வரியாய நமக
ஓம் அனுக்கிரக சீலனே நமக
ஓம் அகங்கார நாசனே நமக
ஓம் அன்பர்கள் நேசனே நமக
ஓம் அசுரர் குல நாசனே நமக
ஓம் அன்பரக வாசனே நமக
ஓம் துளசிப் பிரியனே நமக
ஓம் வெற்றிலை மாலையனே நமக
ஓம் வடை மாலைப்பிரியனே நமக
ஓம் வாழைக்கனிப்பிரியகே நமக
ஓம் பஞ்சாமிர்தப் பிரியனே நமக
ஓம் பாயாப்பிரியனே நமக
ஓம் கமல பாதனே நமக
ஓம் கர்ப்பூரப் பிரியனே நமக

நானா வித புஸ்ப அஞ்சலி
சமர்ப்பணமே.
ராம ஜெயம்
ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா.

❁❁❁❁❁❁

# மருதர் பெரும்பதி சுந்தர ஆஞ்சநேயர் பள்ளி எழுந்தருளி

01. அஞ்சனை சுதனாம் அருந்தவக் குமரனே
வைகறை ஆனது வழிபட வந்தோம்
அன்று நீ கனியென அருந்திய கதிரவன்
கீழ்த்திசை எழுந்து கீற்றொளி தந்தனன்
கதிரவன் வரவால் வாயில் முன் தடத்தில்
செம்மலர்க் கமலங்கள் சேற்றிலே மலர்ந்தன
இந்த நல்வேளையில் இன்னமுதே நீ
அன்புடன் அருட்பள்ளி எழுந்தருளாயே.

02. கதிரவன் எழுந்தனன் காரிருள் அகன்றது
பூம் பொழில் தோறும் பூக்களும் மலர்ந்தன
மலர்ந்த நற்பூக்களில் தேனுண்ணும் வண்டும்
ரீங்காரம் செய்து மதுவுண்டு மகிழ்ந்தன
ரீங்கார நாதம் இராமனின் நாமமாய்
ஓங்கார ஒலி செய்து எங்கனும் நிறைந்தன
ஈங்கிருந்த வேளையில் எங்களுக்கருள் தர
மாருதியே பள்ளி எழுந்தருளாயே.

03. கீழ்த்திசை வானத்தில் அருட்பெருங்கோலங்கள்
அன்பர்கள் உள்ளத்தை நெய்யென உருக்கின
உருகிய அன்பர்கள் பெருவிருப்புடனே
அருட்பள்ளித் தாமங்கள் கொண்டிங்கு வந்தனர்
இராமனின் நாமத்தை நாம் சொல்லி வணங்கினால்
நாமத்தில் விருப்புள்ளநம்பெரு முதல்வனார்
கண்ணது மலர்ந்து எழுந்திடுவானென்போர்க்கு
அருள்தரப் பள்ளி எழுந்தருனாயே.

04. வைகறை ஆனது வானமும் வெழுத்தது
வையகமுய்ந்திடச் சங்கங்கள் ஒலித்தன
சங்கத்தின் ஒலியொடு ஆலயமுன்றலின்
அருள்மணி ஓசையும் சேர்ந்தங் கொலித்தன
சேர்ந்த நல் ஓசை செவிகளில் நுழைந்திட
நுழைந்த நல் ஓசையால் உளமது உருகி
அருட்பள்ளி தரிசிக்க அன்பர்கள் நிறைந்தனர்
இந்தநல் வேளையில் பள்ளி எழுந்தருளாயே.

05. தொண்டனே சுந்தர அனுமனே உன்தன்
வழி வழித் தொண்டர்கள் வழிபடவந்தனர்
வந்தவர் அனைவரும் தங்களின் பணிகளை
விருப்புடன் செய்து பெரும்புகழ் பெற்றனர்
தூகினர் மெழுகினர் தூநர் தெளித்தனர்
மலர்களைப் பறித்து மாலையும் தொடுத்தனர்
பாவலர் பாடிட பக்தர்கள் ஆடிட
அருள்தரப் பள்ளி எழுந்தருளாயே.

06. முசுகுந்தன் போன்ற மாதவக் குருக்களும்
வைகறை எழுந்து வருகையும் தந்தார்
வந்தவர் உடனே மணி தனை அடித்து
மணியதனோசை இராமனின் நாமமாய்
நாற்திசைகளிலும் பரந்து போய்ச்சேர
இல்லங்கள் தோறும் இருந்தவரெல்லாம்
கோவிந்தா கோவிந்தா கோவிந்தா என்ன
இந்த நல்வேளையில் பள்ளி எழுந்தருளாயே.

07. அருட்பள்ளித் தரிசனம் கண்டிட அனைவரும்
அன்புடன் திருக்கோயில் வந்துடன் நேர்ந்தனர்
அன்பர்கள் எல்லாம் ஒன்றெனச் சேர்ந்து
பாடினர் அருட்பள்ளி எழுச்சி
குருக்களும் மகிழ்ந்து கதவினைத் திறந்து
ஆவின் பாலினை அமுதென வைத்து
அருட்பள்ளித் தரிசனம் தந்திடுவாயே.

08. கண்டனம் தரிசனம் சுந்தர அனுமனே
விண்டனம் கவலையை உள்ளமும் மலர்ந்தன
கதிரவன் போல நீ கண்மலர்ந்ததினால்
இதயமும் மலர்ந்தன இன்பமுடைந்தோம்
எங்களின் நிலமையை நன்கு நீ அறிவாய்
அறிந்தமையால் எங்கள் குறைகளை போக்கி
நிரந்தர அமைதி பாரினில் தோன்றிட
சுந்தரனாய்ப் பள்ளி எழுந்தருளாயே.

09. ஆலயச் சூழலில் அருளொளி பெருகிட
கதிரவன் கதிரொளி எங்கனும் நிறைந்திட
அன்பர்கள் உள்ளம் மகிழ்வுடன் மலர்ந்திட
அனைவரும் சேர்ந்து தங்களை மறந்து
சுந்தர இராமனின் கீதங்கள் இசைத்திட
கீதத்தின் நாதத்தில் அனைவரும் மூழ்கி
அகத்திலே அருளொளி கண்டு மகிழ்ந்தனர்
சுந்தர அனுமனே பள்ளி எழுந்தருளாயே.

10. சுந்தர அனுமனை வழிபாடு செய்யாது
போக்கியே நின்றோம் அவமானபொழுது
தவறினை உணர்ந்தோம் தனித்தினி நில்வோம்
தப்பாமல் புனித வைகறை எழுவோம்
அருட்பள்ளிப் பாடல்கள் காதிலே விழுந்ததும்
ஆவலாய் நின்பதி ஓடோடி வந்து
தொண்டுகள் செய்து தோத்திரம் சொல்லி
மகிழ்ந்திடவே நீ பள்ளி எழுந்தருளாயே.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா.

❁❁❁❁❁❁

## தலப்பெருமை வெண்பா

பஞ்ச பூதத்துள் பலம் மிகுந்த வாயு அவன்
விரும்பித் தவழ்ந்து நடமாடும் - பெருவெளியாம்
மருதனார் மடம் தன்னில் அனுமந்தன் கோயில்
அமைந்த செயல் தெய்வீகமாமென்றறி.

## ஆஞ்சநேயர் கோயில் மருதனார் மடத்தில் அமையக் காரணமாம் பெருமை.

01. மாண்புமிகு தெய்வீக மருதனார் மடந்தனிலே
பல்லப்பை வைரவனார் திருவருளாய் - பெருவீர
மனம் விரும்பிக்குடியமர விருப்போடு எழுந்த இடம்
பூர்வீக புண்ணிய தலமென்றறி.

02. தெய்வீகப் பெருவெளியில் சிரஞ்சீவி அனுமந்தன்
விருப்போடு குடியமர வந்தயெல் - எம் குருவா
சுந்தர ஈஸ்வரனின் பூசைப்பெரும்பலமும்
அன்பர்கள் ஆதரவு மென்றே அறி.

03. கனகசபை நிகர்தத் பெருமை பெறும் கலைக்கோயில்
சீராகச் சிறப்புருவம் பெறுவதற்கு - காலான
அன்பர்களின் அற்பணித்த பெரும் செயற்கு
அனுமந்தன் அருட்சக்தி என்றே அறி.

04. கலைச்சிறப்புக் கொண்ட அருட்கோயில் இங்கே
அமைவதற்கு காலான அன்பர்கள் - இப்புவியில்
பதினாறு பேறும் பக்குவமாய்ப் பெற்று
இன்பமுற வாழ்வர் இது திண்ண மென்றறி.

05. மருதனார் மடத்தினிலே மாண்பு மிகு கலைக்கோயில்
பக்குவமாய் உனக்கிங்கு ஆக்கிவைத்தோம் - மனம் விரும்பி
ஆதி மூலத்தில் அருளொளியாய் நீ இருந்து
அனைவர்க்கம் அருளின்பவாழ்வருள்.

06. செந்தமிழ் மக்களெல்லாம் சேம நலமிழந்து
துன்பப்புயற் துரும்பாய் அலைகின்றோம் - அனுமந்தா
எங்கள் நிலைக்கிரங்கி எங்கள் துயர் துடைத்து
அருள் இன்ப வாழ்வு அருள்.

07. ஆர் ஓலம் என்றாலும் அபயம் கொடுத்தாளும்
பேரன்பு கொண்ட பெரியோனே - நீ இன்று
காரென்று பாதம் கதியாகும் அன்பர்கட்கு
பேரின்பப் பெருவாழ்வருள்.

08. நினைப்பதற்கும் முடியாத பெருவசதி பர சேர
அனைத்தன்பர் மனமுருக்கும் அருட்கோயில் - அமைந்த செயல்
வலிகாம மக்கள் முன் செய்த புண்ணியமோ
அன்றிப் பூர்வீகத் தலப் பெருமையாமோ சொல்.

09. மாடிக் கோயிலிலே மகிழ்வோடு நீ இருக்க
மணிக்கதவம் நீக்கி அருட்பள்ளி எழுச்சிசொல - மலர்ந்து கண்
கதிரவன் போல் நீ எழுந்து அருட்பெரும் காட்சிதர
எம் இதையம் என்றையாமலர்வது நீ சொல்.

10. கற்பக் கிரகத்தில் கற்பனைக் கெட்டாத
அற்புதனாய் அமர்ந்து அருவிளங் - சுந்தரரும்
பெருவிருப்பாய் அருள்நிறைந்த பூசை வைக்க
திண்ணமென அருள்புரிவாய் தினம் தினம் நீ.

11. உள் பதிக்கு வருவோர்கள் தூய்மை உளம் சேர
தாகமொடு தவிப்பாய் புகழ்பாடி - தமை மறந்து
தங்கள் பேருருவம் கண்டு கை யெடுக்க
மனம் நிறைந்த பெருவாழ்வு அருளையா நீ.

❁❁❁❁❁❁

# ஆஞ்சநேயரின் அருட்பெருமை

01. ஆஞ்சநேய நாமங்கொண்ட அன்புத் தெய்வமே
ஆலகாலன் அணைத்து மகிழும் பண்புத் தெய்வமே
மூலநாளில் வந்துதித்த முழுமைத் தெய்வமே
கால முழுதும் காவல்காத்த அருளும் தெய்வமே.

02. பக்தி ஒன்றே நோக்கமாக வாழும் தெய்வமே
பண்பு பேணி அன்புகொண்டு அருளும் தெய்வமே
கலிபுருசர் கலக்க மெய்த் தோன்றும் தெய்வமே
கிலிபிடித்துக் கலிகலங்க அருளும் செல்வமே.

03. இறைவன் நாமம் சொல்லிச் சொல்லிட இன்பங்கொள்ளும் தெய்வமே
இதயக் கோயில் இராமனுக்காய் கொடுத்து வைத்த தெய்வமே
வீரனாயும் தாசனாயும் விண்ணயர்ந்த தெய்வமே
காண்பர்கள் மனமுருக்கம் ராமநேயச் செய்வனே.

04. துளசி தாசர் உலகில் வாழ காவல் நின்ற தெய்வமே
துளசிபுகழ் உலகில் பரவகாலாய் நின்ற செல்வனே
கலிகலங்க கதை விடுத்து கருணை செய்த தெய்வமே
வணங்குவோர்க்கு வாழ்வுதரும் ஆஞ்சநேயச் செல்வனே.

❁❁❁❁❁❁

# சுகநலம் காப்பவன்

01. சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக்க சேவிக்க நலம் தருவான்
அந்தமும் ஆதியும் கடந்து நின்று
அன்பரைக் காத்திட முன்வருவான்.

02. சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக்க சேவிக்க நலம் தருவான்
இரகுகுலம் காத்திட்ட பெருவீரன்
இராமனுக்கினிய பெருந்தொண்டன்
கல்நகிடும் கலியுக மக்களுக்கு
கலங்கரை விளக்காய் வந்துதித்தான்.

03. சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக்க சேவிக்க நலம் தருவான்
கலங்கரை விளக்காம் அனுமானை
அனுதினம் பாடி நாம் பணிந்தால்
அட்டமாசித்தி கை கூடும்
அல்லல் வினைகளும் பறந்தோடும்.

04. சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக்க சேவிக்க நலம் தருவான்
தீயதைப் பாரினில் அழிப்பதற்கும்
திருநிறை பக்தியை வளர்ப்பதற்கும்
கலியுகம் தன்னில் தனித்தெய்வம்
சுந்தர அனுமான் அவன் தானே.

05. சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக்க சேவிக்க நலம் தருவான்
சனிதோறும் அனுமானைப் பணிந்து நின்றால்
சனியெனும் ஈஸ்வரன் அவன் தானும்
அன்புடன் அவனுக்கு ஆட்பட்டு
அன்பான வாழ்வு நலம் தருவான்.

06. சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக்க சேவிக்க நலம் தருவான்
பக்தியை வளர்த்திட ராம ஜெயம்
பாரினில் கைகண்ட அருமருந்து
அருமருந்தானதை நீ அருந்தி
அவலப் பிறப்பினை அறுத்திடுவாய்
சுந்தர அனுமான் சுகம் தருவான்
சேவிக்க சேவிக்க நலம் தருவான்.

❀❀❀❀❀❀

# மூலநாளில் பாடிய பஜனாஞ்சலி
# 05.11.2009

| | |
|---|---|
| அன்புமனக் கோயிலிலே | எங்கள் அனுமானே |
| ஆனந்த நடம் செய்யும் | எங்கள் அனுமானே |
| இரும்புமனம் இளகிடவே | எங்கள் அனுமானே |
| ஈசானாக வடிவு கொண்டாய் | எங்கள் அனுமானே |
| உருத்திர அவதாரம் | எங்கள் அனுமானே |
| உலகெலாம் கோயில் கொண்டு | எங்கள் அனுமானே |
| பாருவகைக் காத்திடைய | எங்கள் அனுமானே |
| அசுரகுலம் அழிந்தொழிய | எங்கள் அனுமானே |
| அவதரித்த பெருமானே | எங்கள் அனுமானே |
| கடவுளொருவர் உண்டென்றும் | எங்கள் அனுமானே |
| இராமனே அவனென்றும் | எங்கள் அனுமானே |
| அசையாத அன்பு கொண்டாய் | எங்கள் அனுமானே |
| அன்பு கொண்டு ராம நாமம் | எங்கள் அனுமானே |
| அனுதினமும் சொல்லி நின்றாய் | எங்கள் அனுமானே |
| அன்பு கொண்ட ராம நாமம் | எங்கள் அனுமானே |
| அனுதினமும் சொல்லி நின்றாய் | எங்கள் அனுமானே |
| இராம நாமம் சொல்லிச் சொல்லி | எங்கள் அனுமானே |
| தாங்கள் செய்த அற்புதங்கள் | எங்கள் அனுமானே |
| சொல்லி செய்த அற்புதங்கள் | எங்கள் அனுமானே |
| சொல்லில் அடங்காது | எங்கள் அனுமானே |
| இராமர் கூட அணையின் மூலம் | எங்கள் அனுமானே |
| கடல் கடந்து இலங்கை வந்தார் | எங்கள் அனுமானே |
| தாங்களோ நாமஞ் சொல்லி | எங்கள் அனுமானே |
| அற்புதமாய்க் கடல் கடந்தீர் | எங்கள் அனுமானே |
| சதா நாமப் பிரியனே | எங்கள் அனுமானே |
| சதா சிவனுக்கு உகந்தவனே | எங்கள் அனுமானே |
| அன்பு பண்பு அறிவு ஆற்றல் | எங்கள் அனுமானே |
| அத்தனைக்கும் உறை விடம் நீ | எங்கள் அனுமானே |
| தலை சிறந்த வீரனே | எங்கள் அனுமானே |
| அருள்மிகுந்த பக்தனே | எங்கள் அனுமானே |
| தொண்டருள் தலை சிறந்தாய் | எங்கள் அனுமானே |
| தோத்திரிக்க முன் வருவாய் | எங்கள் அனுமானே |
| தீயதை அழித்தொழிக்க | எங்கள் அனுமானே |

தூய அருட்சிலையாகி எங்கள் அனுமானே
மருதனார் மடக்கோயில் எங்கள் அனுமானே
குடியாக அமர்ந்தவனே எங்கள் அனுமானே
வாயு தேவன் ஆட்சிசெய்ய எங்கள் அனுமானே
மருதனார்மடவெளியில் எங்கள் அனுமானே
குடியமர்ந்து கோயில் கொண்டாய் எங்கள் அனுமானே
பெருவெளியில் அமர்ந்த செயல் எங்கள் அனுமானே
சாலவும் பொருத்தமையா எங்கள் அனுமானே
பெருவெளியில் குடியமர்ந்து எங்கள் அனுமானே
பேரருளைப் புரிந்திடையா எங்கள் அனுமானே
அன்பான கலைக் கோயில் எங்கள் அனுமானே
அற்புதமாய் அமையவைத்தாய் எங்கள் அனுமானே
தூற்றினோரும் போற்றும்படி எங்கள் அனுமானே
திருவருள் பாய வேண்டும் எங்கள் அனுமானே
பெருநெருப்பாய் நீயிருந்து எங்கள் அனுமானே
தீயதெல்லாம் நி யழிப்பாய் எங்கள் அனுமானே
விஸ்வரூபம் கொண்டு ஐயா எங்கள் அனுமானே
மாடிக்கோயில் மேலே நின்று எங்கள் அனுமானே
அன்புநிறை மக்களை நீ எங்கள் அனுமானே
பாதுகாத்து அருளுமையா எங்கள் அனுமானே
வருகின்ற அடியவர்கள் எங்கள் அனுமானே
நாமஞ் சொல்லி வணங் வைப்பாய் எங்கள் அனுமானே
எண்ணுவது உயர்வாக எங்கள் அனுமானே
என்றென்றும் எண்ண வைப்பாய் எங்கள் அனுமானே
ஐம்புலனை அடங்க வைப்பாய் எங்கள் அனுமானே
ஆணவத்தை ஒழித்திடையா எங்கள் அனுமானே
மலபரி பாகம் தந்து எங்கள் அனுமானே
மலரடியைப் போற்றவைப்பாய் எங்கள் அனுமானே
தொண்டனாக வாழ வைப்பாய் எங்கள் அனுமானே
தோத்திரங்கள் பாட வைப்பாய் எங்கள் அனுமானே
பக்தனாக வாழ வைப்பாய் எங்கள் அனுமானே
பணி செய்து வாழ வைப்பாய் எங்கள் அனுமானே
உள்ள தெல்லாம் உணரவைத்து எங்கள் அனுமானே
உண்மை வழி நடக்கவைப்பாய் எங்கள் அனுமானே
அன்போடு பண்பு சேர எங்கள் அனுமானே
அறிவோடு ஆற்றல் தந்து எங்கள் அனுமானே
நிறைவான வாழ்வருள்வாய் எங்கள் அனுமானே

| | |
|---|---|
| தேவையெல்லாம் சருங்கவைப்பாய் | எங்கள் அனுமானே |
| சேவைமனப்பாங்கருள்வாய் | எங்கள் அனுமானே |
| ஒழுக்கம் என்றும் சிறக்க வைப்பாய் | எங்கள் அனுமானே |
| அழுக்காறு அறுத்திடுவாய் | எங்கள் அனுமானே |
| பணிவற்குப் பணிய வைத்து | எங்கள் அனுமானே |
| துணிவதற்குத் துணிவருள்வாய் | எங்கள் அனுமானே |
| துணிவதற்குத் துணிவருள்வாய் | எங்கள் அனுமானே |
| பக்தி வளர வேண்டுமையா | எங்கள் அனுமானே |
| பக்தர் கூட்டம் பெருக வேண்டும் | எங்கள் அனுமானே |
| நாட்டினிலே அமைதி தந்து | எங்கள் அனுமானே |
| பெருவாழ்வு வாழவைப்பாய் | எங்கள் அனுமானே |
| நோயற்ற வாழ்வு தந்து | எங்கள் அனுமானே |
| குறைவற்ற செல்வம் தந்து | எங்கள் அனுமானே |
| நிறைவடனே வாழவைப்பாய் | எங்கள் அனுமானே |
| நீதி விளங்க வேண்டுமையா | எங்கள் அனுமானே |
| தருமம் தழைக்க வேண்டுமையா | எங்கள் அனுமானே |
| செங்கோல் நிலைக்க வைப்பாய் | எங்கள் அனுமானே |
| செய்நன்றி நினைக்க வைப்பாய் | எங்கள் அனுமானே |
| அன்பு தவழ பண்பு தவழ | எங்கள் அனுமானே |
| அனைவருமே ஒன்றுபட்டு | எங்கள் அனுமானே |
| வாழ்வதற்கு வாழ வைத்து | எங்கள் அனுமானே |
| வலிகாமம் சொர்க்கபூமி | எங்கள் அனுமானே |
| என்று உலகம் சொல்லவைப்பாய் | எங்கள் அனுமானே |
| மிலேனிய ஆண்டினிலே | எங்கள் அனுமானே |
| மிலேச்சத்தம் ஒழிய வைப்பாய் | எங்கள் அனுமானே |
| பாத மலர் சரணமையா | எங்கள் அனுமானே |
| பாதுகாத்து அருளுமையா | எங்கள் அனுமானே |
| மங்களங்கள் பொங்க வைத்து | எங்கள் அனுமானே |
| மக்கள் மனம் குளிரவைப்பாய் | எங்கள் அனுமானே |
| சரணம் சரணமையா | எங்கள் அனுமானே |
| மலரடியில் சரணமையா | எங்கள் அனுமானே |

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா

❁❁❁❁❁❁

# எழிற்கோல ஆஞ்சநேயன்

ஆஞ்சனேயனே ஆஞ்சனேயனே
அன்புத்தெய்வம் ஆனவனே ஆஞ்சனேயனே
இன்பமான வாழ்வு வேண்டி ஆஞ்சனேயனே
உன் தன் கோயில் நாடி வந்தேன் ஆஞ்சனேயனே
எழில் மிக்க உன்தன் கோலம் ஆஞ்சனேயனே
கண்டு உள்ளம் மகிழ்ந்தேனையா ஆஞ்சனேயனே
கை கூப்பி வணங்கும் கோலம் ஆஞ்சனேயனே
கல் நெஞ்சம் கரைக்குதப்பா ஆஞ்சனேயனே
முடி சூடி மன்னனாகி ஆஞ்சனேயனே
முழு முதலாய் விளங்குகின்றாய் ஆஞ்சனேயனே
ஆதிமூலக் கோயிலிலே ஆஞ்சனேயனே
அருளொளியாய் விளங்குகின்றாய் ஆஞ்சனேயனே
இராமநாமப் பிரியனே ஆஞ்சனேயனே
இராம நாமம் சொல்லச் சொல்ல ஆஞ்சனேயனே
இரட்சிக்க நீ வருவாய் ஆஞ்சனேயனே
இதயக் குகை தன்னை ஐயா ஆஞ்சனேயனே
இராமனுக்கே கொடுத்தவனே ஆஞ்சனேயனே
இரவு பகல் சிந்தையிலே ஆஞ்சனேயனே
இராம நாமம் சொல்லிடுவாய் ஆஞ்சனேயனே
தங்கள் அருள் வேண்டுமென்றால் ஆஞ்சனேயனே
இராம நாமம் சொல்லி நிற்போம் ஆஞ்சனேயனே
வல்லவன் நீ நல்லவன் நீ ஆஞ்சனேயனே
வீரனும் நீ தொண்டனும் நீ ஆஞ்சனேயனே
வாயார வாழ்த்தி நின்றோம் ஆஞ்சனேயனே
வரமள்ளித் தந்திடுவாய் ஆஞ்சனேயனே
சிவபூசை தவமென்று ஆஞ்சனேயனே

செய்து வந்த ராவணனும் ஆஞ்சனேயனே
பெரும் தவறு செய்த போது ஆஞ்சனேயனே
தண்டிக்க வேண்டி ஐயா ஆஞ்சனேயனே
உருத்திர அவதாரம் ஆஞ்சனேயனே
விரும்பி நீ கொண்டவனே எங்கள் அனுமானே
உலகினுக்கு வழிகாட்ட எங்கள் அனுமானே
இராமனுக்குத் தொண்டனாகி எங்கள் அனுமானே
இராமனின் மூலமாக எங்கள் அனுமானே
இராவணன் வதம் செய்தீர் எங்கள் அனுமானே
சிரஞ்சீவி ஆனவனே எங்கள் அனுமானே
கரங்கூப்பி வணங்குகின்றோம் எங்கள் அனுமானே
அன்று ராம நாமம் சொல்லி ஐயா எங்கள் அனுமானே
ஆகாய மார்க்கமாக எங்கள் அனுமானே
ஈழதேசம் வந்தவனே எங்கள் அனுமானே
கலியுகம் தன்னிலையா எங்கள் அனுமானே
கப்பலேறிக் கடல் கடந்து எங்கள் அனுமானே
எங்கள் மண்ணை நாடி வந்தீர் எங்கள் அனுமானே
நடந்த நிகழ்வு பெரும் புதுமை எங்கள் அனுமானே
யாரறிவார் இந்த உண்மை எங்கள் அனுமானே
எத்தனையோ தடை தாண்டி எங்கள் அனுமானே
மருதனார் மடத்தினிலே எங்கள் அனுமானே
மாடி மலைக் கோயிலிலே எங்கள் அனுமானே
குடியமர்ந்த பெருமானே எங்கள் அனுமானே
எண்ணைக் காப்பு சாத்தும் போது எங்கள் அனுமானே
திருமேனி தீண்டப் பெற்றோம் எங்கள் அனுமானே
திருமேனி தீண்டியதால் எங்கள் அனுமானே
பெரும் பேறு கிடைத்ததையா எங்கள் அனுமானே
வேதம் சொல்லி நாமம் சொல்லி எங்கள் அனுமானே

யாகம் வளர்த்து நின்றோமையா எங்கள் அனுமானே
கும்பத்தில் சக்தி சேர்த்து எங்கள் அனுமானே
ஆகுதியாய் அருள் பெருக எங்கள் அனுமானே
பூரண கும்ப மூலம் எங்கள் அனுமானே
குட முழுக்கு ஆட்டி வைத்தோம் எங்கள் அனுமானே
எங்கள் பணி முடிந்ததையா எங்கள் அனுமானே
தங்கள் பணி தொடங்க வேண்டும் எங்கள் அனுமானே
நாட்டினிலே அமைதி தோன்ற எங்கள் அனுமானே
அனுக்கிரகம் செய்திடைய எங்கள் அனுமானே
மங்களங்கள் பொங்க வைப்பாய் எங்கள் அனுமானே
மனுநீதி விளங்க வைத்து எங்கள் அனுமானே
எல்லோரும் நல்லவராய் எங்கள் அனுமானே
எல்லோருமம் வல்லவராய் எங்கள் அனுமானே
வாழ வைத்துக் காத்து நிற்பாய் எங்கள் அனுமானே
பக்தி கொண்ட உத்தமர்கள் எங்கள் அனுமானே
உலகை வழிநடத்த வைப்பாய் எங்கள் அனுமானே
மருதனார்டமக்கோயில் எங்கள் அனுமானே
மகிமைதனை உலகறிய எங்கள் அனுமானே
வைத்திருதல் உங்கள் கடன் எங்கள் அனுமானே
எங்கள் செயல் ஒன்றுமில்லை எங்கள் அனுமானே
பாரமெல்லாம் தங்களுக்கே எங்கள் அனுமானே
என்றென்றும் திருவடியில் எங்கள் அனுமானே
மீளாத சரணமையா எங்கள் அனுமானே

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா

# வீர அனுமானை வணங்கக் காரணம்

கலியுகத்தில் கலியின் வஞ்சம் கொஞ்ச நெஞ்சமே
கலியின் வஞ்சம் தாண்ட வேண்டில்
கையெடுக்கத் தக்க தெய்வம்
அன்புத் தெய்வமான எங்கள் வீர அனுமானே
வீர அனுமன் சிரஞ்சீவி ஆன செல்வனே
வீரனுக்கும் வீரனான தொண்டின் செல்வனே
கலியின் நோக்கம் எல்லாமே கீழ்மையானது
கலியுகத்தின் கொடுமையெல்லாம் கலியின் செய்கை
கலியுகத்தின் நியதியுமே துன்பமானது
தெய்வம் கூட கலியுகத்தில் மௌனமாய் விடும்.

பக்தி ஒன்று இருந்தால் மட்டும் கலியை வெல்லலாம்
பக்தி வளர வேண்டுமென்றால் எங்கள் வாழ்விலே
பக்த அனுமன் அன்பு வேண்டும் எங்கள் நெஞ்சிலே
பக்த அனுமன் இராமநாமக் கீதப்பிரியனே
இராம நாமம் சொல்லுமிடம் அனுமனாலயம்
அனுமனென்று சொன்னாலே கலியும் நடுங்குவார்
அனுமன் கோயில் என்றாலே ஓடிப்பதுங்குவார்
துளசி தாசர் வாழ்விலே கலிபுருசர் செய்த தொல்லை
நினைத்திடவே மனமுருக்கும் தாங்கொணாத பொய தொல்லை
அத்தனையும் தாண்டி வாழ்வில் வெற்றி பெற்றது
ஆஞ்சநேயர் வேலை என்று புரிந்து கொண்டேமே.

காலநேரம் எமக்கு நன்மை ஆனதாலேயே
ஆஞ்சநேயர் கப்பலேறி இங்கு வந்தார்
வந்தவரை வாழ்த்தி வாழ்த்தி நாங்கள் பாடினால்
வாழ்வு தர வாயுசுதன் முன்னாய் வருவான்
ஆஞ்சநேயர் நேசம் பெற நாங்கள் செய்வது
இராம நாமம் சொல்லிச் சொல்லி உருச் செபித்தலே
இராம நாமம் சொல்லிச் சொல்லி உருவை ஏற்றினால்
ஆஞ்சநேயர் மெல்ல மெல்லவாய் திறந்து பேசுவார்
அன்பரென்றால் ஆதரவு கொடுத்தே தீருவார்
இந்த வார்த்தை உமை முற்றும் உண்மையே.

இராம நாமம் சொல்லுவோம்
கலியை வென்று வாழுவோம்
முழுமையான வாழ்வு பெற்று
பெருமை சேர வாழுவோம்.

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா

❁❁❁❁❁❁

# ராமநாமத்தின் பெருமை

ராம ராம ராம ராம ராம ராம ஓம்
ராம ராம ராம ராம ராம ராம ஓம்
ராம ராம ராம ராம ராம ராம ஓம்
ராம ராம ராம ராம ராம ராம ஓம்
அனுமன் விரும்பும் அன்பு நாமம்
ராம ராம ராம ராம ராம ராம ஓம்
அனுமன் சொல்லும் அன்பு நாமம்
ராம ராம ராம ராம ராம ராம ஓம்
அருள் நிறைந்த மந்திரம்
ராம ராம ராம ராம ராம ராம ஓம்
அகிலம் போற்றும் மந்திரம்
ராம ராம ராம ராம ராம ராம ஓம்
அனுதினமும் சொல்லிச் சொல்ல ராம ராம ஓம்
அருள் வெள்ளம் எங்கும் பாயும் ராம ராம ஓம்
அருள் வெள்ளம் எங்கும் பாய ராம ராம ஓம்
கலியுகத் தொல்லை தீரும் ராம ராம ஓம்

ராம நாமம் சொல்லுமிடம் அனுமனாலயம் ஓம்
அனுமனாலயம் அன்பர் சரண ஆலயம்
இன்பமான வாழ்வு தரும் ராம ராம ஓம்
துன்பமெல்லாம் துடைத்தருளும் ராம ராம ஓம்
தீரா நோய் தீர்த்தருளும் ராம ராம ஓம்
சுகம் நிறைந்த வாழ்வு தரும் ராம ராம ஓம்
ஒன்று சேர்ந்து ராம நாமம் சொல்லி மகிழ்வோம்
வேதமாக ராம நாமம் ஓதிமகிழ்வோம்.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# அனுமன் மேலான அர்ச்சனைப் போற்றி 108

| | |
|---|---|
| மருதா் பெரும்பதி மலையே | போற்றி |
| மாருதி நாம மாதவா | போற்றி |
| மாமலை மருந்தாம் சுந்தரா | போற்றி |
| மனத்துயர் துடைக்கம் மருந்தே | போற்றி |
| மாதவ ராஜ நாயகா | போற்றி |
| வானரத் திருவாய் நின்றவா | போற்றி |
| வாமனன் விரும்பும் மாதவா | போற்றி |
| வாயு தேவன் பாலனே | போற்றி |
| வாயார வாழ்த்த வருவாய் | போற்றி |
| வாழ் நாட் துணையென வந்தாய் | போற்றி |
| மீழா அடிமை கொள்வாய் | போற்றி |
| மிருத சஞ்சீவி யானாய் | போற்றி |
| மனமதை உருக்கும் ஜோதியே | போற்றி |
| இருள் துடைத்தருளும் ஈசனே | போற்றி |
| கருப்பொருளாகிய கனலே | போற்றி |
| அருட்பெரு நிலைதரம் அண்ணலே | போற்றி |
| இராமனுக்கினிய தொண்டனே | போற்றி |
| இரகு குலம் காத்த செல்வனே | போற்றி |
| இகபர சுகம் தரும் ஈசனே | போற்றி |
| இதயக் குகையின் ஒளியே | போற்றி |
| கதையது கொண்ட வீரனே | போற்றி |
| கலியது அஞ்ச அருள்வாய் | போற்றி |
| கலியுக மக்களின் துணையே | போற்றி |
| அருந்தவக் கோல மலையே | போற்றி |
| அருளொளி நிறைந்த திருமணி | போற்றி |
| புனிதத்தை விரும்பும் புனிதனே | போற்றி |
| புண்ணியர் விரும்பும் புண்ணியா | போற்றி |
| எழிமையும் பெருமையும் கொண்டவா | போற்றி |
| ஏழேழ் பிறவிக்கும் துணையே | போற்றி |
| ஏழ்மை நிலைதனை ஒழிப்பாய் | போற்றி |
| அருள் நிலை வளர அருள்வாய் | போற்றி |
| அருட்பணி செய்ய வைப்பாய் | போற்றி |
| அன்பின் அடிமை ஆனாய் | போற்றி |
| ஆணவ சங்கார மூர்த்தியே | போற்றி |
| ஆவலாய்த்தொவதற்கு அருள்வாய் | போற்றி |
| அஞ்சனை மனங்குளிர் மைந்தனே | போற்றி |

சிந்தனைக் கினிய செல்வனே போற்றி
சீரியதவச்சுடர் அழகா போற்றி
சிரஞ்சீவி யான சஞ்சீவி போற்றி
சீதையின் சீரிய தாசனே போற்றி
ஆசையை அறுத்த அண்ணலே போற்றி
ஆல காலன் நேசனே போற்றி
பின்பற்றும் பெருமை கொண்டவா போற்றி
பிரமனும் போற்றும் பரனே போற்றி
பீதாம் பரனுக்கினியாய் போற்றி
பேருருக் கொண்ட பெரியோய் போற்றி
பார்புகழ்ந்தேத்தும் பரனே போற்றி
சிற்றுரு வடிவிலும் வருவாய் போற்றி
சீரிய பெருவாழ்வருள்வாய் போற்றி
பாரினில் பாதகம் தீர்ப்பாய் போற்றி
பாவக் கொடிதனை அறுப்பாய் போற்றி
பாவ விமோசனம் தருவாய் போற்றி
எண்ணத்தில் தூய்மை தருவாய் போற்றி
எண்ணிய முடித்திடும் தலைவா போற்றி
கனிவகை விரும்பும் கடவுளே போற்றி
கானகம் உகந்த காதலா போற்றி
காம நாசக் கடவுளே போற்றி
கனவிலும் கை தெழும் கடவுளே போற்றி
குங்கும் தத்துவம் உணர்ந்தாய் போற்றி
குங்குமம் சூடி மகிழ்ந்தாய் போற்றி
சீதை புகழும் செல்வனே போற்றி
சீதையின் வெற்றிலை உகந்தாய் போற்றி
வெற்றிலை மாலை ஏற்பாய் போற்றி
வெற்றிகள் வழங்கும் வீரனே போற்றி
வற்றாத அன்பு ஊற்றே போற்றி
வஞ்சனை அறுக்கும் வல்லவா போற்றி
வால்மணி நாத நாயகா போற்றி
வால் நுனிச் சந்தனக் குழம்பா போற்றி
சந்தன மணங்கமழ் சுந்தரா போற்றி
சார்ந்தவற்கினிய தொண்டனே போற்றி
சாகாவரம் தரும் சாமியே போற்றி
சதா வரம் தரும் சித்தனே போற்றி
சுந்தரக்குருக்களை ஆண்டவா போற்றி
சூதும் வாதும் ஒளிப்பாய் போற்றி

சாதுக்கள் சங்கம் வளர்ப்பாய் போற்றி
சாந்தியும் அமைதியும் அருள்வாய் போற்றி
சச்சிதானந்த உருத்திர சிவமே போற்றி
சங்கரன் விரும்பும் சுந்தரா போற்றி
சங்கித ரசக மூர்த்தியே போற்றி
சன்மார்க்க நெறிமுதற் பொருளே போற்றி
விஸ்வ ரூப விண்ணவா போற்றி
பாரதப் போர்க்கொடி வடிவா போற்றி
ராமாயணப்போர் சூத்திரா போற்றி
மயிலிராவண சங்காரா போற்றி
பஞ்சமுக வீர சுந்தரா போற்றி
இராமனின் கவசம் ஆனாய் போற்றி
ராமநாம சங்கீர்த்தனா போற்றி
பஞ்சரத்தினப் பிரியா போற்றி
பஞ்சசீலம் காப்பாய் போற்றி
அர்ச்சுனன் ஆணவம் கலைந்தாய் போற்றி
கதலி வனத்தை உகந்தாய் போற்றி
வீமனுக்கினிய சோதரா போற்றி
வீராதி வீர சூரனே போற்றி
பாராதி அண்டம் நிறைந்தாய் போற்றி
கார்மேக ராமன் காந்தனே போற்றி
பேர் புகழ் விரும்பா பெருமான் போற்றி
பார்புகழ்ந்து ஏத்தும் சீலனே போற்றி
பாமர ஜன பாலனே போற்றி
பண்ணொன்ற இசை சொல்ல அருள்வாய் போற்றி
பாரிசாத மலரே போற்றி
பாகௌ அகம் குழைப்பவனே போற்றி
பரமசாந்திக் கடவுளே போற்றி
பாரினில் போர் முடித்தருள்வாய் போற்றி
பமர சாந்தி அருள்வாய் போற்றி
எங்கும் திருவருள் நிறைந்தாய் போற்றி
எங்கும் மங்களம் பொங்கிடப் போற்றி
திண்ணமாய் அருளும் சுந்தரா போற்றி
போற்றி போற்றி நின் பொற்பதம் போற்றி

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா

❁❁❁❁❁❁

# சுந்தர ராமன்

தசரதமோகன சுந்தர ராமா
அனுமனின் இதயத்தில் வாழ்ந்திடும் ராமா.

நாரணக் கடவுளின் அவதாரம் ராமா
மாதவ மாருதி நினைந்திடும் ராமா.

தாரக மந்திரம் ராம் ராம் என்றிட
மாபெரும் வரமள்ளி வழங்கிடும் ராமா.

கலிவஞ்சம் போக்கிட அனுமனைத் துணையென
கலியுகத்தில் தந்த தசரத ராமா.

அனுமனின் அருளைப் பெருக்கிட ராமா
உன் நாமம் சொல்லிட வைத்திரு ராமா.

மருதர் பெரும்பதி விளங்கிட ராமா
பேரருள் நிலைத்திடச் செய்திடு ராமா.

எங்களின் மண்ணிலே சுந்தர ராமா
என்றும் அமைதியைத் தந்திடு ராமா.

செங்கோலாட்சி நிலைத் திட ராமா
செல்ல நிலையது பெருகிட ராமா.

மங்கள கரமாய் மகிழ்வுடன் ராமா
மக்கள் வாழ்ந்திட வைத்திடு ராமா.

தசரதமோகன சுந்தர ராமா
அனுமனின் இதயத்தில் வாழ்ந்திடு ராமா.

❁❁❁❁❁❁

# ஆஞ்சநேயரின் அருட்பெருமை

01. ரகு குலம் காக்க பெருவீரனாய் எழுந்து
சஞ்சீவி கொண்டு வந்த அனுமந்தா இன்றெமக்கு
மனம் நிறைந்த வாழ்வுதர மகிழ்வாய்க்கரங்கள் கூப்பி
அருள் நிறைந்த தவக்கோலனாகி நில்.

02. அபிசேக நேரம் அருட்கோலம் காட்டி
அன்பர்கள் உள்ளம் பாகா - திருக்கோயில்
பக்திப் பெரும் சிறப்பை பக்குவமாய் கட்டி நிற்றோம்
அருட்கண்ணால் அடியவரை அன்போடு பார்.

03. பூசைப் பெருவேளை பாசப் பெருங்கனலாய்
ஆசைப்படுவார்க்கு அருள்வழங்கி - தாசற்கு
நேசக்கரம் கொடுத்த நேர்மைத் திறம் வளர
பாதத் திருக்கமலம் சூட்டி அருள்.

04. அவப்பொழுது போக்காமல் அருள் நாமஞ்சொல்
தவக்கோலம் கொண்டு நிற்கும் தூயவனே உன்பதிக்கு
தவிப்பாய் வருபவர்கள் அருள் நாமஞ் சொல்ல
தவப் பேறு பெற்றிட நீ வை.

05. அபிசேகம் செய்த அருமருந்தாம் பெரும் தீர்த்தம்
திருமருந்தாய்த்தினமருளும் பெரியோனே - அருள்சேர
கரத்தேந்தும் திருநூலை அருட்பெருங் காலமெல்லாம்
அனைவரையும் கரத்தினிலே அணிந்திட நீ வை.

ராம நாம சங்கீர்த்னம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# சனிபகவானை வென்ற அனுமந்தன்

01. ரகு ராமன் இலங்கை வரசேது அணை அமைத்திடவே
சனிபகவான் நல்வேளை அது வென்று - பெருவிருப்பாய்
அனுமந்தன் திருவடியைப் பற்றித் தொடரவர
பொறு என்று பொறுக்க வைத்த அனுமந்தா என்றும் சரண்.

02. ஈஸ்வர நாமங்கொண்ட என் அன்புச் சனீஸ்வரா
உன் தவிப்பை நன்றாக நானறிவேன் - எனைச் சேர
திருவடியோ பொருத்தமில்லை இதயத்தில் இடமுமில்லை
ருப்பதென்றால் திரமுடிமேல் இரு.

03. இரு என்று சொன்னதுமே சனிபகவான் விருப்பாக
முடியேறி முறையாகக் குடியமர - அனுமந்தன்
அணைகட்டும் பெருங்கல்லை தலைமைலே வைத்து
சேது அணை சேர்த்தனை அறி.

04. அனுமந்தன் செயலாலே அல்லலுற்ற சனிபகவான்
தானாக விலகிச் சென்றிடவே - அனுமந்தன்
நில்வென்று சொல்லி நல்வரம் வேண்ட
சரியென்று சனிபகவான் அருளியதை அறி.

05. அனுமந்தன் அடி பணிந்தால் சனிபகவான் மனம் மகிழ்ந்து
அயவற்கு அல்லல் வினை செய்யான் - இதை உணர்ந்து
அன்பர்களே நாம் சேர்ந்து சனிதோறும்
கூடிடுவோம் கும்பிடுவோம் தினம்.

ராம நாம சங்கீர்தத்னம்
ராமா ராமா.

❋❋❋❋❋❋

# கலியுகத்தொல்லை தீர்க்கும் மாருதி

| | |
|---|---|
| மாருதி ராஜா | மாருதி ராஜா |
| மனம் நிறைந்த செல்வனே | மாருதி ராஜா |
| மலரடியில் சரண்புகுந்தோம் | மாருதி ராஜா |
| கலியுகத்தில் பிறந்து விட்டோம் | மாருதி ராஜா |
| கலிவஞ்சம் தாண்ட வேண்டில் | மாருதி ராஜா |
| தங்கள் கிருபை வேண்டுமென்று | மாருதி ராஜா |
| நன்கு நாம் அறிந்து கொண்டோம் | மாருதி ராஜா |
| யுகத்திற்கு யுகம் ஐயா | மாருதி ராஜா |
| வழிபாடு மாறிவரும் | மாருதி ராஜா |
| கலியுகம் தன்னிலையா | மாருதி ராஜா |
| பக்தி மார்க்கம் ஒன்று தானே | மாருதி ராஜா |
| கை கொடுக்கும் வழிபாடு | மாருதி ராஜா |
| என்ற உண்மை முற்றும் உண்மை | மாருதி ராஜா |
| பெரும் தொண்டனானவனே | மாருதி ராஜா |
| வாழ்ந்து காட்ட வந்தவனே | மாருதி ராஜா |
| பக்தி மார்க்கம் சிறப்படைய | மாருதி ராஜா |
| நாம ஜெபம் செய்ய வேண்டும் | மாருதி ராஜா |
| என்பதனைப் புரிய வைக்க | மாருதி ராஜா |
| கணப்பொழுதும் மறவாமல் | மாருதி ராஜா |
| மனம் விரும்பி மனமுருக | மாருதி ராஜா |
| ராம ஜெபம் சொல்லி நின்றாய் | மாருதி ராஜா |
| உலக மக்கள் அனைவரிலும் | மாருதி ராஜா |
| ராமனையே நீ கண்டு | மாருதி ராஜா |
| கை கூப்பி வணங்கி நின்று | மாருதி ராஜா |
| பக்தருள் தலை சிறந்து | மாருதி ராஜா |
| அற்புதக் கோலங் கொண்டாய் | மாருதி ராஜா |
| உங்கள் செயல் ஒவ்வொன்றும் | மாருதி ராஜா |
| எண்ணும் போது எம்மனதில் | மாருதி ராஜா |

| | |
|---|---|
| பக்தி என்னும் பயிர் வளரும் | மாருதி ராஜா |
| எதிலும் நன்மை காண வேண்டும் | மாருதி ராஜா |
| பக்தி மார்க் நெறி நடக்க | மாருதி ராஜா |
| பட்டம் பதவி தேவையில்லை | மாருதி ராஜா |
| ஏழையாக இருந்தாலும் | மாருதி ராஜா |
| தூய அன்பு போதுமென்று | மாருதி ராஜா |
| வாழ்ந்து வழி காட்டி நின்றாய் | மாருதி ராஜா |
| நாமஞ்சொல்லி நாமஞ்சொல்லி | மாருதி ராஜா |
| பெருவலிமை கொண்டவனே | மாருதி ராஜா |
| கலியுகத்தின் நடைமுறைகள் | மாருதி ராஜா |
| தாங்கொணாத பெரும் துயரம் | மாருதி ராஜா |
| எந்தெந்த நிலைகளிலும் | மாருதி ராஜா |
| உண்மையில்லை நேர்மையில்லை | மாருதி ராஜா |
| ஆயிரத்தில் ஒன்று தான் | மாருதி ராஜா |
| சரியாக நடக்குதையா | மாருதி ராஜா |
| தனக்கொரு நீரி ஐயா | மாருதி ராஜா |
| பிறர்க்கொரு நீதி ஐயா | மாருதி ராஜா |
| அரசியல் என்றாலே | மாருதி ராஜா |
| நீதியில்லா நெறிமுறையே | மாருதி ராஜா |
| இந்த நிலை தன்னிலையா | மாருதி ராஜா |
| எம்மை நீ ஆளவந்தாய் | மாருதி ராஜா |
| எங்கும் நீதி எங்கும் உண்மை | மாருதி ராஜா |
| என்றென்றும் விளங்கவைப்பபாய் | மாருதி ராஜா |
| சொல்லும் செயலும் ஒன்றவைப்பாய் | மாருதி ராஜா |
| சோதியாக நீ வருவாய் | மாருதி ராஜா |
| இன்று எமக்கு வேண்டுவது | மாருதி ராஜா |
| கொடிய போர் முடிய வேண்டும் | மாருதி ராஜா |
| பேரமைதி நிலவ வேண்டும் | மாருதி ராஜா |
| இனமத பேதமின்றி | மாருதி ராஜா |
| மக்களெல்லாம் ஒன்றுபட்டு | மாருதி ராஜா |

மாண்பாக வாழ வைப்பாய் மாருதி ராஜா
தொழில் வளம் பெருகி மாருதி ராஜா
பயிர் வளம் சிறந்து மாருதி ராஜா
ஆநிரை பெருகி ஐயா மாருதி ராஜா
செல்வமது செழித்திட மாருதி ராஜா
அனைவரம் வாழ்ந்திட மாருதி ராஜா
ஆசீர் வதிப்பாய் நீ மாருதி ராஜா
வந்தவாறு அறியோம் நாம் மாருதி ராஜா
போமாறேதோ ஐயா மாருதி ராஜா
நீர்கோல வாழ்வு இது மாருதி ராஜா
என்றிட்ட உண்மையை மாருதி ராஜா
உணர்ந்து வாழவைத்திடுவாய் மாருதி ராஜா
அழுக்காறு வஞ்சனை மாருதி ராஜா
அனைத்தையும் ஒழிப்பாய் மாருதி ராஜா
பேராசை ஒழிப்பாய் மாருதி ராஜா
மனநிறைவு அருள்வாய் நீ மாருதி ராஜா
மங்கள கர்மாக மாருதி ராஜா
மக்கள் அனைவரும் மாருதி ராஜா
வாழ்ந்திட வைப்பாய் நீ மாருதி ராஜா
சரணம் சரணம் ஐயா மாருதி ராஜா
திருவடியே சரணம் ஐயா மாருதி ராஜா

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா

❁❁❁❁❁❁

# இராமாவதாரப் பெருமை

மலாதாரமே தசாவ தாரம்
இராமாவதாரம் அருளவதாரம்

வையக மக்கள் சீராய் வாழ்ந்திட
வாழ்ந்து காட்ட எடுத்தவதாரம்
தாய் தந்தை போற்றும் மைந்தனாய் வாழ்ந்து
சோதர பாசம் விளங்கிடச் செய்யும்

மூலாதாரமே தசாவதாரம்
இராமாவதாரம் அருளவதாரம்

அதர்மத்தை அழிப்பதே வீரம் என்றும்
அருள் நோக்கிணைவதே காதல் என்றும்
இல்லற வாழ்விலலே இன்பமும் துன்பமும்
இருபவர்க்கும் பங்கென உணர்த்திட வந்த

மூலாதாரமே தசாவதாரம்
இராமாவதாரம் அருளவதாரம்

தந்தைக்க மேலாய் தாயுரை மதித்து
உதவினோர் தமை உடன் பிறப்பாக்கி
ஆசையால் அழி வென்ற உண்மையை விளக்கி
ஆபத்துக்காலத்தில் அருந்தவம் செய்த

மூலாதாரமே தசாவதாரம்
இராமாவதாரம் அருளவதாரம்

வீரனென்பதற்கு உதாரணமாயும்
பக்தனென்பதற்கு விளக்கமாயும்
தொண்டனென்பதற்கு இலக்கணமாயும்
அனுமனைத் தந்து அற்புதம் செய்த

மூலாதாரமே தசாவதாரம்
இராமாவதாரம் அருளவதாரம்

கற்பெனப் படுவது இருபாலார்க்கும்
இருக்க வேண்டிய கட்டுப்பாட்டென
வாழ்ந்து காட்டிய வள்ளலாம் இராமன்
அடியொற்றி வாழ்ந்து வருபவர் போற்று

மூலாதாரமே தசாவதாரம்
இராமாவதாரம் அருளவதாரம்

பிழையார் விடுகினும் தண்டனை கொடுத்து
பிழையில்லை என்பதை வெளிப்படவைத்து
உலகம் பின் பற்றும் படியாய் வாழ்ந்து
உத்தம புருசனாய் வாழ்ந்து காட்டிய

மூலாதாரமே தசாவதாரம்
இராமாவதாரம் அருளவதாரம்

இரா நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# மார்கழி மூல மாதவ சுந்தரனே அனுமன்

மார்கழி மூல மாதவனே
மாதவயோக மாருதியே

அஞ்சனைத் தாயவள் தவத்தாலே
அகில உலகமும் உள்ந்திடவே
மைந்தனாய் வந்து உதித்தவனே
மலைவிளங்க்காக ஒளிர்பவனே.

மார்கழி மூல மாதவனே
மாதவயோக மாருதியே

கலியுக மக்களுக்குதவிடவோ
கார்மேக வண்ண இராமனவன்
பொருந்தமாய் விரப்பமாய் எங்களுக்கு
தங்களை இங்கு அனுப்பி வைத்தான்.

மார்கழி மூல மாதவனே
மாதவயோக மாருதியே

தங்களின் வரவு முதலாக
எங்களுக்கமைதி கிடைத்ததையா
தங்களின் அருட் பெருஞ்செயலாலே
அடியவர் கூட்டம் பெருகுதையா.

மார்கழி மூல மாதவனே
மாதவயோக மாருதியே

அழகான அருட்பெருங் கோயிலின் முன்
மலைபோலக் கோபுரம் தோன்றுதையா
கோபுர மேலே நீ இருந்து
குடிமுழுதாண்டு அருளுமையா.

மார்கழி மூல மாதவனே
மாதவயோக மாருதியே

மூலத்திருநாள் முழுமை பெற
மூர்த்திகரமும் சிறந்தோங்க
பத்துத்தினங்களும் சிறப்பாக
அபிசேஷ அர்ச்சனை செய்கின்றோம்.

மார்கழி மூல மாதவனே
மாதவயோக மாருதியே

பத்துத் தினங்களும் கையெடுப்போர்
பாவ வினைகளைத் தீருமையா
நாமார்ச்சனையாய்த் திருநாமம்
ராமா என்று சொல்லவைப்பாய்

மார்கழி மூல மாதவனே
மாதவயோக மாருதியே

நம்பிக்கை தொழும் அடியவரின்
துன்பச் சுமைகளைத் தீருமையா
நாளும் பொழுதும் திருநாமம்
பாடிப் பாடி மகிழவைப்பாய்.

மார்கழி மூல மாதவனே
மாதவயோக மாருதியே

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# ராம நாம மோகன் ஆஞ்சநேயன்

இராம நாம மோகனே ஆஞ்சநேயனே
இராம நாம சாதகா ஆஞ்சநேயனே
இராமனையே தெய்வமென்று ஆஞ்சநேயனே
சரணாகதி பூண்டவனே ஆஞ்சநேயனே
வீரனாக வடிவு கொண்ட ஆஞ்சநேயனே
தொண்டனாக வடிவு கொண்ட ஆஞ்சநேயனே
தொண்டின் பெருமை விளங்கவைத்த ஆஞ்சநேயனே
ஐம்புலனை அடக்கி நின்று ஆஞ்சநேயனே
தொழும் முறையைக் காட்டி நிற்கும் ஆஞ்சநேயனே
கரங்கூப்பி சிரம் தாழ்த்தி ஆஞ்சநேயனே
வழிபடு முறை காட்டும் ஆஞ்சநேயனே
கண் முடித் தியான மிருந்து ஆஞ்சநேயனே
தியான முறை உணர்த்துகின்ற ஆஞ்சநேயனே
உருத்திராக்கம் தானணிந்து ஆஞ்சநேயனே
உருத்திரனின் பேர் விளங்க ஆஞ்சநேயனே
உருவு கொண்ட வீரனே ஆஞ்சநேயனே
கதையது கையிலின்றி ஆஞ்சநேயனே
கருணை வடிவு கொண்டவனே ஆஞ்சநேயனே
அடியவர்கள் தரமறிந்து ஆஞ்சநேயனே
அருட்காட்சி காட்டி நிற்பாய் ஆஞ்சநேயனே
அருள் நிறைந்த பெரிய கோயில் ஆஞ்சநேயனே
சிறப்பாகக் கொண்டவனே ஆஞ்சநேயனே
மலை போன்ற கோபுரமாய் ஆஞ்சநேயனே
கொடியாகிச் சிலையாகி ஆஞ்சநேயனே
குடீமுழுதும் ஆளுமையா ஆஞ்சநேயனே
மலைபோன்ற கோபுரத்தில் ஆஞ்சநேயனே
சிலையாக நின்றருள்வாய் ஆஞ்சநேயனே
நினைத்தது போல் முடித்தவனே ஆஞ்சநேயனே
வெளிவீதி சுற்றி வர ஆஞ்சநேயனே
காணியது சேரவைப்பாய் ஆஞ்சநேயனே
வீதியிலே தேரோடா ஆஞ்சநேயனே
திருவருள் புரிந்திடையா ஆஞ்சநேயனே

| | |
|---|---|
| அடியவற்கு அமுதளிக்க | ஆஞ்சநேயனே |
| அரிய பெருமண்டபத்தை | ஆஞ்சநேயனே |
| அமைத்துமே தந்திடுவாய் | ஆஞ்சநேயனே |
| பூஞ்சோலை ஆக்கிவைப்பாய் | ஆஞ்சநேயனே |
| வாயில் முன் தடத்தினிலே | ஆஞ்சநேயனே |
| செங்களுநீர் மலர வைப்பாய் | ஆஞ்சநேயனே |
| பள்ளி எழுச்சிக் காட்சிகாண | ஆஞ்சநேயனே |
| பக்தர்கட்கு அருளுமையா | ஆஞ்சநேயனே |
| பள்ளி எழுச்சிப் பாடலது | ஆஞ்சநேயனே |
| பாரெங்கும் ஒலிக்க வைப்பாய் | ஆஞ்சநேயனே |
| உச்சிகாலப் பூசை கண்டு | ஆஞ்சநேயனே |
| உள்ளமது குளிரவைப்பாய் | ஆஞ்சநேயனே |
| மாலை வேளைப் பூசைகாண | ஆஞ்சநேயனே |
| மனக் குறைகள் போக்கிவைப்பாய் | ஆஞ்சநேயனே |
| சனிக்கிழமை அபிசேஷகம் | ஆஞ்சநேயனே |
| அருள்முழுக்காய் அமைய வைப்பாய் | ஆஞ்சநேயனே |
| வியாழனிலெ கையெடுக்க | ஆஞ்சநேயனே |
| வெற்றியெலாம் கொடுப்பவனே | ஆஞ்சநேயனே |
| பேரன்பு அடியவரை | ஆஞ்சநேயனே |
| உன்பதிக்கு இழுத்திடையா | ஆஞ்சநேயனே |
| வஞ்சக நினைப்போடு | ஆஞ்சநேயனே |
| பிழை செய்யும் கொடியவரை | ஆஞ்சநேயனே |
| கதம் கொண்டு கலைத்திடையா | ஆஞ்சநேயனே |
| தங்கள் அருட்கோயிலிலே | ஆஞ்சநேயனே |
| அருட்செயல்கள் நடக்க வேண்டும் | ஆஞ்சநேயனே |
| எல்லாமே அருள்மயமாய் | ஆஞ்சநேயனே |
| எல்லாமே சிறப்பாக | ஆஞ்சநேயனே |
| மக்கள் மனம் குளிரும் படி | ஆஞ்சநேயனே |
| அருள் நிறைந்த வரம் கொடுத்து | ஆஞ்சநேயனே |
| அருளாட்சி செய்திடையா | ஆஞ்சநேயனே |
| சரணம் சரணமையா | ஆஞ்சநேயனே |
| திருவடியில் சரணமையா | ஆஞ்சநேயனே |

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா.

❋❋❋❋❋❋

# மார்கழி மூலச் சிந்தனை

அருந்தவக் கோல மாருதியே
அருள் மழை பொழிந்து அருள்வாயே

தமிழ் மக்கள் மனது கலங்கிய வேளையில்
ஆறுதல் தந்திட எம்மிடம் வந்த
மாதவ சுந்தர மாருதியே
உன்தன் மலரடி என்றும் சரணமையா.

அருந்தவக் கோல மாருதியே
அருள் மழை பொழிந்து அருள்வாயே

ஆலய அமைவிடம் தனிப்பெருஞ் சிறப்பு
அற்புத வடிவுடை ஆலய அழகும்
மலைபோன்ற கோபுரத்தனிப்பெருங் சிறப்பும்
நாம் தினம் நினைந்து தொழுதிடுவோம்.

அருந்தவக் கோல மாருதியே
அருள் மழை பொழிந்து அருள்வாயே

ஆலயச் சூழல் அருள்நிலை தந்திட
அருந்தவக் கோலம் மனதினை உருக்கிட
பூசையின் வேளை காட்டிடும் கோலம்
நாம் கண்டு மனது குளிர்ந்திடுவோம்.

அருந்தவக் கோல மாருதியே
அருள் மழை பொழிந்து அருள்வாயே

மார்கழி மூல அபிசேஷகம்
சாந்தியை எமக்குத்தந்திடவே
சந்தனக் காப்பு நீ அணிந்து
சஞ்சீவியாகி நீ வருவாய்.

அருந்தவக் கோல மாருதியே
அருள் மழை பொழிந்து அருள்வாயே

மூலதிருநாள் அமுதாக பொங்கலை ஏற்று அருள் பொங்க
மக்கள் மனது குளிர்வடைய
ஆதி மூலத்தின் அருளொளியாய்
அற்புதக் காட்சி தாருமையா.

அருந்தவக் கோல மாருதியே
அருள் மழை பொழிந்து அருள்வாயே

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா.

❁❁❁❁❁❁

## மாருதியின் அருள் பெற செய்யவேண்டியவை

மாதவ சுந்தர மாருதியே
மருதர் பெரும் பதி பாறிதியே
தாயவள் அஞ்சனை தவப்பயனே
தாரணி போற்றும் தவநிதியே.

கோலமாங் கோலங் கொண்டு வந்தாய்
தவப்பெரு வடிவ விளக்கமானாய்
தியானத்தின் நிலையை நாம் காண
நித்திய தியானத்தில் நிற்கின்றாய்.

நாமத்தின் மகிமையை நாமுணர
இராமனின் நாமத்தைச் சொல்லி நின்று
பாவத்தைப் போக்க வழிகாட்டி
மானிலம் காக்கும் மாருதியே.

மாருதி அருள் பெற வேண்டுமென்றால்
வைகறைப் பொழுதில் விழித்தெழுந்து
அகம் புறம் தூய்மை உள்ளவராய்
தவிப்புடன் மாருதிப் பதி வந்து

அருட்பள்ளி எழுச்சி அது கண்டால்
அகன்றிடும் எங்கள் பாவவினை
அனுமனின் நாமத்தை நாம் சொன்னால்
கலியும் அஞ்சி அகன்றிடுவான்.

வேண்டிய வரங்களைப் பெறுவதற்கு
தூபியில் எழுதுதல் வீண் வேலை
எழுதிரும் பாவத்தைச் செய்யாமல்
தியானத்தில் சிறிது போதிருந்து

ராமனின் நாமத்தை நாம் சொன்னால்
நாமத்தில் விருப்புள்ள மன்னவனார்
விருப்புடன் எங்களை நாடி வந்து
எண்ணிய முடித்து அருள் புரிவான்.

மாருதி மாதவன் தூயவனே
மாருதி கோயில் வந்தவுடன்
காலது அலம்பித் தூய்மையுடன்
படியேறிவரும் போது பக்தியுடன்

காமக்குரோதம் தனை விடுத்து
சமகால துன்பத்தை மனம் நினைத்து
சிவ சின்னம் தன்னை விருப்போடு
சிறப்பாய் அணிந்து மகிழ வெய்தி

முழந்தாளில் பணிந்து கரங் கூப்பி
மேலங்கி இல்லாமல் ஆடவர்கள்
இராமனின் நாமத்தை உச்சரித்து
நேர்த்தியாய் பலமுறை வீதி சுற்றி

அபிசேகம் கண்டு அகம் குளிர்ந்து
அமைதியைப் பேணி தவமிருந்து
திருமருந்தாகத் தீர்த்தத்தை
தவிப்போடு அருந்தி அகம் குளிர்ந்து

பூசைப் பெருவேளை முன்பாக
தப்பாமல் நடக்கும் பஜனையிலே
பெருவிருப்பாக நாமஞ் சொல்லி
அனுமனின் அருளை நாம் பெறுவோம்

பூசைப் பெருவேளைத் திருக்கோலம்
கண்டிடக் கிடைக்குமோ என் றெண்ணி
அன்புத்தவிப்புடன் அன்பரெல்லாம்
இராமனின் நாமத்தைச் சொல்லி நிற்க

கதவும் திறக்க கதிரவன் போல்
அஞ்சனைச் செல்வன் அனுமந்ன்
அருட் திருக்கோல் காட்டி நிற்பான்
அந்த வேளை வரம் வேண்ட
சிறந்தது என்பதை மனம் நினைந்து
காதலாகிக் கசிந்துருகி
கண்ணீர் மல்க வேண்டிடுவோம்
நாட்டில் அமைதி சேர்கவென்று

அனைவரும் ஒன்றாய் வேண்டிடுவோம்
இல்லறம் சிறக்க வேண்டுமென்று
இதயத்தில் நினைந்து வணங்கிடுவோம்
இன்பமே சூழ்க என்றெண்ணி

இதயம் குளிர வாழ்த்திடுவோம்
பஞ்சதீபத்தின் சோதி கண்டு
பரமானந்தம் அடைந்திடுவோம்
பாசுரம் படிக்கம் வேளையிலே

அனைவரும் அமைதி நிலை காப்போம்
சனியெனும் ஈஸ்வரன் அவன் பதியில்
அமைதி ஒழுங்கு நிலைகாப்போம்
பூசை வேளை தீபத்தை அனைவரும் கண்டு தர்சிக்க

வணங்கி விலகி வழிவிடுவோம்.
வழிபடுபலனைத் தருகவென்று
அனுமனை மனமார வேண்டிடுவோம்
குருநாதன் அருள் வார்த்தை சொல்லும் போது

அடக்கமாய் அனைவரும் அமர்ந்திடுவோம்
குருநாதன் வார்த்தையை நாம் கேட்டு
நல்வழி நடந்து நாமுய்வோம்
அன்னம் அளிக்கும் வேளையிலே

அமைதியாய் ஒழுங்காய் சிறப்பாக
அருமருந்தாக அமுது செய்வோம்
ஆஞ்சநேயர் தவசீலர், அவர் மனம் குளிரும் படியாக
பிழையது செய்யாது வழிபடுவோம்
பிழையது செய்யாது வழிபடுவோம்
பிழையது செய்யாது வழிபடுவோம்

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# இராமவதாரச் சிந்தனை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இராம | ராம | ராம | ராம | ராம | ராம | ராம | ஓம் |
| இராம | ராம | ராம | ராம | ராம | ராம | ராம | ஓம் |

| | | | | |
|---|---|---|---|---|
| தசரத ராஜனுக்கு | ராம | ராம | ராம | ஓம் |
| மைந்தனாக செய்தவத்தால் | ராம | ராம | ராம | ஓம் |
| மைந்தனாக செய்தவத்தால் | ராம | ராம | ராம | ஓம் |
| தசாவதாரத்திலே | ராம | ராம | ராம | ஓம் |
| இராமனாக வந்தவனே | ராம | ராம | ராம | ஓம் |
| வைகுந்தப் பரப்பிரமம் | ராம | ராம | ராம | ஓம் |
| மானிட ஜென்மந்தாங்கி | ராம | ராம | ராம | ஓம் |
| வாழ்க்கையின் பெருமை தனை | ராம | ராம | ராம | ஓம் |
| வாழ்ந்து காட்டவந்தவனே | ராம | ராம | ராம | ஓம் |
| தசரதற்கு மைந்தனாகி | ராம | ராம | ராம | ஓம் |
| அரசிளங்குமரனாய் | ராம | ராம | ராம | ஓம் |
| இளம் வயது தன்னிலையா | ராம | ராம | ராம | ஓம் |
| சோதரபாசம் கொண்டாய் | ராம | ராம | ராம | ஓம் |
| குமரப்பருவம் தன்னிலையா | ராம | ராம | ராம | ஓம் |
| வில் வீரனாகி நின்றாய் | ராம | ராம | ராம | ஓம் |
| விஸ்வாமித்திரமுனிவராய் | ராம | ராம | ராம | ஓம் |
| பெரும் தவம் செய்வதற்கு | ராம | ராம | ராம | ஓம் |
| தாடகையை வதம் செய்து | ராம | ராம | ராம | ஓம் |
| வீராதி வீரனானாய் | ராம | ராம | ராம | ஓம் |
| மணப்பருவம் வந்தவேளை | ராம | ராம | ராம | ஓம் |
| மன்மதனாய் காட்சி கொடுத்து | ராம | ராம | ராம | ஓம் |
| சீதை மனம் கவர்ந்தவனே | ராம | ராம | ராம | ஓம் |
| சிதைத்தாய் வில்லொடித்து | ராம | ராம | ராம | ஓம் |
| கோதண்ட ராமனானாய் | ராம | ராம | ராம | ஓம் |
| சீதைக்கு இனியவனாய் | ராம | ராம | ராம | ஓம் |
| சீத்தாராமன் ஆனவனே | ராம | ராம | ராம | ஓம் |
| ஊழ்வினையின் வசத்தாலே | ராம | ராம | ராம | ஓம் |
| முடிதுறக்கச் சித்தங்கொண்டாய் | ராம | ராம | ராம | ஓம் |
| தந்தை சொல்லை மதித்து ஐயா | ராம | ராம | ராம | ஓம் |

| | | | | |
|---|---|---|---|---|
| தாய்சொல்லைத் தட்டாது | ராம | ராம | ராம | ஓம் |
| வனவாசம் ஏற்று நின்றாய் | ராம | ராம | ராம | ஓம் |
| வனவாசகாலத்திலே | ராம | ராம | ராம | ஓம் |
| குகனோடு நட்புக்கொண்டாய் | ராம | ராம | ராம | ஓம் |
| நட்புக்கு இனியவனாய் | ராம | ராம | ராம | ஓம் |
| நாடு போற்ற வாழ்ந்தவனே | ராம | ராம | ராம | ஓம் |
| பர்ணசாலை வாழ்வினிலே | ராம | ராம | ராம | ஓம் |
| சோதனை பலவந்தும் | ராம | ராம | ராம | ஓம் |
| சாதனைபுரிந்து நின்றாய் | ராம | ராம | ராம | ஓம் |
| காமுகியாம் சூர்ப்பனகை | ராம | ராம | ராம | ஓம் |
| தங்களை மயக்க முயன்றும் | ராம | ராம | ராம | ஓம் |
| உறுதியாகி உண்மையாகி | ராம | ராம | ராம | ஓம் |
| ஏகபத்தினி விரதம் பூண்டு | ராம | ராம | ராம | ஓம் |
| உலகிற்கு வழிகாட்டி | ராம | ராம | ராம | ஓம் |
| உத்தமராமனாய் வாழ்ந்தவனே | ராம | ராம | ராம | ஓம் |
| உலகு போற்ற வாழ்ந்தவனே | ராம | ராம | ராம | ஓம் |
| சீதையைப் பிரிந்த போது | ராம | ராம | ராம | ஓம் |
| பெருங்கவலை கொண்டு நின்றுராம | | ராம | ராம | ஓம் |
| ஆஞ்சநேய அடியவனோ | ராம | ராம | ராம | ஓம் |
| தங்களின் அவதாிப்பை | ராம | ராம | ராம | ஓம் |
| நன்கறிந்து கொண்டதனால் | ராம | ராம | ராம | ஓம் |
| ராம பக்தனாகி நின்றான் | ராம | ராம | ராம | ஓம் |
| ராம நாம வலிமையினால் | ராம | ராம | ராம | ஓம் |
| ஆஞ்சநேயச் செல்லனவன் | ராம | ராம | ராம | ஓம் |
| கடல் கடந்து இலங்கை சென்றுராம | | ராம | ராம | ஓம் |
| திருமகளாம் தாயைக் கண்டு | ராம | ராம | ராம | ஓம் |
| மீண்டு வந்து நல்லசெய்தி | ராம | ராம | ராம | ஓம் |
| கொடுத்த போது மகிழ்ந்தவனேராம | | ராம | ராம | ஓம் |
| சொல்லி செல்லனென்று அன்று ராம | | ராம | ராம | ஓம் |
| பெரிய பட்டம் கொடுத்த நின்றாய் ராம | | ராம | ராம | ஓம் |
| அனுமனுக்குப் பெருமை கொடுத்தராம | | ராம | ராம | ஓம் |
| அனுமனுக்கு வலிமை கொடுத்த ராம | | ராம | ராம | ஓம் |
| தொண்டனுக்கு இலக்கணமாய்ராம | | ராம | ராம | ஓம் |

| | | | | |
|---|---|---|---|---|
| அனுமனை ஆக்கிவைத்தாய் | ராம | ராம | ராம | ஓம் |
| சிரஞ்சீவி ஆன பேறு | ராம | ராம | ராம | ஓம் |
| அனுமனுக்குக் கொடுத்தவனே | ராம | ராம | ராம | ஓம் |
| அசுரகுலம் அழிப்பதற்கு | ராம | ராம | ராம | ஓம் |
| அவதரித்த பெருமகனே | ராம | ராம | ராம | ஓம் |
| தசாவதாரத்திலே | ராம | ராம | ராம | ஓம் |
| தங்களவதாரமையா | ராம | ராம | ராம | ஓம் |
| தலை சிறந்த அவதாரம் | ராம | ராம | ராம | ஓம் |
| வாழ்ந்து காட்ட வந்தவனே | ராம | ராம | ராம | ஓம் |
| வையமுய்ய வந்தவனே | ராம | ராம | ராம | ஓம் |
| தங்கள் வதார நாளை | ராம | ராம | ராம | ஓம் |
| ராம நவமி என்று சொல்லி | ராம | ராம | ராம | ஓம் |
| கொண்டாடி மகிழ்ந்தோமையா | ராம | ராம | ராம | ஓம் |
| மனம் குளிர அபிசேகம் | ராம | ராம | ராம | ஓம் |
| செலிகுளிர பஞ்சரத்தினம் | ராம | ராம | ராம | ஓம் |
| கண்டுகிளர அலங்காரம் | ராம | ராம | ராம | ஓம் |
| மெய்மறக்க அருட்பூசை | ராம | ராம | ராம | ஓம் |
| எல்லாமே சிறப்பாக | ராம | ராம | ராம | ஓம் |
| எங்கள் பணி நிறைவாச்சு | ராம | ராம | ராம | ஓம் |
| தங்கள் பணி எமைக்காத்தல் | ராம | ராம | ராம | ஓம் |
| இன்பமே சூழவைப்பாய் | ராம | ராம | ராம | ஓம் |
| சரணம் சரணமையா | ராம | ராம | ராம | ஓம் |
| பாதமலர் சரணமையா | ராம | ராம | ராம | ஓம் |

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா

❁❁❁❁❁❁

## ஆஞ்சநேயர் கோபுர குடமுழுக்கு நினைவாக

உருத்திர மூர்த்தங்கொண்ட சுந்தர ஆஞ்சநேயன்
தூலமாம் லிங்கமாகி கோயிலின் வாயில் முன்பு
மாமலை போன்ற வண்ணக் கோபுர மேலே நின்று
ஆசியை வழங்கும் காட்சி காண்பவர் மேலோர் தாமே.

இயற்கையின் வனப்புக்கொண்ட தெய்வீகச் சூழல் தன்னில்
குடியென அமர்ந்த எங்கள் சுந்தர ஆஞ்சநேயன்
தனக்கென கோயிலாக்கி அற்புதக் கோலத்தோடு
கோபுரமே நின்றான் குடிமுழுதாளவென்றே.

கோபுரம் லிங்கமாக மருங்கினில் நாதம் சேர
காண்பவர் மனதில் இராமன் தோற்றமாய் முன்னேநிற்க
கோபுர நடுவில் அனுமன் நின்றிடும் கோலங்காண
இராமனின் நெஞ்சில் அனுமன் நின்றிடும் கோலங்கண்டேன்.

❁❁❁❁❁❁

# அன்ன சத்திரம் சிறப்பாகவும் விரைவாகவும் அமைய வேண்டிப் பாடிய பாடல்

தெய்வீகக் கோயிலென வருபவர்கள் மனம் நினைக்க
அன்புடனே அருள்வளங்கும் அனுமந்தா - உன் தன்
பெருங்கோயில் வருமடியார் அமர்ந்து அமுது செய்ய
திருமடமாய் அமுதூட்டும் மடமடையவை

அருள் நிறைந்த மடமாக வசதிபல சேரந்த்தமையால்
பாருலகம் பார்த்து மகிழ்வடைய - விரைவினிலே
சஞ்சீவி மடமான அமுதளிக்கும் அறச்சொலை
அமைத்திட வேண்டும் பொருளள்ளிக் கொடு

தடைகள் பல வந்தும் தடைதாண்டி மடமயை
தங்களருள் பெருந்துணையாய் நின்றதையா - இனிமேலும்
குறை வேலை பூர்த்தி பெற மனம் மகிழ்ந்து மூலமதில்
சஞ்சீவி அறச்சாலை சிறப்பாக அமுதளிக்கவை.

சஞ்சீவி அறச்சாலை என நாமங்கொண்ட தவச்சாலை
அமுதளிக்கும் பெரும் பணியால் சிறப்படைய - மெய்யடியார்
அனுமந்தன் அடிபணிந்து அருட்சிறப்பாய் அமுதருந்த
அனுமந்தா அருட்சிறப்பாய் வழிநடத்தி நில்.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# ஆஞ்சநேயர் அருட்கோல பஜன்

நாமஞ் சொல்லி நாமஞ்சொல்லி
நடனமாடி வருவார்.

தாளம் போட்டு தன்னை மறந்து
பாதபூசை செய்வார்.

கோலங்காட்டி மௌனியாகி
தியானம் செய்து நிற்பார்.

ராம நாம ஒலியைக் கேட்டால்
காற்றாய்ப் பறந்து வருவார்.

அடியவரென்றால் அன்புடன் அணைத்து
ஆதரவெல்லாம் செய்வார்.

சீதைத்தாய் போல் தாய்க்குலம் வாழ
ஆசீர் வாதம் புரிவார்.

ஆடவற்கெல்லாம் இராமனைப்போலே
வாழ்த்திட வேண்டுமென்பார்.

தூய்மையை விரும்பித் தாய்மையை மதித்து
தாசனாய் முன்னே வருவார்.

வஞ்சகக் கொடியோர் அஞ்சியே ஓட
வீரனாய் நிமிர்ந்த் நிற்பார்.

தவிப்பொடு வந்து விருப்பொடு நின்று
நாமத்தைச் சொன்னால் கேட்பார்.

ஆலயச் சூழல் அருள்மயமாக
அருளொளி பர்பபி நிற்பார்.

கை தொழக் கை தொழ கருணையின் வெள்ளம்
ஆறாய்ப் பாய்ந்திடவைப்பார்.

எம்நிலை நினைந்து அமைதியை வேண்ட
நிரந்தர அமைதி தருவார்.

கொடு நோய் ஒழிய சுக நலம் பெருக
சஞ்சீலியாக வருவார்.

பஞ்சம் ஒழிய பசிப்பிணி அகல
பஞ்சாமிர்தம் தருவார்.

கல்வியும் கலையும் சிறப்புடன் வாழ
கருணை மழை தனைப் பொழிவார்.

தன்னிடம் வந்திடும் அடியவரெல்லாம்
ஒன்றெனச் சேர்ந்திட நினைப்பார்.

ஒன்றெனச் சேர்ந்தவர் திருநாமஞ் சொன்னால்
தன் நிசை மறந்து குதிப்பார்.

குதித்திட குதித்திட குவலயமெங்கும்
குங்குமம் சிறந்தோங்கச் செய்வார்.

சனி தோறும் வந்து கைதொழும் அன்பரை
சனி துன்பம் செய்யாது காப்பார்.

வியாழனில் வந்து வெற்றிலை சூடிட
வாழ்வினில் வெற்றியைச் சேர்ப்பார்.

வேண்டுவார் வேண்டிட வேண்டிடும் வரங்களை
வரையாது வழங்கியே நிற்பார்.

கலிவஞ்சம் போக்க எமைக்காக்க இங்கே
குடியாக வந்தவர் மாருதிதானே.

நாமத்தைச் சொல்லி நாமத்தைச் சொல்லி
ஞாலத்தோர் வாழ்வு சிறந்தோங்க வென்று

ராமனின் நாமத்தைச் சொல்லியே நிற்போம்

சொல்லுவோம் சொல்லுவோம் இராமனின் நாமத்தை
வெல்லுவோம் வெல்லுவோம் வினைப்பகை எல்லாம்

சொல்லுவோம் சொல்லுவோம் இராமனின் நாமத்தை
வெல்லுவோம் வெல்லுவோம் வினைப்பகை எல்லாம்

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# மருதர் பெரும் பதியில் சுந்தர ஆஞ்சநேயர்

01. கற்பனை கடந்தோனாகி
கவி உருத் தாங்கி
உருத்திர மூர்த்தங் கொண்டு
உலகினைக் காக்க வேண்டி
கதையினைக் கையிலேந்தி
கலியுகம் காக்கும் செல்வச்
சுந்தர ஆஞ்சநேயச்
செல்வனே போற்றி போற்றி

02. மருதர்தம் பதியில் கோயில்
மாண்புடன் கொண்டு நின்று
தொழும் கரத் தெய்வமாகி
பக்தியின் பெருமை காட்டி
தியானத்தின் மேன்மைக் காக
கண்மலர் மூடி நின்று
ராம நாமத்தில் கீதம் பாடும்
செல்வச் சுந்தரா போற்றி போற்றி

03. தனிப்பெரும் சிறப்புச் சேர
அருட்பெரும் கோயில் தன்னில்
அஞ்சனை போற்றும் செல்வ
அழகனாய்க் கோலங்கொண்டு
காண்பவர் கண்ணுக் கெல்லாம்
கண் கொளாக் காட்சியாகி
வேண்டிடும் அடியார் தம்மை
ஆண்டிடும் ஐயா போற்றி

04. அருட்பிரவாகம் சேர
அன்பானாய்க் கோலங்கொண்டு
அருட்பெருங்கரத்தைக் கூப்பி
இதையமேல் அணைவு செய்து
அர்ச்சனை மலராய் ராம மந்திரம் சாற்றி
அனைவரும் உய்யும் வண்ணம்
கோலமாங் கோலங்கொண்ட
செல்வச் சுந்தரா போற்றி போற்றி

05. தேடுதற்கரிய செல்வம்
நீயென நாமுனர்ந்து
நாடியே வந்தோம் உன்தன்
அருட்பெருங் கோயில் வாயில்
இன்றெமக்குறுதியாகி
எம் துயர்கடிந்து என்றும்
அருட்பெரு வர்வு தந்து
ஆண்டிடும் செல்வா போற்றி

06. பூசையின் இனிய வேளை திரையது அகலும் காலை
சுந்தரக் கோலமான நின்திருக்கோலங்காண
மனமது உருகுமையா மெய்யது சிலிர்க்கும்
கண்களில் கண்ணீர்ப்பாய் வாயது குளறி
அன்பால் இராமனின், நாமஞ்சொல்ல
நறும்புனைத் தூபம் எங்கள் மனமதைக் கொள்ளை கொள்ள
கண்கவர் ஜோதியாகி கல்மனங்கரைக்கும்
எங்கள் சுந்தரச் செல்வ ஆஞ்சநேயனே போற்றி போற்றி.

❁❁❁❁❁❁

# ராஜ கோபுர அத்திபாரம் நினைவாக பாடல்

அஞ்சனை செல்வனான அருந்தவ மகனே உன்தன்
பேரருள் நிறைந்த கோயில் வாயிலின் முன்பதாக
மாமுகில் தோயும் வண்ணக் கோபுரம் எழுந்து நிற்க
எடுத்திடு கருமமெல்லாம் வெற்றியாய் முடிப்பாய் போற்றி

கோபுரக் காட்சி மக்கள் உள்ளத்தை உருக்க
மேலே ஆடிடும் கொடியே வெற்றி நிட்சயமென்று சொல்லி
மாமலைத்தீபமாக கோபுரமேலே நின்று
ஆசியை வழங்கி எம்மை ஆண்டுருமையா போற்றி.

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா

❁❁❁❁❁❁

## நாம் எடுத்திட்ட கருமங்கள் இனிதாய் விரைவாய் நிறைவேற துணை செய்யும் சூரியதேனுக்காக வணங்கப்படல்.

### சூரியன்

01. ஆயிரங்கரங்கள் நீட்டி அருள் எமக்களிக்க வேண்டி
சீரிய ஏழு அசுவம், அணி செய்யும் தேரின் மேலே
பாரிய வலுவினோடு பக்தருக்கருளும் செல்வச்
சூரியதேவா வெற்றி நிட்சயம் தருவாய் போற்றி.

02. உலகத்தின் இருளை நீக்கும் தேவனே போற்றி
வைகறைக் காலம் வானில் செங்கனி நிகர்ப்பாய் போற்றி
பருவத்தின் காலம் பாரில் சீராய் இயங்கிடவைப்பாய் போற்றி
மாரி மாமழை பொழிய என்றும் காரணம் நீயே போற்றி
பயிர் வழம் செழித்துப் பூத்துக் காய்த்திட வைப்பாய் போற்றி
பாருலகுள்ள மக்கள் சேமங்காத்திடும் தேவா போற்றி
நாளும் ஊருலகனைத்தும் காணும் உத்தமா போற்றி
நாங்கள் எடுத்திட்ட கருமம் சேமமாய் முடிப்பாய் போற்றி

03. காசினி இருளை நீக்கி கதிரொளியாகி எங்கும்
பூசனை உலகோர் போற்ற புசிப்பொடு சுகத்தை தாங்கி
வாசி ஏழுடைய தேர்மேல் மாகிரி வலமாய் வந்த
தேசிகா எம்மைக் காத்து ரட்சிப்பாய்
செங்கதிரவனே போற்றி போற்றி
செங்கதிரவனே போற்றி போற்றி
சீலமாய் வாழ சீரருள் புரியும், ஞாலம்புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தராபோற்றி, விரியா போற்றி
வினைகள் களைவாய்.

ராம நாம சங்கீத்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# அனுமனை உரிமையோடு வேண்டுதல்

உருத்திர சிவமாய் நின்று உலகினைக் காவல் செய்யும்
அருந்தவக் குமாரனான அனுமனே உன்தன் கோயில்
தவிப்போடு தேடி வந்து அடிதொழு மடியார் தங்கள்
துயர்கடல் கடிந்து வாழ்வு துலங்கிடச் செய்வாய்.

பூசைசின் இனிய வேளை பேசிட முடியாக் கோயில்
வடிவுடை மன்னனாகி சிரசினில் முடியும் சூடி
மார்பினில் வண்ணக் கோல நறுமலர் மாலை தாங்கி
திருக்கரங் கூப்பி நின்று திருவருள் செய்வாய் போற்றி.

அடியவர் தகுதி தேர்ந்து அவரவற்கேற்ற கோலம்
வெளிப்படக் காட்டி நின்று வேதனை போக்கி
அருள் மழை பொழிந்து ஆசி நல்கியே நிற்கும்
சுந்தர ஆஞ்சநேயச் செல்வனே போற்றி போற்றி.

திருப்பதி ஐயனைப் போல் அருட்பெருங்கோலங் கொண்டு
நறுமணங்கமும் வண்ண மலர்மாலை பலவும் சூடி
வெற்றிலை மாலையோடு அருஞ்சுகை வடையின் மாலை
அணியெனச் சூடிநின்றும் ஐயனே போற்றி போற்றி.

தங்களின் மேலே அன்புத் தவிப்போடு நாடி வந்து
விருப்புடன் தொண்டு ஆற்றி பாடியே பணிந்து போற்றி
சூடியே நாமபஜன் சிறப்புற நடத்தி நின்றேன்
உரிமையாய் வேண்டுகின்றேன் உன்னருள்வேண்டுமையா

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# சனிபகவான் அஞ்சலி வெண்பா

புரட்டாதித் திங்களெனும் புனிதத் பெருமாதம்
பார்போற்றும் கன்னித் திருமாதம் - இப்புவியில்
சனிபகவான் நட்பை ஞாலத்தோர் பெற்றுய்ய
சிறந்த பெரு நல்மாதம் இது வென்றறி.

புரட்டாதி மாதத்தில் வருகின்ற சனிதனிலே
பேரன்புத் தவிப்பாக நோன்பிருந்து அனுமந்தன்
பெருங்கோயில் நடக்கின்ற சனி சனி கோமமாய்க் கண்டு தொழ
சனிபகவான் அனுக்கிரகம் திண்ணமென்றறி.

அனுமந்தன் சொல்லுகின்ற ரரிஜெபலிமையினால்
பெருவலிமை மிக்க சனிகூட - அவரிடத்தில்
பேரிடும்பை கொடுத்த முடியாது கதிகலங்கி
தானாக விலகி நின்ற செயல் அனுமந்தன் அருளென்றறி.
தனக்கிடும்மை செய்யாத சனிதன்னை விழித்து நின்று
எனக்காக எனைத் தொழுவார் மனங்குளிர - என்றென்றும்
ஏழரை ஆனாலும் அட்டமே ஆனாலும்
ஆட்டாதே அடியவரை நீ

சாயாதேவி செய்தவத்தால் சூரியன் துணை சேர
பெருவலியோடவதரித்த பெரமகனே - அன்போடு
சனிவிரதமிருந்து பெருயாகம் கண்டவதற்கு
ஒரு பொதும் அனுகேன் என்ற வரமருள்.

சிவனாரை நிறைந்து பெரிய தவமிருந்து
பெரவலியைப் பெற்ற பெருமகனே - என் தனக்கு
ஈஸ்வரத்திருநாமம் உண்டென்று உளமகிழ்ந்தேன்
தீண்டாதே எம்வாழ்வில் என்றென்றும் நீ

அனுமந்தன் பெருங்கோயில் ஈசானந்தன்னிலே
தேர்வடிவில் கோயில் கொண்ட தேவனே - தங்களுக்கு
பெருயாகம் செய்து பெருவிழாவும் எடுத்து நின்றே
தீண்டாதே என்றென்றும் எம்வாழ்வில் நீ.

பெருவிழாக்கண்டு உளமுருகி மனம் விரும்பி
கருநீலப் பெருமலராய் அர்ச்சித்தோம் - நீ நினைந்து
மனம் விரும்பி எம் வாழ்வில் நலம் சேர
தீண்டாதே என்றென்றும் எம்வாழ்வில் நீ

சனீஸ்வரப் பிரபுக்கு
அரோகரா அரோகரா

## மருதர் பெரும்பதி ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கும்பாபிசேக தினத்தில் நடைபெறும் சீதா கல்யாண வேளையில் பாடுதற்குரிய ராகவனார் பொன்னூஞ்சல்.

### காப்பு

மருதர் பெரும்பதியாம் மாருதியின் கோயிலிலே
முழுமுதலாய் வீற்றிருக்கும் குஞ்சரனே - உன்னவனாம்
இரகுகுல மாதவன் மேல் அருளூஞ்சல் பாட
இருப்பிடமாய் என் உள்ளமிரு.

### ஊஞ்சல்

01. நால்வகை நெறிகளே நற்தூண்களாக
நல்ஆள்வார் பேரன்பே விட்டமாக
பேரன்பன் மாருதியின் வாலதே கயிறதாக
தசரதனார் அருள் நெஞ்சே பீடமாக
அருளாளர் மனம் விரும்பி அமைத்த ஊஞ்சல்
விருப்பாக நீ அமர்ந்து வினைகள் போக்கி
மக்கள் மனம் குளிர வென்று மனது வைத்து
மருதர் ராகவனே ஆடீர் ஊஞ்சல்.

02. மந்திரமாய் உன்நாமம் அனுமன் சொல்ல
மாதவா்க்ள சேர்ந்தொன்றாய் வாழ்த்துப்பாட
மானிலத்தோர் மலரடியைப் பணிந்து போற்ற
மலராலே தேவர்கள், அர்ச்சித் தேர்த்த
சீதைத்தாய் சிறப்பக, இடமாய்ச்சேர
இலக்குவனும் விருப்பாய், வலமாய்ச்சேர
அருட்பொலிவாய் அன்புடனே, ஊஞ்சல் மேவி
மருதர்பதி ராகவனே, ஆடீர் ஊஞ்சல்.

03. சீதையொடு இலக்குவனும் சிறப்பாய்ச் சேர
பேரன்பான் மாருதியோ தவிப்பாய் நோக்க
கோதாண்டம் கையேந்திக் கோமளம் போல்
மாமன்னர் போலெமக்குக் காட்சிதந்து
மாநிலத்தோர் நலம் வா மனம் விரும்பி
வாழ்க்கையின் நெறி முறையை வாழ்ந்து காட்டி
இல்லறம் சிறக்கவென்று ஊஞ்சல்மேவி
மருதர் பதி ராகவனே ஆடீர் ஊஞ்சலர்.

05. ஜனகன் திருமகளாய் சீதலக்குமியாய்
பூமகளாய் வந்துதித்த அன்புத்தாய்
மாடியிலே நிற்க அருள் நோக்கால் ஆண்டு கொண்டு
கோதண்டம் தனை முரித்து கோதாண்ட ராமனாய்
சீதை தளை மணம்புரிந்து சிறப்பாய் இல்லறத்தை
வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டி நின்றவனே
நாம் வாழப் பொன்னூஞ்சல் இனிதமர்ந்து
மருதர் பதி ராகவனாய் ஆடீர் ஊஞ்சல்.

06. இராவனனைச் சங்கரிக்க வந்த மூர்த்தி
ரகு குலம் பேர்விளங்க வந்த மூர்த்தி
அகலிகையின் சாபம் ஒழித்த மூர்த்தி
அனுமனவன் அருிதயம் அமர்ந்த மூர்த்தி
அன்புத்தாய் சீதை புகழ் தெய்வமூர்த்தி
அருளன்பன் சடாயுதனை ஆண்ட மூர்த்தி
அகிலத்தோர் கையெடுக்க அருள்புரிய
மருதர்பதி ராகவனாய் ஆடீர் ஊஞ்சல்.

07. ரகு குலம் விளங்க வந்த இராகவனார் ஆட ஆட
ஜனக மன்னன் தவச்செல்லி சீதைத்தாய் ஆட ஆட
வில்லவனாம் இலக்குவனும் விரும்பி ஆட ஆட
மாவீர மாருதியும் மகிழ்ந்து ஆட ஆட
மார்பிலணி துளசி மாலை புரண்டு ஆட ஆட
பேரன்புக் காதலர்கள் இசைவாய் ஆட ஆட
பாருலனின் ஆட்டத்தை அடக்கி ஆட ஆள
மருதர் பதி ராகவனே ஆடீப் ஊஞ்சல்.

08. சிரஞ்சீவியான அருளன்பன் மாருதி ஓர் வடந்தொட்டாட்ட
மாருதியின் அடியவராம் சுந்தரனார் ஓர் வடந்தொட்டாட்ட
அருள் நிறைந்த அறவோர்கள் ஓர் வடந்தொட்டாட்ட
அருட்தொண்டு செய்பவர்கள் ஓர் வடந்தொட்டாட்ட
மணவாளக் கோலனாய் மகிழ்வாய் இனிதமர்ந்து
அகிலத்தோர் வாழ அருட்கண்ணால் பார்த்து
அடியவர்கள் வாழ்வினிலே அச்சமில்லையென
மருதர் பதிராகவனே ஆடீர் ஊஞ்சல்.

09. தசாவரார சுந்தரனே ராகவனே ஆடீர் ஊஞ்சல்
தசக்கிரீவன் சங்கார மூர்த்தனே ஆடீர் ஊஞ்சல்
தரணியது பிழைக்க வழிகாட்டி நிற்கும் தத்துவனே ஆடீர் ஊஞ்சல்
தாரணிந்து முடிசூடித் தரணி ஆண்ட அற்புதனே ஆடீர் ஊஞ்சல்
நாம் வணங்கி உய்வடைய மாருதியைத் தந்தவனே ஆடீர் ஊஞ்சல்
ஊருலகம் சீராகி உயர்ச்சி பெற வந்தவனே ஆடீர் ஊஞ்சல்
மருதர் பதி வதிந்துறையும் இராகவனே ஆடீர் ஊஞ்சல்.

10. அருள் நிறைந்த சற்குருவாம் சுந்தரரும் தவவலியால்
பேரன்பன் மாருதிக்குக் கோயிலமைக்க மனம் விரும்ப
துணையிருந்து இடங்காட்டிக் கோயில் கொண்ட பெருமகனே
உன் அன்பன் மாருதியின் கோயில் குடமுழுக்கு நன்நாளில்
தினம் தினமும் மாருதியின் இதயத்தில் இருந்தாடும் ராகவனே
நாம் காண சுந்தரனாம் மாருதியின் பெருங்கோயில் மண்டபத்தில்
இனம் வாழ, இடர்தீர, இன்பம் பொங்க, மங்களமாய் ஊஞ்சல்மேவி
மருதர் பதி ராகவனே ஆடீர் ஊஞ்சல்.

## வாழ்த்து

அருள்நெறி பிறளாது அருள் வேதம் சொல்லும் அந்தணர்கள் வாழி
திருவருள் துணையென்று தினம் இறைஞ்சும் அடியவர்கள் வாழி
பெருநெறியியே மந்திரமாய்க் கொண்டோர்கள் வாழி
அறநெறியில் பெருளீட்டி அறம் செய்வோர் வாழி

பசுவதையை வெறுத்தொதுக்கும் பண்பாளர் வாழி
செய்தொழிலைச் சிறப்பாகச் செய்வோர்கள் வாழி
ஆலயத்தில் பெருவிருப்பாய்ப்பணி செய்வோர்கள் வாழி
அயோத்தி வளர் சுந்தரனாம் ராகவனும் வாழி வாழி.

**மங்களம்**

ரகுகுல ராமனுக்கு ஜெயமங்களம்
நல்ல முசுகுல சுந்தரனார்க்கு சுபமங்களம்
மாருதி தாசர்கட்கு அருள் மங்களம்
தினம் அடிபணியும் அன்பர்கட்கு அருள் மங்களம்.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

## அனுமந்தன் கோயிலில் சமகால வழிபாட்டு முறை

01. மருதர் பெரும்பதியில் அருள்மலைக்குன்றாக
அனுமந்தன் காட்சி தரும் திருக்கோலம்
காண்பவர்கள் மனமுருக கண்டோர்கள் களிப்படைய
அனைவற்கு அருள் புரியும் திருக்கோலம் அது என்றறி

02. தவிப்போடு வந்து அருட்கோலம் கண்டதுமே
விருப்போடு திருநாமம் சொல்லி நிற்க
கணப்பொழுதும் தரியாமல் கைகொடுக்கும் தெய்வம்
அருள் வழங்கும் அனுமந்தத் தெய்வம் என்றறி.

03. அனுமந்தன் பதிவந்து அவப் பொழுது போக்காது
அவன் போலத் தவம் செய்ய நினைத்து விட்டால்
கணப் பொழுதும் தரியாமல் கைகொடுக்கும் தெய்வம்
அருள் வழங்கும் அனுமந்தத் தெய்வம் என்றறி.

04. அனுமந்தன் பதிவந்து அவன் நாமம் சொல்லாது
அவப்பொழுது போக்கி அலமந்து
திருத்தூபிச் சுவரினிலே வரம் வேண்டி எழுத
அனுமந்தன் பெருங்கோபங்கொள்வானறி.

05. ஐம்புலனை அடக்கி அரியதவம் செய்கின்ற
அனுமந்தன் கோயில் வந்ததுமே உனை அடக்கி
பணிவாய் அடக்கமுடன் முன் நின்று
பலகாலும் சொல்லையா இராமன் திருநாமம் நீ

06. சனிக்கிழமை என்றால் அனுமந்தன் திருமுழுக்க
இருள் முழுக்குக் கண்டு அகம் குளிர்ந்து
பெரும் பூசை வேளை அருட்கோலங்கணடு
அடிபணிய அனுமந்தன் அருள்வானென்றறி.

07. வெற்றி நலம் வேண்டி வெற்றிலையால் மாலை சூட்டி
குங்குமத்தால் மனங்குளிர அர்ச்சித்தால்
சீதைத்தாய் விரும்பும் சிரஞ்சீவி அனுமந்தன்
வழங்கிடுவான் பெருவெற்றி உனக்கென்றறி.

08. வைகறையில் துயிலெழுந்து மருதர்பதி வந்து
அருன்சேர நின்று அருட்பள்ளி எழுச்சிசொல
விருப்போடு அனுமந்தச் செல்வன் திருச்செவியால் கேட்டு
நாள் முழுதும் நலம் செய்வானென்றறி.

09. கோபுரத்தின் மேலே மாதவனாய் நின்று
அனைவரையும் ஆட்கொள்ளும் அனுமந்தன்
தனைப்பெரிதும் நினைப்பவர்கள் மனக்கோயில்
கணப்பொழுதும் பரியானென்றறி.

10. திருக்கதவம் திறக்க அருட்கோலங்காட்டி
அனைவரையும் ஆட்கொள்ளும் அனுமந்தன்
தனைப்பெரிதும் நினைப்பவர்கள் மனக்கோயில்
கணப்பொழுதும் பிரியா னென்றறி.

11. திருப்பதியோ இதுவென்று அடியவர்கள் மனம் நினைக்க
அருட்கோலம் காட்டி நிற்கும் அனுமந்தா
உன்தன் பதிப் பெருமை உலகறிந்து கையெடுக்க
திருக்கோல சுந்தரனாய் அருள்வழங்கி நில்.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# இராம நாம சிறப்பு பஜன்

இராம இராம இராம இராம இராம இராம இராம ஓம்
இராம இராம இராம இராம இராம இராம இராம ஓம்
அருள் நிறைந்த மந்திரம் இராம இராம இராம ஓம்
பொருள் பொதிந்த மந்திரம் இராம இராம இராம ஓம்
ஈரெழுத்து மந்திரம் இராம இராம இராம ஓம்
ரட்சிக்கும் மந்திரம் இராம இராம இராம ஓம்
அனுமன் விரும்பும் மந்திரம் இராம இராம இராம ஓம்
சுகமளிக்கும் மந்திரம் இராம இராம இராம ஓம்
ஜெகம் போற்றும் மந்திரம் இராம இராம இராம ஓம்
ஜெயமளிக்கும் மந்திரம் இராம இராம இராம ஓம்
இன்பமான வாழ்வு தரும் இராம இராம இராம ஓம்
இதயம் நிறைந்த வாழ்வுதரும் இராம இராம இராம ஓம்
நோய் பிணிகள் தீர்த்து வைக்கும் இராம இராம இராம ஓம்
வச்சிரம் போல் தேகம் தரும் இராம இராம இராம ஓம்
வறுமைப்பிணி தீர்த்து வைக்கும் இராம இராம இராம ஓம்
இயற்கை அனர்த்தம் ஒளித்தருளும்இராம இராம இராம ஓம்
இறைபக்தி வளர வைக்கும் இராம இராம இராம ஓம்
செங்கோலாட்சி நிலைக்கலைக்கும்இராம இராம இராம ஓம்
சேமநலங்காத்து நிற்கும் இராம இராம இராம ஓம்
சொல்லிடுவோம் காலமெல்லாம் இராம இராம இராம ஓம்
வென்றிடுவோம் வினைப்பகையை இராம இராம இராம ஓம்
சரணம் சரணமையா இராம இராம இராம ஓம்
பாதமலர் சரணமையா இராம இராம இராம ஓம்

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா

❀❀❀❀❀❀

# மாருதியின் அருள்பெற நாம் செய்ய வேண்டியது

மாதவ சுந்தர மாருதியே
மருதர் பெலும் பதி மாருதியே
தாயவள் அஞ்சனை தவப்பயனே
தாரணி போற்றும் தவநிதியே.

கோலமாங்கோலங்கொண்டு வந்தாய்
தவப்பெரு வடிவ விளக்க மானாய்
தியானத்தின் நிலையை நாம் காண
நித்திய தியாத்தில் நிற்கின்றாய்.

நாமத்தின் மகிமையை நாமுணர
ராமனின் நாமத்தைச் சொல்லி நின்று
பாவத்தைப் போக்க வழிகாட்டி
மாநிலங்காக்கும் மாருதியே.

மாருதி அருள் பெற வேண்டுமென்றால்
வைகறைப் பொழுதில் விழித்தெழுந்து
அகம்புறம் தூய்மை உடையவராய்
தவிப்புடன் மாருதிப் பதிவந்து.
அருட்பள்ளி எழுச்சி அதுகண்டால்
அகன்றிடும் எங்கள் பாவவினை
அனுமனின் பேர்தனை நாம் சொன்னால்
கலியும் அஞ்சி அகன்றிடுவான்.

வேண்டிடும் வரங்களைப் பெறுவதற்கு
தூபியில் எழுதுதல் வீண் வேலை
எழுதிடும் பாவத்தைச் செய்யாமல்
தியானத்தில் சிறிது போதிருந்து

ராமனின் நாமத்தை நாம் சொல்ல
நாமத்தில் விருப்புள்ள மன்னவனார்
விருப்புடன் எங்களை நாடி வந்து
எண்ணிய முடித்து அருள்புரிவான்.

மாருதி மாதவன் தூயவனே
மாருதி கோயில் வந்தவுடன்
காலது அலம்பி தூய்மையுடன்
படியேறி வரும் போது பக்தியுடன்

காமக்குரோதம் தனை விடுத்து
சமகால துன்பத்தை மனம் நினைந்து
சில சின்னம் தன்னை விருப்போடு
சிறப்பாக அணிந்து மகிழ்வெய்தி

முழுந்தாளில் பணிந்து கை கூப்பி
மேலங்கி இல்லாது ஆடவர்கள்
இராமனின் நாமத்தை உச்சரித்து
நேர்த்தியாய் பலமுறை வீதி சுற்றி

அபிசேகம் கண்டு அகம் குளிர்ந்து
அமைதியைப் பேணி வலம் வந்து
திருமருந்தாகத் தீர்த்தத்தை
தவிப்போடு அருந்தி அகம் குளிர்ந்து

பூசைப் பெருவேளை முன்பாக
சனி தொறும் நடக்கின்ற பஜனையிலே
அனைவரம் தப்பாமல் நாமஞ்சொல்ல
நாமத்தை விரம்பும் அனுமந்தன் அருள் தரவருவான் இது திண்ணம்.

பூசைப்பெருவேளைத் திருக்கோலம்
கண்டவர் அனைவரும் தமை மறந்து
ராமா ராமா என்று சொல்ல
மாருதி வரந்தர முன் நிற்பான்.

கதவம் திறக்க கதிரவன் போல்
அஞ்சனை செல்வன் அனுமந்தன்
அருந்தவக் கோலம் காட்டி நிற்பான்
கண்டவர் உள்ளம் பரவசமே

பரவச நோம் வரம் வேண்ட
சிறந்த தென்பதை நாம் நினைந்து
காதலாகியே கசிந்து நின்று
கண்ணீர் மல்க நாம் தொழுவோம்.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா.

❀❀❀❀❀❀

## அன்னசத்திரம் சிறப்பாகவும் விரைவாகவும் அமைய அனுமனை வேண்டுதல் செய்தல

தெய்வீகக் கோயிலென வருபவர்கள் மனம் நினைக்க
அன்புடனே அருள் வழங்கும் அனுமந்தா உன்தன்
பெருங்கோயில் வருமடியார் அமர்ந்து அமுது செய்ய
திருமடமாய் அமுதூட்டும் மடம் அமையவை.

அருள் நிறைந்த மடமாக வசதிபல சேர்ந்தமையால்
பாருலகம் பார்த்து மகிழ்வடைய - விரைவினிலே
அமுத சுரபியென அமுதளிக்கும் அறச்சாலை
அமைத்திடவே வேண்டும் பொருள்ளிக் கொடு

இலட்சார்ச்சனைக் காலம் ரட்சித்து எமைக்காக்க
மங்கள மாங்மடமும் பூர்த்தி பெற மனங்குளிர்ந்து
அமுதளிக்கும் அறப்பணியை சிறப்பாக நிறைவாக
மங்களமாய் அருள்மயமாய் ஆரம்பமாகவை.

ஆரம்பநாள் முதலாய் அமுதளிக்கும் முன்பாக
பெருவிருப்பாய் அன்போடு அழுதுமனை - பக்தியும்
படைத்து பரவசமாய் பாடிப்பணிந்த பின்னே
அருமருந்தைப் பெருவிருந்தாய் அடியவற்கருள்.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

## சனிபகவான் அஞ்சலி

சனிபகவானே சனிபகவானே
திருவடி பணிந்தோம் சனிபகவானே
திருவுளமிரங்கி சனிபகவானே
நல்நோக்கருளி சனிபகவானே
நல்லது நடக்க சனிபகவானே
நற்துணை செய்வாய் சனிபகவானே
சூரிய குமாரனே சனிபகவானே
பாரிய வலுவுடை சனிபகவானே
சாயதேவிக்கு சனிபகவானே
இனியநற் குமாரனே சனிபகவானே
இறைவனைப் போலே சனிபகவானே
ஈஸ்வரநாமம் சனிபகவானே
கொண்ட எம்பரனே சனிபகவானே
நவக்கிரகத்தினுள் சனிபகவானே
பாரிய வலுவுடை சனிபகவானே
தங்களின் பார்வையில் சனிபகவானே
தப்பினோர் இருவரே சனிபகவானே
இருவருள் ஒருவனாம் சனிபகவானே
ஆஞ்சநேயனே சனிபகவானே
அனுமனைப் பற்றிட சனிபகவானே
காவலிலிருந்து சனிபகவானே
சேது அணை கட்டும் போது சனிபகவானே

அனுமனைப் பற்றிட சனிபகவானே
தாங்கள் வந்த போது சனிபகவானே
பக்த அனுமன் சனிபகவானே
தங்களை விழித்து சனிபகவானே
நெஞ்சிலே ராமன் சனிபகவானே
நெஞ்சிலே இடமில்லை சனிபகவானே
பாதத்தில் இருப்பது சனிபகவானே
தங்களுக்கழகல்ல சனிபகவானே
சிரசிலே இருந்திடல் சனிபகவானே
சிறந்தது தானே சனிபகவானே
என்றிட்ட வேளை சனிபகவானே
சிரசிலே அமர்ந்தாய் சனிபகவானே
அனுமனே துணிவாய் சனிபகவானே
அணை கட்டும் கல்லை சனிபகவானே
சிரசிலே வைத்து சனிபகவானே
இடுக்கண் செய்திட சனிபகவானே
தாங்களாய் அனுமனை சனிபகவானே
விலகிச் செய்கையில் சனிபகவானே
நில்லென்று சொல்லி சனிபகவானே
என்னைப்போலே சனிபகவானே
தங்களின் பார்வையால் சனிபகவானே
என்னை நினைப்பவர் சனிபகவானே
அல்லல் படாது சனிபகவானே
அருள் செய்யவேண்டும் சனிபகவானே
என்று வேண்டிட சனிபகவானே
சம்மதம் சொன்னாய் சனிபகவானே
இந்த வரலாற்றை சனிபகவானே
இந்த வரலாற்றை சனிபகவானே
நாம் அறிந்த படியால் சனிபகவானே
அனுமனை அடைந்தோம் சனிபகவானே
அனுமனை வணங்கி சனிபகவானே
ஆசியைப் பெற்று சனிபகவானே
தங்களின் கோமம் சனிபகவானே
அபிசேக ஆராதனை சனிபகவானே
அனைத்திலும் கலந்து சனிபகவானே
அருள் நிலை கொண்டோம் சனிபகவானே
அனுமனுக்காக சனிபகவானே
அடியவற்றாக சனிபகவானே

மனமது இரங்கி சனிபகவானே
நல்நோக்கருளி சனிபகவானே
நலம் சேரவைப்பாய் சனிபகவானே
புரட்டாதி மாதம் சனிபகவானே
வந்திடும் சனிதொறும் சனிபகவானே
தங்களை நினைந்து சனிபகவானே
வழிபாடு செய்தோம் சனிபகவானே
திண்ணமாய் அருள்வாய் சனிபகவானே
ஏழரை ஆனாலும் சனிபகவானே
அட்டமமானாலும் சனிபகவானே
கண்டமாதானாலும் சனிபகவானே
யாவும் நலம் செய சனிபகவானே
நற்பார்வை அருள்வாய் சனிபகவானே
கொடுப்பவன் நீயே சனிபகவானே
கெடுப்பவன் நீயே சனிபகவானே
எப்படி இருப்பினும் சனிபகவானே
நம்பிக்கையோடு சனிபகவானே
விரதமிருந்து சனிபகவானே
யாகம் கண்டு சனிபகவானே
எள்சட்டி எரித்து சனிபகவானே
எட்சாதம் ஒரு பிடி சனிபகவானே
தங்களின் வாகனம் சனிபகவானே
உண்டிடும் படியாக சனிபகவானே
அன்புடன் வைத்து சனிபகவானே
அடிமலர் பணிந்தோம் சனிபகவானே
இன்றொடு தோஷங்கள் சனிபகவானே
தீர்ந்தன தீர்ந்தன சனிபகவானே
என்று நாம நினைத்தோம் சனிபகவானே
காரியசித்தியும் சனிபகவானே
நலங்களும் அருள்வாய் சனிபகவானே
மங்களம் பொங்கிட சனிபகவானே
பார்வைபடாது சனிபகவானே
ஆசீர்வதிப்பாய் சனிபகவானே

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# பஞ்சமுக ஆஞ்சநேயர் வார்க்கப்பட்ட போது சிறப்பாக அமைய வழிபாட்டு ஆராதனைப் (பங்குனி உத்தரம்) பாடல்

01. தலை சிறந்த பெரும் பதியாம் மருதர் பெரும் பதியில்
அருளொயியாய்ப் பெருவெளியில் அமர்ந்தவனே - உன் பதியில்
அருட்பெருக்கம் கொண்ட தவக்கோலத்தோடு
பஞ்சமுக சுந்தரனாய் அருள் சேரப் பெருங்காட்சிதா.

02. கோணமலைப் பெரும் பதியில் தபசியவர் படைப்பாலே
அருட்கோலங்கொண்டு கருப்பொருளாய் - அருள் சேர
பங்குனி உத்தரத்தில் அருட்சிறப்பாய் அவதரித்து
பத்தர் குலம் மனங்குளிர பஞ்சமுக சுந்தரனாய் வெளிப்பட்டுவார்.

03. பஞ்சமுகத்தழகு பங்குவமாய்க் காட்சிதர
தசக்கரங்கள் அருட்கோலம் காட்டி நிற்க மனங்குளிர
மார்பழகும், கோளழகும், உடலழகும் சிறப்பாக
அடியவர்கள் மனமுருக்கும் தவக்கோலனாகிவா

04. அசுவமுக சுந்தரனாய் அரிமா முகம் சேர
அனுமனை அருட்கோல முகம் காட்டி - சிறப்பாக
கருடமுகம் கண்டு அடியவர்கள் அகம் குளிர
வராக முகம் சேர்ந்த பஞ்சமுகா திருவடிகள் சரண்.

05. பஞ்சமுகத் தழகோட பக்குவமாய்த் திருக்கரத்தில்
அற்புதமாய் ஆயுதங்கள் சிறப்பாக - மார்பினிலே
மலர்மாலையோடு மணிமாலை சிறப்பாக
பட்டாமைப் பேரழகு பெருஞ்சிறப்பு என்பதனைப் பார்

06. அஞ்சலென அபயகரம் அருள் நிறைவாய்க் கும்பமுடன்
வீரவாள் வினையறுக்கும் வலுவோடு பெருஞ்சிறப்பாய்
அருள் நிறைந்த வலுவோடு கதமேந்தி
சக்கரத்தால் சங்கடங்கள் தீர்ப்பவனே திருவடிகள் சரண்

07. திரிசூல நாயனனாய் அருட்கோலங்கொண்டு
தீவினையை அழித்தொழிக்க கரத்தினிலே சிறப்பாக
கோடரியைக் கையேந்தி கேடயமும் சங்கும்
சிறப்பாகக் குத்துவாள் கொண்டவனே திருவடிகள் சரண்.

**சிறப்புப் பாடல்**

பஞ்சமுக அனுமனென உலகம் உனைப் புகழ்ந்துரைக்க
பக்குவமாய் உன் கோலம் அமைக்கின்ற தபசியவர்
திருநாமம் சிவசோதி லிங்கநாதன் சிவமாக
திருஉருவம் வார்க்கின்ற கோணமலை அப்பன் சிவமாக
அருள் பொங்கும் காளியம்மை அருட்சக்திச் சிவமாக
அஞ்சலென அபயம் தரும் அனுமந்தன் உருத்திர சிவமாக
அருள் சேர அமைந்த செயல் தலையாய அடியவரின்
பேரன்புத் தவிப்பான சிவன் செயலென்றே அறி.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

# சித்திரத்தேர் சிறப்பாகவும் விரைவாகவும் அமைய வேண்டுதல் செய்யும் பாடல்

01. ஆஞ்சநேயச் செல்வனே அருள் நிறைந்த தெய்வமே
ஆலயத்தில் அருளொளியாய்க்குடியமர்ந்த தெய்வமே
அருள் நிறைந்த பூசை ஏற்று அருள்வழங்கும் தெய்வமே
அன்பர் இதயம் கோயில் கொண்ட அன்பு நிறை தெய்வமே.

02. தங்கள் மேலே அன்பு கொண்ட தலை சிறந்த குடும்பமென்று
தங்களைத் தேரில் வைத்து காணமனம் நினைத்ததையா
தேரமைக்க நல்லறோம் இன்று என்று மனம் நினைந்து
கால்கோள் விழாவும் அருள்மயமாய் அமைந்ததையா.

03. சித்திரத்தேர் அற்புதமாய் அருள் மயமாய் அமைய வேண்டும்
வேண்டும் பொருள் எல்லாமே இலகுவாகக் கிடைக்க வேண்டும்
துரித கதியில் வேலை எல்லாம் சிறப்பாக முடிவடைய
வெள்ளோட்ட தரிசனத்தை பக்த கோடி காண வேண்டும்.

04. சித்திரத்தேர் நான்கு சில்லும் நாலுவகை நெறிகளாக
சில்லை இணைக்கும் அச்சாக இருவினைகள் ஒப்பாக
நான்கு சில்லும் இணைந்து கொள்ள அன்பும் பண்பும் துணை
அடித்தளத்தின் அழகு காட்டும் அனுமந்தன் வரலாறாய்
சித்திரத்தேர் அமைய வேண்டும் சிறப்பாக ஒளிரவேண்டும்.

05. அடித்தளத்தின் மேலாக அருள்ஞானப் பீடம் சேர
பீடத்தின் பக்கம் தோறும் பவளக்கால் தூண்களாக
உருத்திராட்ச அமைப்புச்சேர பவளக்கால் விளங்கி நிற்க
கால்களின் மேலதாக மஞ்சக்காட்சிகாண வேண்டும்.

06. படிக்கும் படி ஒடுங்கிச் செல்ல பக்குவமாய்த் தேரின் கோலம்
அற்புதமாய்க் காட்சிதர அடியவான் மனம் சிலிர்க்க
ஒடுக்கத்தின் முடிவாக முடியின் காட்சி கண்கவர
வண்ணங்கொண்ட பொற்தேரராய் சித்திரத்தேர் அமைய வேண்டும்.

07. அஞ்சனைத்தாய் தந்த செல்வ அனுமந்த சுந்தரனே
பஞ்சமுக சுந்தரனாய் நீயும் கோலங்கொண்டு வந்து
மார்கழியாயம் மூலந்தன்னில் மக்கள் மனம் குளிர்வடைய
சித்திரத்தேர் மீதமர்ந்து வீதியுலா நீ வருவாய்.

08. மர்கழியாம் மூலந்தன்னில் மக்கள் மனம் குளிர்வடைய
சித்திரத்தேர் சிறப்பாக வீதியிலே ஊர்ந்து செல்ல
வாழ் நாளில் பட்ட துன்பம் அத்தனையும் மறைந்து போக
பெருமை சேர உரிமையோடு தலை நிமிர்ந்து வாழவைப்பாய்

09. சித்திரத்தேர் செய்த குடும்பம் அருள் நிறைந்த வாழ்வு பெற
பஞ்சமுக சுந்தரனை வார்த்தவர்கள் உயர்வடைய
தொண்டு செய்த குடும்பங்கள் பேரின்பவாழ்வு பெற
குருநாதன் குடும்பமெல்லாம் உயர்வாக வாழி வாழி.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

## ராம நவமி சிறப்பாக அருள்சேர

மாவீர சுந்தரனே மாருதியே அனுமந்தா
அனுதினமும் அடிமலரை நான் பணிவேன் - உன் தெய்வம்
அவதரித்த திருநாளாம் ராம நவமிதனை
அடியவர்கள் அருள்மயமாக் கொண்டாடவை.

நவமியிலே ராமனுக்கு நல்லபடி அபிசேகம்
நிறைவோடு சிறப்பாக நடக்கையிலே - கலைஞர்கள்
தூயுபேரன்புத் தவிப்போடு ஒன்றாக அருள் பொங்க
அருள் சேர்ந்த தியாகப் பிரமத்தின் பஞ்சரத்தினமாம் பாடலை ஓதவை

அபிசேகக் காட்சி அடியவரின் மனமுழுக்க
இசைவேள்வி தேளாறாய்ப்பாய்ந்து செல்ல அருட் சூழல்
அடியவர்கள் அனைவரையும் மெய்மறக்கச் செய்து
ஒரு மனமாய் அனைவரையும் கையெடுக்கவை.

கையெடுப்போர் பலனாக கைமேற்பலன் கிடைக்க
அருள்புரிய வேண்டும் எங்கள் அனுமந்தா - என் தெய்வம்
ராமனவன் நவமி தனை நினைந்து கையெடுத்தோம்
மனமிரங்கி எங்கள் மனத்துயரம் அத்தனையும் தீர்.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

## வராறு பல படைத்த வீர ஆஞ்சநேயர்

நினைத்திட முடியா பக்தி நிலையிலே சிறந்து
நித்தமும் ராம நாமம் ஓதியே மகிழ்ந்து
இராமனுக்கினிய செல்வத் தொண்டனாயிருந்து
இராமனுக்கினிய கோயில் இதயமே யாக்கி

01. தீயதை அழிக்க கையிலே கதையும் கொண்டு
கற்பக தருவாய் அன்பர்க்கருள் தரக்கோயில்
கொண்டிட நினைந்து மருதர் தம் பதியில் கோயில்
மாண்புடன் கொண்டு நிற்கும் மாதவா போற்றி போற்றி.

02. அஞ்சனை தவத்தால் வாயு மைந்தனாய்த் தோன்றி
வையகம் உய்ய அன்று இராம பக்தனாய் வாழ்ந்து காட்டி
சீதைத்தாய் சிறையை மீட்க இராமதூதனாய்ச் சென்று
தீயதை அழித்து தாயின் திருநிறை ஆசியோடு

இராமனின் முன்னாய் வந்து தாயவள் கொடுத்து நின்ற
பெருமையில் சிறந்தான விரலணிகொடுத்து
பாமலர் பணிந்து கற்பெனப்படுவதொன்றைக்
கண்டனன் என்ற அனுமனே சொல்லின் செவ்வனே போற்றி

03. இராமநாதமே உலகில் வல்லமை படைத்த தென்று
நம்பிக்கை தோன்ற நாளும் இராமநாமமே சொல்லி
சாதனை பலவும் செய்து தூய்மையும் பணிவுங்கொண்டு
பக்தனாய்த், தொண்டனாகி, வீரனாய் வாழ்ந்து காட்டி
சீதையைத் தாயின் மேலாய் இராமனைத் தெய்வமாக
பணிந்துமே நாளும் போற்றி இரகுகுலம் காப்பதற்கு
செயற்பரும் கொண்டு செய்த தொண்டனே
வீர அனுமனே உன்தன் விரைகழல் போற்றி போற்றி.

04. உருத்திர மூர்த்தியாகி உலகினைக் காக்கவேண்டி
மாருதியாகி மேலாம் மாதவக் கோலங்கொண்டு
இராவணன் மாண்டுபோக இராமரின் துணையாய் நின்று
சஞ்சீவி கொண்டு வந்து இலக்குவன் உயிரைக்காத்து
மாயையில் வல்ல மயிலி ராவணன் மாண்டுபோக
மதியினால் போரைச் செய்து ஈருயிர் காத்து நின்று
பரதனைக் காப்பதற்குப் பறந்துமே செய்தி கொண்டு
தருணத்தில் உயிரைக் காத்த உத்தமா போற்றி போற்றி.

05. கலியவன் பிடியில் நின்றும் கலியுகம் காக்கவென்றே
சிரஞ்சீவயாக்கி உம்மை இப்புவி தன்னில் வைத்தான்
தனுவீரன் எண்ணம் போலே தனுஸ்கோடி தன்னைச் சார்
கடுந்தவம் செய்த வேளை அர்சுனன் செருக்கை வென்று
அடக்கமே எம்மை என்றும் உயர்த்திடும் என்ற உண்மை
அவனியோர் அறியவைத்து பக்தியின் சிகரமாகி
கதலிசேர் வனத்தில் என்றும் நித்திய தவமிருக்கும்
சுந்தரச் செல்வ அனுமனே போற்றி போற்றி.

06. இராமனின் காதை தன்னில் முக்கிய பாத்திரமாகி
இராமனால் போற்றும் சுந்தர வீரனாகி
இராமனுக்காக வாழ்ந்து இராமன தாஞ்ஞை போல
சிரஞ்சீவியாகி என்றும் கதலியாம் வனத்தில்
கண்மூளத் தியானம் பேணி பக்தனாய் வாழ்ந்து காட்டி
ராம நாம ஒலியை காதில் வீழ்ந்தால் அங்குடன் தாவிச் சென்று
குறையது கேட்டு அருளிக்காக்கும் செவ்வனே
அஞ்சனைத்தாய் போற்றும் மைந்தனே போற்றி போற்றி.

07. சனிப் பெரும் கிரகந்தன்னை மதியினால் வென்று
என்றும் சனியதன் தாக்கமின்றி அன்பினால் வென்று
தம்மை என்றுமே நினைவாக தம்மை சனியிடமிருந்து காத்து
அச்சமும் துயரும் போக்கி அருந்துணையாகி நின்று
பூயைின் வேளை நல்ல அருட்பெருங் கோலங்காட்டி
அர்ச்சனை செய்வார் வாழ்வில் ஆறுதல் கொடுத்து
வெற்றிலை மாலை சூட வெற்றிகள் வழங்கி நிற்கும்
சீதையின் ஆசி பெற்ற செல்வனே போற்றி போற்றி.

08. காலத்தின் தேவை நோக்கி கலிவஞ்சம் போக்க என்று
றம்பொடைக் குன்றில் நின்று தீயதை ஒழிக்க என்றும்
இராமனின் நாமம் பாடி அருட்பெரும் பூசை ஏற்று
கை தொழ வருவார் கவலைகள் அனைத்தும் போக்கி
நித்தமும் நெஞ்சில் இராமனைச் சுமந்து நின்று
பக்தியை வளர்ப்பதற்கு பக்தனாய்க் கோலங்கொண்டு
கலியதன் தாக்கம் போக்க கதை அதை ஏந்தி என்றும்
அருட்பெருங்காவல் காக்கும் அனுமனே போற்றி போற்றி.

09. சுந்தரக் குருக்கள் நெஞ்சை உறைவிடம் கொண்டு
வேண்டிய நேரந்தன்னில் நல்லதோர் இடத்தைத் தேர்ந்து
சூழலும் தலமும் சேர்ந்த அரியதோர் இடமதான
மருதனார் மடத்தில் கோயில் மாண்புடன் கொண்டு
சுந்தர ஆஞ்சநேய நாமமே பூண்டு என்றும்
கோபுரம் மலையாய்த் தோன்ற கோபுரமே நின்று

குடிமுழுதாண்டு சனிதொறும் றாமபஜனையைக் கேட்டு
ஆசியை வழங்கும் செல்வச் சுந்தரர் போற்றி போற்றி.

10. பஞ்சமுக சுந்தரனாய்மெகுவலையில் கோயில் கொண்டு
சுவாமி சந்திரசேகரனார் வழிபாட்டால் அருள் பொங்கிப் பாடல்
அருட்கோயில் அமைப்பெல்லாம் கண்ணுக்கு விருந்தாக
அர்ச்சனையின் சிறப்பால் அன்பர் மனங்குளிர
அர்ச்சனையில் நமகதன்னை அடியவர்கள் சேர்ந்து பாட
வழிபாட்டில் அனைவருமே கலந்த தன்மை சிறப்பாய்த் தோன்ற
எல்லோரும் மனமுருக அருள் பொங்கிப்பாய அருள்
பஞ்சமுக சுந்தரனே மாதவனே மாருதியே போற்றி போற்றி.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

## மக்களுக்காக வாழும் தெய்வ மாருதி

கற்பனை கடந்தோனாகி கவி உருத்தாங்கி
நெஞ்சில் இராமனை இருத்தி - என்றும்
இராம மந்திரம் சொல்லி வாழ்வில்
அற்புதம் பலவும் செய்யும் அண்ணலே போற்றி போற்றி.

கலியுகம் தன்னில் மக்கள் கடவுளை வணங்க
காலம் கிடைத்திடா தென்பதாலே மக்களுக்காக வேண்டி
நெஞ்சிலே இராமன் கோயில் நாவிலே ராம நாமம்
சொல்லியே வாழ்ந்து காட்டும் தெய்வமே போற்றி போற்றி

கதையது கையிலின்றிக் கைகளைச் சேர்த்துக் கூப்பி
பணிவுடன் வணங்கிநின்று தொ்ழும் முறை காட்டி என்றும்
அடியவர் வாழ்வில் வாழ்முறை காட்டி நிற்கும்
அண்ணலே ஆஞ்சநேயக் கடவுளே போற்றி போற்றி.

இராமனுக்கினிய தொண்டன் ஆகியே வாழ்ந்து வாழ்வில்
தாங்கள் செய் அற்புதங்கள் எம்மால் சொல்லிட முடியுமோ
ராமனின் எண்ணம் போலே சிரஞ்சீவியாக வாழ்ந்து
மக்களின் சேவை செய்யும் மாருதி ராஜா போற்றி.

கூரிய மதியினாலே பாரிய கருமமெல்லாம் சிறப்புறச்செய்து
பாரிய பாராட்டெல்லாம் இராமனால் கிடைக்கப் பெற்றும்
பணிவுடன் அடக்கமாகி அன்பொடு பண்பு சேர
சீரியோனாக வாழ்ந்து வழியது காட்டும் தெய்வமே போற்றி.

ஐம்புலன் அடங்கநின்று அருந்தவம் செய்யும் கோலம்
காண்பவர் மனமுருக அற்புதமாக வாழ்ந்து
வையகம் தன்னைக் காக்க நீ செய்யும் தவத்தைக் காண
கலியுக மக்கள் செய்த புண்ணியம் யதோ புண்ணியா போற்றி.
அஞ்சனைத் தாயாள் உன்னை அன்புடன் நோக்க
வாயுவாம் தந்தை உன்னை என்றுமே வாழ்த்தி நிற்க
அடியவர்கருளென்று அன்புடன் கோயில் கொண்டு
மருதர்தம் பதியில் வர்ழும் மாதவா போற்றி போற்றி.

சுந்தரக்குருக்கள் நெஞ்சை உறைவிடங்கொண்டு
பின்னாய் மருதர்தம் பதியில் கோயில் மாண்புடன் தொட
மாதவ சுந்தர வீர அனுமனே உன்தன் ஜெயந்தி நாள்
தேரேறும் திருநாளாக திருவருள் புரிவாய் போற்றி.

சீதைத்தாய் ஆசியோடு வெற்றிலைக் கொடியைப் பெற்றாய்
இன்று நாம் அதை நினைந்து வெற்றிலை மாலை சூட்டி
அன்புடன் நாமஞ்சொல்லி ஆவலாய்ப் பணிந்தோமையா
மனமது இரங்கி வாழ்வில் வெற்றிக் தருவாய் போற்றி.

தேடிடும் செல்வம் நீயே, என்று தேடியே வந்து
உன்தன் பதமலர்பணிந்து நாளும் நாமமே பாடுகின்றோம்
எங்களுக்கிரங்கி, வாழ்வில் எம் துயர்மறைந்து போக
வாழ்வில் மங்களம் பொங்க மனதுவைத்தருள்வாய் போற்றி.

ராம நாம சங்கீர்த்தனம்
ராமா ராமா

❁❁❁❁❁❁

## பஞ்சமுக சுந்தர அனுமந்தன் வருகை

பஞ்சமுககே அனுமந்தா பதமலர் பணிந்தோம் நாமையா
அஞ்சலென்ற பயம் தருபவனே ஆபத்தில் அருந்துணை ஆனவனே
வஞ்சக மயிலிராவணனை வதம் செய்ய ஐமுகனானவனே
எங்களின் நிலைக்கிரயையா எங்களைக் காத்திட நீ வந்தாய்.

வரலாற்றுப் பெருமை படைத்தவனாய் வையம் போற்றும் படியாக
பங்குனி உத்திர நன்நாளில் சுந்தரக்கோலம் கொண்டே நீ
எங்களுக் கருள் தர எமைத்தேடி
ஐமுகனாக இங்கு வந்தாய் சுந்தரக் கோம மாருதியே.

தங்களின் வரவாய் எங்களுக்கு அருள்வாழ்வு கிடைக்க வேண்டுமென்று
நம்பினோம் நம்பினோம் பாதமலர் நாமே போற்றி நாம்பணிவோம்
கலியுக மக்களின் நிலைக்கிரங்கி கருணை மழை பொழிந்தருளுமையா
ஆலயம் தன்னில் அருள் பெருக அடியவர் துயர்களைத்தருளுமைா.

குடமுழுக்காடி அருள் பெருகி அருளொளி வீசட நின்றிடையா
கைதொழுவருபவர் நிலை அறிந்து கைகொடுத்தருளவேண்டுமையா
சுந்தரக்கோலம் அருட்கோலம் ஐமுகத்தழகு அருட்பெருக்கம்
நம்பிக்கை தந்த நாயகனே நல்வாழ்வு தருதல் உன் கடனே.

என்றைக்கும் உன் பதி நாம் மறவோம் படியேறி உன்னிடம் நாம் வருவோம்
எழிற்கோலம் காட்டியே எங்களை நீ ஆண்டருள் புரிய வேண்டுமையா
மூலத்திருநாளில் உன்கோலம் முழுமையாய்க் கண்டு நாம் மகிழ
சித்திரத்தேரில் நீ அமர்ந்து சுந்தரக்கோலம் காட்டிடுவாய்.

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே மார்கழி மூலம் ஆனந்தமே
அபிசேக காலமும் ஆனந்தமே அர்ச்சனை வேளையு மானந்தமே
பெரும் பூசைக் காலமும் ஆனந்தமே அருள் நாம பஜனையும் ஆனந்தமே
ஆனந்தமாகத் தேரேறி ஆனந்ததரிசனம் தாருமையா

எங்கெங்கு பார்த்தாலும் அருட்கோலம் நாம் கண்டு மகிழ நீ அருள்வாய்
அருள் வெள்ளம் எங்குமே பாய்ந்தோட அடியவர் ஆனந்தக் கூத்து
தேரேறும் திருநாளின் அருட்கோலம் அடியவர்கண்டு அகமகிழ
மருதர் பெரும்பதி மாதவனே மலரடி சூட்டி அருளுமையா.

❁❁❁❁❁❁

# மருதர் பெரும் பதி மாதவன்

மருதர் பெரும் பதி மாதவனே
மாதவ சுந்தர மாருதியே

தங்களின் பதியே சஞ்சமென்று
தவிப்புடன் வருவோம் தங்களிடம்
எங்களின் நிலை தனை நீயறிவாய்
எங்களுக்கருள்வது உன் கடமை.

தங்களுக்கிசைவாய் நாம ஜெபம்
அனைவரும் சொல்வோம் நாம ஜெபம்
இராம ஜெயமது அருள் வேதம்
வேதத்தைச் சொல்லிட அருள் வளரும்.

ஆலயச் சூழல் அருள் பொங்க
அடியவர் துயரம் போயகல
நாட்டினில் அமைதி தான் சேர
அன்புடன் சொல்லோம் நாம ஜெபம்

எல்லாமே வல்லவன் எங்களுக்கினியவன்
ராமனின் கவசமாய்ப் பூமியைக் காப்பவன்
ஐம்முகச் செல்வனாய் அவனியை ஆள்பவன்
அவன் நாமஞ்சொல்லி அவனியைக் காப்போம்.

# ஜெஜ அனுமன் ஸ்துதி

| | |
|---|---|
| ஜெஜகனுமான் | ஜெஜகனுமான் |
| வாயுகுமாரா | ஜெஜகனுமான் |
| வானவீரா | ஜெஜகனுமான் |
| அஞ்சனை சுதனே | ஜெஜகனுமான் |
| அருட்பெருங்கனலே | ஜெஜகனுமான் |
| அவதாரபுருசன் | ஜெஜகனுமான் |
| அவனியைக் காப்பவன் | ஜெஜகனுமான் |
| சகலதும் அறிந்தவன் | ஜெஜகனுமான் |
| சத்துருசங்கார | ஜெஜகனுமான் |
| ராமனின் அவதாரம் | ஜெஜகனுமான் |
| நன்னறிந்தமையால் | ஜெஜகனுமான் |
| ராமனைத் தெய்வமென | ஜெஜகனுமான் |
| பூசித்து வணங்கி | ஜெஜகனுமான் |
| அருள்நிலை பெற்றவன் | ஜெஜகனுமான் |
| சொல்லின் செல்வனென்று | ஜெஜகனுமான் |
| பெரும் புகழ் படைத்தவன் | ஜெஜகனுமான் |
| தோள் வலி படைத்தவன் | ஜெஜகனுமான் |
| துணைசெய்து காப்பவன் | ஜெஜகனுமான் |
| பெருந்தொண்டன் ஆனவன் | ஜெஜகனுமான் |
| பெருவீர சுந்தரன் | ஜெஜகனுமான் |
| ராமநாமத்தில் | ஜெஜகனுமான் |
| பெருமோகங்கொண்டவன் | ஜெஜகனுமான் |
| ராமனின் கவசமாய் | ஜெஜகனுமான் |
| ராமனின் கோயிலாய் | ஜெஜகனுமான் |
| நெஞ்சிலே சுமந்தவன் | ஜெஜகனுமான் |
| நாமத்தின் மகிமையை | ஜெஜகனுமான் |
| நானிலமறிய | ஜெஜகனுமான் |
| வழிகாட்டி நின்றவன் | ஜெஜகனுமான் |
| சீதையைத்தாய்போல் | ஜெஜகனுமான் |

மதித்திட்ட பெரும் பக்தன் ஜெஜகனுமான்
தீயதை அழித்திட ஜெஜகனுமான்
முன்னாக வருவான் ஜெஜகனுமான்
மூலத் திருநாள் ஜெஜகனுமான்
அவதாரப் பெருநாள் ஜெஜகனுமான்
சனிபகவானை ஜெஜகனுமான்
அறிவினால் வென்று ஜெஜகனுமான்
பெருநட்புக் கொண்டு ஜெஜகனுமான்
அடியவர் தங்களை ஜெஜகனுமான்
சனியது தீண்டாது ஜெஜகனுமான்
காத்தர் பெரும் பதி ஜெஜகனுமான்
உறைவிடம் கொண்டவன் ஜெஜகனுமான்
அருள் வலுவாலே ஜெஜகனுமான்
ஆலய அமைவிடம் ஜெஜகனுமான்
சிறப்பாக அமைந்திட ஜெஜகனுமான்
காரணமானவன் ஜெஜகனுமான்
பெருவெளிதனிலே ஜெஜகனுமான்
வாயுவின் ஆட்சியில் ஜெஜகனுமான்
விளங்கிடும் இணுவையில் ஜெஜகனுமான்
மருதனார் மடத்திலே ஜெஜகனுமான்
கோயில் கொண்டவன் ஜெஜகனுமான்
கலைக்கோயில் சிறப்புடன் ஜெஜகனுமான்
விளங்கிட வைத்தவன் ஜெஜகனுமான்
கோபுரமாகி ஜெஜகனுமான்
மலையென நின்றவன் ஜெஜகனுமான்
நிறைவான அபிசெகம் ஜெஜகனுமான்
சிறப்பான அலங்காரம் ஜெஜகனுமான்
மனமுருக பஜனை ஜெஜகனுமான்
அருள் நிறைந்த பூசை ஜெஜகனுமான்
அனைத்தையும் காட்டி ஜெஜகனுமான்
அருளலைச் செய்பவன் ஜெஜகனுமான்
அடியவர் நேர்த்தியை ஜெஜகனுமான்

அன்புடன் ஏற்பான் ஜெஜகனுமான்
உள்ளத் தூய்மையோடு ஜெஜகனுமான்
பெருந்தவிப்போடு ஜெஜகனுமான்
செய்திடும் நேர்த்தியை ஜெஜகனுமான்
திண்ணமாய் ஏற்பான் ஜெஜகனுமான்
வெற்றிலை மாலையை ஜெஜகனுமான்
அன்புடன் மாலையை ஜெஜகனுமான்
வெற்றியை அருள்வான் ஜெஜகனுமான்
ஆண்டாள் மாலையை ஜெஜகனுமான்
அன்புடன் ஏற்று ஜெஜகனுமான்
நினைத்ததை நிறைவேற்றி ஜெஜகனுமான்
அருளள்ளித் தருவான் ஜெஜகனுமான்
ஞாயிறு வேளையில் ஜெஜகனுமான்
சிறப்பாக வடை மாலை ஜெஜகனுமான்
சூடியே நின்றிட ஜெஜகனுமான்
சிலக்கோலம் தெரியும் ஜெஜகனுமான்
நேர்த்திக் கடன்களை ஜெஜகனுமான்
அன்புடன் ஏற்று ஜெஜகனுமான்
அருளலைச் செய்வான் ஜெஜகனுமான்
சந்தனக்காப்பிட்டு ஜெஜகனுமான்
சுந்தரக் கோலனாய் ஜெஜகனுமான்
கண்ணக்கு விருந்தாகி ஜெஜகனுமான்
நோய் பிணி களைவான் ஜெஜகனுமான்
குங்குமம் சூடி ஜெஜகனுமான்
மங்களமருள்வான் ஜெஜகனுமான்
நாமார்ச்சனை தனை ஜெஜகனுமான்
அன்புடன் கேட்டு ஜெஜகனுமான்
மலர் சாத்த மகிழ்வோடு ஜெஜகனுமான்
ஏற்றருள் புரிவான் ஜெஜகனுமான்
சனிக்கிழமைச் சிறப்பை ஜெஜகனுமான்
பெருஞ்சிறப்பாக்கி ஜெஜகனுமான்
அமுதளித்தருள்வான் ஜெஜகனுமான்

| | |
|---|---|
| ஞாயிறு ஓய்வென்று | ஜெஜகனுமான் |
| தேடியே வருபவர்க்கும் | ஜெஜகனுமான் |
| அருளள்ளிக் கொடுப்பான் | ஜெஜகனுமான் |
| நம்பிக்கையோடு | ஜெஜகனுமான் |
| வருபவர் தங்களுக்கு | ஜெஜகனுமான் |
| பெருவாழ்வு கொடுப்பான் | ஜெஜகனுமான் |
| புரட்டாதி மாதத்தில் | ஜெஜகனுமான் |
| வருகின்ற சனிதனில் | ஜெஜகனுமான் |
| ஓமங்கள் யாகங்கள் | ஜெஜகனுமான் |
| அபிசேகம் அர்ச்சனை | ஜெஜகனுமான் |
| சிறப்பாக ஏற்று | ஜெஜகனுமான் |
| சனிதோசம் தீர்ப்பவன் | ஜெஜகனுமான் |
| மார்கழி மூலத்தை | ஜெஜகனுமான் |
| அந்த மாய்க்கொண்டு | ஜெஜகனுமான் |
| முன்பத்துத் தினங்களிலும் | ஜெஜகனுமான் |
| காலையும் மாலையும் | ஜெஜகனுமான் |
| அபிசேகம் பெரும் பூசை | ஜெஜகனுமான் |
| நாமார்ச்சனையும் | ஜெஜகனுமான் |
| அன்னதானமும் | ஜெஜகனுமான் |
| மாலைவேளையில் | ஜெஜகனுமான் |
| இசை விருந்தளித்து | ஜெஜகனுமான் |
| ஒவ்வொரு நாளும் | ஜெஜகனுமான் |
| சிறப்பாக நிறைவேற | ஜெஜகனுமான் |
| இறுதி நாளிலே | ஜெஜகனுமான் |
| மகா யாகம் | ஜெஜகனுமான் |
| சிறப்புற நடத்தி | ஜெஜகனுமான் |
| ஜெகமெங்கும் அருள் பொங்க | ஜெஜகனுமான் |
| பூர்த்தியைச்சிறப்பாக்கி | ஜெஜகனுமான் |
| மூலநன்நாளிலே | ஜெஜகனுமான் |
| திரவிய அபிசேகம் | ஜெஜகனுமான் |
| சிறப்பாகச் செய்து | ஜெஜகனுமான் |
| 108 கலசத்தால் | ஜெஜகனுமான் |

| | |
|---|---|
| அபிசேகமேற்று | ஜெஜகனுமான் |
| பெருஞ்சிறப்பாக | ஜெஜகனுமான் |
| சந்தணக் குளம்பால் | ஜெஜகனுமான் |
| அருட்காப்பிட்டு | ஜெஜகனுமான் |
| சுந்தர அனுமானாய் | ஜெஜகனுமான் |
| அருட்கோலந்தாங்கி | ஜெஜகனுமான் |
| அடுக்குத்தீபம் | ஜெஜகனுமான் |
| அன்புடன் எடுக்க | ஜெஜகனுமான் |
| அருட்காட்சி தருவான் | ஜெஜகனுமான் |
| காட்சியை நினைத்தாலே | ஜெஜகனுமான் |
| பரவசம் தானே | ஜெஜகனுமான் |
| மறவோம் மறவோம் | ஜெஜகனுமான் |
| மார்கழி மூலம் | ஜெஜகனுமான் |
| அடியவர் பொங்கலே | ஜெஜகனுமான் |
| அருட்பிரசாதம் | ஜெஜகனுமான் |
| அன்புடன் ஏற்று | ஜெஜகனுமான் |
| அனைவற்கும் அருள்வான் | ஜெஜகனுமான் |
| வருகின்ற மூலத்தில் | ஜெஜகனுமான் |
| பெருஞ்சிறப்பாக | ஜெஜகனுமான் |
| பஞ்சமுக சுந்தரனாய் | ஜெஜகனுமான் |
| பக்தர்கள் புடை சூழ | ஜெஜகனுமான் |
| சித்திரத் தேரிலே | ஜெஜகனுமான் |
| அற்புதக் கோலனாய் | ஜெஜகனுமான் |
| அடியவர் மனங்குளிர | ஜெஜகனுமான் |
| பெருகர்சி தந்து | ஜெஜகனுமான் |
| வீதி உலா வவான் | ஜெஜகனுமான் |
| வானூர வீரனாம் | ஜெஜகனுமான் |
| மனக்கண்ணிலே | ஜெஜகனுமான் |
| காட்சியைக்கண்டேன் | ஜெஜகனுமான் |
| நினைத்ததை எல்லாம் | ஜெஜகனுமான் |
| நிறைவேற்றி வைத்தல் | ஜெஜகனுமான் |
| தங்களின் கடனே | ஜெஜகனுமான் |

நினைத்ததை முடிப்பவன் ஜெஜகனுமான்
வீதிகற்ற வழியின்றி ஜெஜகனுமான்
வருந்தினோம் பலகாலம் ஜெஜகனுமான்
வருத்தத்தை அறிந்து ஜெஜகனுமான்
காணியைச் சேரவைத்து ஜெஜகனுமான்
திருவிதிதந்தவன் ஜெஜகனுமான்
அறிபவர் அறிவார் ஜெஜகனுமான்
நினைந்து தொழுதிட ஜெஜகனுமான்
வழிதிறந்தருள்வான் ஜெஜகனுமான்
அடியவர் அமுதருள் ஜெஜகனுமான்
சஞ்சீவி மடந்தனை ஜெஜகனுமான்
சிறப்பாக அமைத்தவன் ஜெஜகனுமான்
குறைவேலை நிறைவாக ஜெஜகனுமான்
விரைவாக முடிப்பான் ஜெஜகனுமான்
வருகின்ற அடியவரை ஜெஜகனுமான்
வழிப்படுத்தி நிற்பான் ஜெஜகனுமான்
தன்பதி வருவோர் ஜெஜகனுமான்
உளத்தூய்மையுடனே ஜெஜகனுமான்
பெருவிருப்பாக ஜெஜகனுமான்
காலது அலம்பி ஜெஜகனுமான்
படி யேறிவரும் போது ஜெஜகனுமான்
பாடிப்பாடியே ஜெஜகனுமான்
கோயிலின் முன்நின்று ஜெஜகனுமான்
திருநீறும் சந்தனமும் ஜெஜகனுமான்
குங்குமமும் சூடி ஜெஜகனுமான்
முழந்தாளிலே ஜெஜகனுமான்
பணிந்து எழுந்து ஜெஜகனுமான்
மும்முறை வீதியை ஜெஜகனுமான்
வலம் வந்து பணிந்து ஜெஜகனுமான்
சிந்தித்து வணங்கி ஜெஜகனுமான்
தியானத்தில் இருந்து ஜெஜகனுமான்
அன்புடன் எழுந்து ஜெஜகனுமான்

| | |
|---|---|
| அர்ச்சனை செய்து | ஜெஜகனுமான் |
| அபிசேகம் கண்டு | ஜெஜகனுமான் |
| அருள்நாம பஜனை | ஜெஜகனுமான் |
| சிறப்பாகச் செய்து | ஜெஜகனுமான் |
| பெரும் பூசை கண்டு | ஜெஜகனுமான் |
| மனமது நிறைவாய் | ஜெஜகனுமான் |
| பிரசாதம் வாங்கி | ஜெஜகனுமான் |
| வணங்கிப் பணிந்திட | ஜெஜகனுமான் |
| திண்ணமாய் அருள்வான் | ஜெஜகனுமான் |
| வீண்வார்த்தை பேசி | ஜெஜகனுமான் |
| களவுகள் செய்து | ஜெஜகனுமான் |
| பிறர்க்கிடைஞ்சலாகி | ஜெஜகனுமான் |
| காம லீலைகள் | ஜெஜகனுமான் |
| செய்பவர் தங்களை | ஜெஜகனுமான் |
| தூரத்தியே வைத்து | ஜெஜகனுமான் |
| பெருந்துயர் கொடுத்து | ஜெஜகனுமான் |
| திருந்திடவைப்பான் | ஜெஜகனுமான் |
| வைகறைப் பூசை | ஜெஜகனுமான் |
| கண்டிட ஆனந்தம் | ஜெஜகனுமான் |
| ராம நவமி | ஜெஜகனுமான் |
| பேரின்பம் பேரின்பம் | ஜெஜகனுமான் |
| மூலத்திருநாள் | ஜெஜகனுமான் |
| முத்தியின் இலக்கே | ஜெஜகனுமான் |
| சீதாகல்யாணம் | ஜெஜகனுமான் |
| கண்டவர் மனங்குளிரும் | ஜெஜகனுமான் |
| திருவிளக்குப் பூசை | ஜெஜகனுமான் |
| வைகுந்தக்காட்சி | ஜெஜகனுமான் |
| பெருஞ்சிறப்புக் கொண்டவன் | ஜெஜகனுமான் |
| அருட்சிறப்பு மிக்கவன் | ஜெஜகனுமான் |
| நக்கின்ற கருமங்கள் | ஜெஜகனுமான் |
| அனைத்துமே சிறப்பு | ஜெஜகனுமான் |
| சிறப்பின் ரகசியம் | ஜெஜகனுமான் |

| | |
|---|---|
| பேரன்பாகுருநாதர் | ஜெஜகனுமான் |
| அருளன்பராகி | ஜெஜகனுமான் |
| அடியவற்கு எழியராய் | ஜெஜகனுமான் |
| அன்புடன் பழகி | ஜெஜகனுமான் |
| அன்பாய்ப்பண்பாய் | ஜெஜகனுமான் |
| இன் சொல் பேசி | ஜெஜகனுமான் |
| செயற்படுவதாலே | ஜெஜகனுமான் |
| சகலதும் சிறப்பு | ஜெஜகனுமான் |
| சகலதும் நிறைவு | ஜெஜகனுமான் |
| குருநாதன் வாழ்வு | ஜெஜகனுமான் |
| சிறந்திட வைப்பான் | ஜெஜகனுமான் |
| அருள்சிறந்த பதியில் | ஜெஜகனுமான் |
| வருகின்ற அடியவரை | ஜெஜகனுமான் |
| ஒருவழிப்படுத்தி | ஜெஜகனுமான் |
| சமகால நிலையை | ஜெஜகனுமான் |
| சிந்தித்து வழிபட | ஜெஜகனுமான் |
| திண்ணமாய் அருள்வான் | ஜெஜகனுமான் |
| தங்கள் பதிக்கு | ஜெஜகனுமான் |
| வருகின்ற அடியவர் | ஜெஜகனுமான் |
| அவப்பொழுது போக்காது | ஜெஜகனுமான் |
| தவம் செய்ய வைப்பாய் | ஜெஜகனுமான் |
| எங்கும் அருள்மயம் | ஜெஜகனுமான் |
| எதிலும் அருள்மயம் | ஜெஜகனுமான் |
| கண்டிட வைப்பான் | ஜெஜகனுமான் |
| நிறைந்து பணிந்தோம் | ஜெஜகனுமான் |
| நடந்தது கனவாக | ஜெஜகனுமான் |
| அனைவரும் மறந்திட | ஜெஜகனுமான் |
| நடக்கக் போவது | ஜெஜகனுமான் |
| நல்லதாய் நடந்திட | ஜெஜகனுமான் |
| திண்ணமாய் அருள்வான் | ஜெஜகனுமான் |
| ஒன்றே மனிதகுலம் | ஜெஜகனுமான் |
| என்றே நினைந்து | ஜெஜகனுமான் |

வேற்றுமை இன்றி ஜெஜகனுமான்
அன்பாய் வாழ்ந்திட ஜெஜகனுமான்
எங்களை வழிநடத்தி ஜெஜகனுமான்
எங்களைக்காப்பாய் ஜெஜகனுமான்
இடமது பெயர்ந்தோம் ஜெஜகனுமான்
இருப்பிடம் சேர்ந்திட ஜெஜகனுமான்
துன்பமுற்றோர்கள் ஜெஜகனுமான்
ஊனமுற்றோர்கள் ஜெஜகனுமான்
உறவினை இழந்தோர்கள் ஜெஜகனுமான்
அனைவரும் மனமாறி ஜெஜகனுமான்
சிறப்பாய் வாழ்ந்திட ஜெஜகனுமான்
துணைசெய்ய வேண்டும் ஜெஜகனுமான்
தொழில் வளம் சிறந்து ஜெஜகனுமான்
பயிர் வளம் சிறந்து ஜெஜகனுமான்
கல்வி வளர்ந்து ஜெஜகனுமான்
ஒழுக்கம் சிறந்து ஜெஜகனுமான்
கலைகள் சிறந்து ஜெஜகனுமான்
கலாச்காரம் உயர்ந்து ஜெஜகனுமான்
பழமையை மறவாமல் ஜெஜகனுமான்
புதுமையில் புரளாமல் ஜெஜகனுமான்
எம் இனத்தின் தனித்துவத்தை ஜெஜகனுமான்
பேணிக்காத்து ஜெஜகனுமான்
வாழ்பொங்கு வாழ்ந்திட ஜெஜகனுமான்
வரந்தரவேண்டும் ஜெஜகனுமான்
செங்கின்ற தொழிலை ஜெஜகனுமான்
சிறப்பாய்ச் செய்து ஜெஜகனுமான்
களவு பொய் இல்லாது ஜெஜகனுமான்
லஞ்சம் வாங்காது ஜெஜகனுமான்
லட்சிய புருசராய் ஜெஜகனுமான்
அனைவரும் தொழில் செய்து ஜெஜகனுமான்
வையகம் போற்றிட ஜெஜகனுமான்
வாழவைத்திடுவாய் ஜெஜகனுமான்

சிறுவர்கள் எல்லாம் ஜெஜஜகனுமான்
இறைபக்தியோடு ஜெஜஜகனுமான்
பெரியோரை மதித்து ஜெஜஜகனுமான்
பொற்றோரைப் போற்றி ஜெஜஜகனுமான்
குருவை மதித்து ஜெஜஜகனுமான்
பெருமை இல்லாது ஜெஜஜகனுமான்
சிறுமையுமிலாது ஜெஜஜகனுமான்
அன்பாய்ப் பண்பாய் ஜெஜஜகனுமான்
இனிமையாய்ப் பேசி ஜெஜஜகனுமான்
உலகம் போற்றிட ஜெஜஜகனுமான்
பிறர்க்கு உதவி செய்து ஜெஜஜகனுமான்
ஆசீர்வதிக்கப்பட்டு ஜெஜஜகனுமான்
குடும்பநிலை உணர்ந்து ஜெஜஜகனுமான்
சிக்கனமாக ஜெஜஜகனுமான்
பக்குவமாக ஜெஜஜகனுமான்
நன்றிமறவாது ஜெஜஜகனுமான்
பிழைக்குமந்தை போகாது ஜெஜஜகனுமான்
சூழலுக்கேற்ப ஜெஜஜகனுமான்
சந்தற்பத்துக்குத் தக்கதாய் ஜெஜஜகனுமான்
வாழ்ந்திட அருள்வாய் ஜெஜஜகனுமான்
இயற்கையின் அனர்த்தம் ஜெஜஜகனுமான்
தணிந்திடவைப்பாய் ஜெஜஜகனுமான்
வெய்யிற் கொடுமை ஜெஜஜகனுமான்
ஒழிந்திட வேண்டும் ஜெஜஜகனுமான்
மழை பெய்து பெருவெள்ளம் ஜெஜஜகனுமான்
இல்லாது ஒழிப்பாய் ஜெஜஜகனுமான்
கடல் பொங்கி எழுந்து ஜெஜஜகனுமான்
ஊரை அழிப்பதை ஜெஜஜகனுமான்
இல்லாதொழிப்பாய் ஜெஜஜகனுமான்
பூமி நடுங்கி ஜெஜஜகனுமான்
ஊரழியாமல் ஜெஜஜகனுமான்
காத்திட வேண்டும் ஜெஜஜகனுமான்

| | |
|---|---|
| புதுப்புது நோய்கள் | ஜெஜகனுமான் |
| இல்லாது ஒழிப்பாய் | ஜெஜகனுமான் |
| வாழ்க நல்லவை | ஜெஜகனுமான் |
| ஆழ்கதீயது | ஜெஜகனுமான் |
| எங்களால் முடிந்தது | ஜெஜகனுமான் |
| உண்மையை விளங்கி | ஜெஜகனுமான் |
| அமுது தொழுதலே | ஜெஜகனுமான் |
| தொழுவதைச் செய்யாது | ஜெஜகனுமான் |
| அழுவதில் வேலையில்லை | ஜெஜகனுமான் |
| உன்பதிவந்தோர் | ஜெஜகனுமான் |
| உன்பதிநினைந்தோர் | ஜெஜகனுமான் |
| தொண்டுகள் செய்தோர் | ஜெஜகனுமான் |
| பாடிப்பணிந்தோர் | ஜெஜகனுமான் |
| தானங்கள் செய்தோர் | ஜெஜகனுமான் |
| தருமங்கள் செய்தோர் | ஜெஜகனுமான் |
| பெரும் பக்தரானவர் | ஜெஜகனுமான் |
| அனைவரும் ஈடேற | ஜெஜகனுமான் |
| அருளாசி கூறி | ஜெஜகனுமான் |
| அசீர்வதிப்பாய் | ஜெஜகனுமான் |
| சரணம் சரணம் | ஜெஜகனுமான் |
| திருவடி சரணம் | ஜெஜகனுமான் |

# அனுமன் மேலான அற்புத வெண்பா

01. பேரருளும் பேரொளியும் பேரன்பும் கொண்ட
மாதவனே மாருதியே உனை மறவேன் - நீ விரும்பி
எம்மினத்தின் துயரொளிய எல்லோரும் நிறைவாக
அச்சமில்லா அருள் நிறைந்த பெருமை வாழ்வருள்.

02. பேரருளின் இருப்பிடமாய் தவசீலனாக
கணமேனும் மறவாமல் திருநாமம் - மனமுருக
மக்களுக்காய்ச் சொல்லி நிற்கும் மாருதியே
உன் அன்பர் மனங்குளிர அருட்கண்ணால் அனைவரையும் பார்.

03. அளவையூர் சஞ்சீவி அருட்கவிஞர் அருள்வாக்கல்
திருக்கோயில் அமைவிடம் சிறப்பாக அமைந்தசெயல்
நினைக்க மனமுருகும் மயிர் சிலிர்க்கும் மனங்குளிரும்
ஆகையினால் அருட்பெருமை மனம் நினைந்து கை எடுப்போம்தினம்.

04. சுந்தரனார் திருக்கோலம் இராமனாய்க் காட்சிதர
மாருதியின் அருள் வலுவோ நிறைவாக - எப்போதும்
குருநாதன் பூசை சிறப்பாக அருள்பெருக்க
மாருதியே மனம் விரும்பி மக்களை நீகார்.

05. உன்னிடத்தில் வருபவர்கள் உளமுருகிக்கையெடுக்க
அருள்நோக்கல் அனைவரையும் பார்ப்பவனே - அபிசேகம்
காணக் கண் குளிரும் கல்லுமனம் கசிந்துருகும்
திருநாமந்தோ பெருந்தீர்த்தம் அதுவென்றறி.

06. அலங்காரத் தனிச் சிறப்பு அகம் குளிர வைக்க
நறும்புகையோ நாசியினால் சிரமேற - அருட்சிந்தை
கசிந்துருகி மனம் விரும்பித் திருநாமபாட
வைகுந்தம் மாருதியின் கோயிலென்றறி.

07. மருதனார் மடவெளியில் மாருதியின் கோயில்
மாண்பாக அமைந்தசெயல் எம் செயலோ இல்லையில்லை
காலத்தின் தேவைதனைக் கருத்தில் கொண்ட சிவன்
உருத்திர அவதார தவசீல மாருதியாய் வந்த செயல் அறி.

08. பேரன்பு ராமன் நவமித்திருநாளை பெருவிருப்பாய்
ஆராதனையாக்கி இசை வேள்வி செய்வதற்கு துணை நின்ற
தூயவனே பெரியவனே, துணை மலர்ந்தாள் பணிந்தேன்
எம் இதயம் நிலையாகக் குடியமர்ந்திரு.

❁❁❁❁❁❁

## அமிர்த சஞ்சீவி அமிர்தம் பருகிடவாரீர்

அமிர்த சஞ்சீவி, அமிர்தம், பருகிட, வாரீர்
மருதர் பெரும் பதி, மாதவ சுந்தரனின், அமிர்தம், பருகிட வாரீர்.

கலியுகம் காத்திட, மருதர், பெரும், பதியிலே
அருட்பெருங், கோயில், கொண்ட
அனுமனின் அமிர்தம் பருகி வாரீர்.

பெருந்தவிப்புடனே், அனுமனின் பதிவந்து அவன் புகழ் பாடியே
அனுமனின் சஞ்சீவி, அமிர்தம், பருகிட வாரீர்
நினைந்து நினைந்து உருகிடும் மனங்கொண்ட
அமிர்த சஞ்சீவி அமிர்தம் பருகிவட வாரீர்.

❁❁❁❁❁❁

# அனுமனின் அடிதொழுத் அடியவற்கு துன்பமுண்டோ

அருள்நிறை, அனுமனின் அடிமலர்
தொழுபவர்க்கு துன்பமுண்டோ மனமே
என்றும் சிரஞ்சீலியாய் வையகம் உய்ந்திட
பஞ்சமுக அழகனாகி பார்போற்றும் தெய்வமென

மருதர் பதி வந்துதித்த மாதவ சுந்தரனைக்
கையெடுக்கு மன்பர்கட்கு துன்பமுண்டோ
மாயிராவணனை வதம் செய்த மாவீர
சுந்தரனைக் கையெடுக்கும் அன்பர்கட்கு துன்பமுண்டோ.

❁❁❁❁❁❁

# பஞ்சமுக ஆஞ்சநேயனை மனமுருகவேண்டும்

ஜெயவீர சுந்தரனே தவமகனே அனுமந்தா
ஜெகம் போற்றும் நாயகனே தெய்வீக அனுமந்தா

போர் முழக்க நேரத்திலே தேடி வந்த அனுமந்தா
போர் முழக்கம் முடியவைத்த சுந்தரனே அனுமந்தா
இன்றெமக்கு வேண்டுவது நல்லமுடிவு அனுமந்தா
நல்ல முடிவு தருவதற்கோ நாடிவந்தாய் அனுமந்தா

ஜெயவீர சுந்தரனே தவமகனே அனுமந்தா
ஜெகம் போற்றும் நாயகனே தெய்வீக அனுமந்தா

தசரத குமார்களை மீட்பதற்கு அனுமந்தா
பஞ்சமுகசுந்தரனாய் கோலங் கொண்டு அனுமந்தா
மயிலி அயிலி இராவணரை வதம் செய்து அனுமந்தா
ரகு குலம் காத்து நின்றாய் ராஜ வீர அனுமந்தா

ஜெயவீர சுந்தரனே தவமகனே அனுமந்தா
ஜெகம் போற்றும் நாயகனே தெய்வீக அனுமந்தா

ரகு குலம் காத்தது போல் ராஜவீர அனுமந்தா
எங்கள் குலம் காப்பதற்கு மனம் நினைந்தோ அனுமந்தா
பங்குனி உத்தரத்தில் கருக்கொண்டு அனுமந்தா
கோணமாமலையில் நின்றும் தேடிவந்தாய் அனுமந்தா

ஜெயவீர சுந்தரனே தவமகனே அனுமந்தா
ஜெகம் போற்றும் நாயகனே தெய்வீக அனுமந்தா

பஞ்சமுக அருட்கோலம் பாங்கான தவக்கோலம்
காண்பவர்கள் மனமுருக்கும் மாண்பான சிவக்கோலம்
திருமேனி ஒளீவீச அருட்பீடமீதமர்ந்து
குடமுழுக்கு ஏற்று எம்மைக் காக்க வேண்டும் அனுமந்தா
ஜெயவீர சுந்தரனே தவமகனே அனுமந்தா
ஜெகம் போற்றும் நாயகனே தெய்வீக அனுமந்தா

பஞ்சமுக அர்ச்சனையை ஏற்று நின்று அனுமந்தா
பக்தர் குறை அத்தனையும் தீர்த்திடையா அனுமந்தா
உன்வரவால் எங்கள் வாழ்வில் அருள் மகனே அனுமந்தா
பெருமாற்றம் தெரிய வேண்டும் பெரியோனே அனுமந்தா

ஜெயவீர சுந்தரனே தவமகனே அனுமந்தா
ஜெகம் போற்றும் நாயகனே தெய்வீக அனுமந்தா

தேரேறி வரவேண்டும் திருமகனே அனுமந்தா
திருமகளாம் சீதை போற்றும் பஞ்சமுக அனுமந்தா
சரணம் சரணமையா பஞ்சமுக அனுமந்தா
பார்வாழ வரமருளும் பஞ்சமுக அனுமந்தா
ஜெயவீர சுந்தரனே தவமகனே அனுமந்தா
ஜெகம் போற்றும் நாயகனே தெய்வீக அனுமந்தா

❁❁❁❁❁❁

## ஸ்ரீ சுந்தர பஞ்சமுக ஆஞ்சநேயர் குடமுழுக்கு நினைவாக பாடிய வெண்பாக்கள்

01. பாதாள உலகினிலே பரம்பொருளாம் இராமபிரான்
சிறையாகி மறைபொருளாய் இருந்திடவே - மதியாலே
இருக்குமிடமறிந்து இதயக்கனல்பொங்க
தடைதாண்டி உட்புகுந்த பஞ்சமுகாதிருவடிகள் சரண்.

02. ராமர் தனைத்தேடி பாதாளம் செல்லுகையில்
தவிப்போடு நீ சென்ற அருட்கோலம் - மனம் நினைந்து
பாடிப் பணிந்து பரவிக்கையெடுத்தோம்
மனமிரங்கி எங்களையும் திண்ணமெனக்கார்.

03. அருட்பெருக்கம் கொண்ட ஐமுகனாய் உருவெடுத்து
தசக்கரங்கள் பத்தம் சிறப்பாக- வலுநிறைந்த
ஆயுதங்கள் பல ஏந்தி உருத்திர சிவம் போலே
எமையா வந்தவனே அனுமந்தா எங்களையும் கார்.

04. மார்பழகும் தோளழகும் மதிநுட்பச் சிறப்பழகும்
அருளொழுகு கண்ணழகும் சிறப்பாக - நாவினிலே
ராமனது திருநாமம் வேதமென் நின்றொலிக்க
பஞ்சமுக சுந்தரனே அருள் நிறைந்த பருவாழ்வருள்.

05. மயிலியொடு அயிலிராவணரை வதம் செய்ய
மதிநுட்பச் செயலாலே அருள் சேர - தருணத்தில்
பாதாளத் தெய்வம் போல் அசரீரிசெய்து சிறப்பாக
பலி ஏற்கும் யாகம், குலைத்தவனே, பதமலர்கள் சரண்.

06. வஞ்சகரை நம்பவைத்து மதிநுட்பவலியாலே
ராமனையும் மயக்ம் தெளியவைத்து - அற்புதமாய்
கோதண்டம் தன்னலே அயிலியையும் மயிலியையும்
சங்காரம் செய்வித்த பஞ்சமுகா எங்களை நீ கார்.

07. அசுவமுக, அழகோடு சிம்மமுகம் சிறப்பாக
அருள் நிறைந்த அனுமந்தத்திருமுகமும் அருகாக
கருட முகத்திற்கு கருணை முகம் காட்ட
வராக முகம் சேர்ந்தவனே வழமான வாழ்வருள்.

08. கம்பன் கலிப்படைப்பில் சொல்லின் செல்வனென
பெரம் புகழைப் பெற்ற கவியரசே - தங்களைப் போல்
தவைசிறந்த அருட்கடைப்பை தரணீலே காணோம்
தவமகனே எம்மினத்தின் விடிவுக்கு முடிவொன்று தா.

09. ஒழுமகமாய் சுந்தர அனுமனைக் குடியமர்ந்து
போர் முழக்கம் முற்றாய் ஒழித்தவனே - இன்றெமக்க
புனர்வாழ்வு தந்து புது யுகம் மலர்வாக ஐம்முகனை
எம்மிடத்தில் வந்த அனுமந்தா எம் உரிமை சிறப்பாகச் சேர

10. அந்தணர்கள் வேத விதிமுறையால் உருவேற்றி
அடியவரும் பாடிப் பணிந்தேத்த - வருபவர்கள்
அனைவருமே தப்பாது மனமுருகி நினைந்து தொழ
பஞ்சமுக சுந்தரனின் குடமுழுக்கு பக்குவமாய் மலரும் பார்.

11. பங்குனி உத்தர்ததில் பக்குவமாய்க் கருவாகி
அற்புதமாய், அருளோடு உருவாகி - கடல் தாண்டி
மருதர் பெரும் பதிக்கு ஐமுகனாய் வந்த அருட்செல்வா
உன்வரவாய்ல, எம் வாழ்வில் நலம் யாவும் சேரவை.

12. குடமுழுக்கைச் சிறப்பாக அருள் மயமாய் நிறைவேற்றி
மனநிறைவாய்ப் பெரும்பணியைச் செய்து நின்றோம் எம்மண்ணில்
அருள் பெருக துயரகல சமமாக அனைவருமே
நிறைவான அருள் சேர்ந்த பெருவாழ்வு வாழவை.

13. திருவருளின் சிறப்பாலே நிறைவாய் அருள் பெருக
அடியவரின் வரவு பெருஞ்சிறப்பாய் - மருதர் பதி
புண்ணிய சேத்திரமாய் உலகம் புகந்துரைக்க
பெருஞ்சிறப்பாய் விளங்குவது உன்தன் அருள் வருவென்றறி.

14. பெருந்தவிப்பாய், பெருவிருப்பாய் தங்கள் பதி வந்து
அன்பான வழிபாடு செய்து நின்று - பெருவிருப்பாய்
பாடிப் பணிந்து பக்குவமாய்க் கையெடுப்போர்
வாழ்வினிலே மனம் நிறைந்த பெருவாழ்வருள்.

15. குடமுழுக்கும் நிறைவாக அபிசேகம் சிறப்பாக
அர்ச்சனையும் அருள் வலுவை உயர்வாக்க - நாளொன்றாய்
நாற்பத்தெட்டு நாளும் நலமாக முடிவிடத்தில்
லட்சார்ச்சகையும் அருள்சேர்க்க மூலம் சிறப்பாக மலரவை.

தங்களின் அருள்வரவால் மருதர் பெரம் பதியில்
அருட்சிறப்பு நிறைவாக மகிழ்வாக - நாட்டினிலே
அகதிநிலை ஒளிய அனைவருமே ஆனந்தமாய்
உரிமையோடு பெருஞ்சிறப்பாய் நீதியாய் வாழவை.

ராம நாம சங்கீர்த்தனம் ராமா ராமா.
பஞ்சமுக ஆஞ்சநேய சுவாமியே
சரணம் ராமா ராமா.

# குடமுழுக்கு சிறப்பாக நிறைவேற பஞ்சமுக விநாயகரையும் ராமனையும் வேண்டுதல்

மருதர் பெரும்பதியில் அருளொளியாய் வீற்றிருந்து
முதற்பூசை ஏற்றருளும் ஐங்கரனே - எமக்கிரங்கி
மாருதியின் பதியினிலே நடக்கின்ற கருமமெலாம்
சிறப்பாக பக்குவமாய் மங்களமய் நிறைவேறவை.

பஞ்சமுக அழகனென பாருவகை ஆளுகின்ற
ஐங்கரனே உன்பதியில் நடக்கின்ற - பஞ்சமுக
அனுமந்தன் குடு முழுக்கு சிறப்பாக நிறைவாக
பார்போற்றும் படியாக நடந்தேற வை.

## ராமர்

கோதாண்ட ராமனென்ன சீதையொடு சிறப்பாக
இலக்குவனோடனுமந்தன் துணைசேர - பெருஞ்சிறப்பாய்
மருதர் பெரும் பதியில்மாண்பாக வீற்றிருக்கும்
ராகவனே பஞ்சமுகன் குடமுழுக்கை பக்குவமாய் நிறைவேற்றிவை.

பாதாள உலகினிலே பக்குவமாய் உனை மீட்க
துணைநின்ற மாருதியின் அருள்வடிவம் - சிறப்பாக
எழுந்தருளி மூர்த்தியான எம்மிடத்தில் வந்ததனால்
அவர் மூலம் எம்இனத்தின் சிறப்பாக வாழ்விற்கு முடிவொன்று தா.

## வழிபடுவோர்க்கு

தங்கள் பதிவருவோர் பேரன்புத் தவிப்போடு
மனமார முனமுருகி வழிபடவும் - கணமேனும்
அவர்பொழுது போக்காது ஆலயத்தின் நெறிமுறையை
சிரமேற்று பக்தியொடு பண்போடு நடக்கவை.

## அன்புக்கட்டளை

வாழ்நாளோ குறுகியது வழிபடலோ காலமில்லை
வந்து தொழக் கிடைத்திட நேரமதை - அவமாக
வீண்வார்த்தை பேசி பாவமதைச் சேர்க்காமல்
அன்பாகப் பணிசெய்து சிறப்பாக வாழ நினை.

❁❁❁❁❁❁

# ஆலய வளர்ச்சியில் பஞ்சமுக ஆஞ்சநேயர்

எழில் கொஞ்சும் அழகுடை சுந்தரனே அனுமந்தா
எங்கள் குலம் காக்க வந்த வீரதீர சுந்தரனே அனுமந்தா
வஞ்சகரை வதம் செய்த பஞ்சமுக சுந்தரனே அனுமந்தா
பக்தர் குலம் காத்திடையா பரமபக்த சுந்தரனே அனுமந்தா

உன் அருமை உன் பெருமை நன்கறிவோம் சுந்தரனே அனுமந்தா
உண்மையான பெரும் பக்த வீர சுந்தர சுந்தரனே அனுமந்தா
கண்ணை இமை காப்பது போல் கருணை கொண்டுசுந்தரனே அனுமந்தா
பக்தர் குலம் காத்திடையா பரமபக்த சுந்தரனே அனுமந்தா

ஒருமுகமாய் எம்மைத் தேடி நாடி வந்த சுந்தரனே அனுமந்தா
ஒளிவிளங்க அருள் பெருக உறைந்தவனே சுந்தரனே அனுமந்தா
உன் அருளின் பெருவலியால் எங்கள் தவ சுந்தரனே அனுமந்தா
உங்கள் பதி பெருமை சேர்ந்த கோயிலாச்சு சுந்தரனே அனுமந்தா

கோயிலின் வளர்ச்சிகாட்ட கோபுரமாய் சுந்தரனே அனுமந்தா
வாயில்முன் எழுந்து நின்ற வரமுதலே சுந்தரனே அனுமந்தா
கோபுரத்தில் அருள் விளங்க கோமாளமே சுந்தரனே அனுமந்தா
மலை விளக்காய் உறைந்தவனே மாமணியே சுந்தரனே அனுமந்தா

தங்கள் கோயில் வளர்ச்சிபெற அடியார்கள் சுந்தரனே அனுமந்தா
தேடி நாடி ஓடி வந்து கையெடுக்க சுந்தரனே அனுமந்தா
கேட்டவற்கு கேட்ட வரம் கொடுத்தருள சுந்தரனே அனுமந்தா
அருள் வளர்ச்சி கனும் போது ஆனந்தமே சுந்தரனே அனுமந்தா

வருகின்ற அடியவர்கள் அமுதருந்த சுந்தரனே அனுமந்தா
மடம் வேண்டும் என்று எண்ணி மாதவனே சுந்தரனே அனுமந்தா
சஞ்சீவி மடங்கொண்ட சற்குருவே சுந்தரனே அனுமந்தா
சற்குருவாம் சுந்தரரின் மனங்கொண்ட சுந்தரனே அனுமந்தா

ஒன்றன் பின் ஒன்றாக வளர்ச்சி காட்டி சுந்தரனே அனுமந்தா
வீதித்தடை எடுத்து நின்றாய் வீரதிர சுந்தரனே அனுமந்தா
வீதித்தடை எடுத்ததுமே வீதிசுற்ற சுந்தரனே அனுமந்தா
எழுந்தருளியாகி வந்த எங்கள் தவ சுந்தரனே அனுமந்தா

எழுந்தருளி மூர்த்தமது எழில்கொஞ்ச சுந்தரனே அனுமந்தா
பஞ்சமுக சுந்தரனாய்க் காட்சிதர சுந்தரனே அனுமந்தா
பாதமலர் பணிந்தோமையா பாலமூல சுந்தரனே அனுமந்தா
பக்தர்குலம் காகக்வந்த பஞ்சமு சுந்தரனே அனுமந்தா

வீதியுலா வருவதற்குத் தேர் வேண்டும் சுந்தரனே அனுமந்தா
என்று நாம் நினைத்த போது எங்கள் செல்ல சுந்தரனே அனுமந்தா
தேரனமாக ஆளமைத்த தேவதேவ சுந்தரனே அனுமந்தா
தேரேறும் திருக்காட்சி காட்டி வைப்பாய் சுந்தரனே அனுமந்தா

சித்திரத்தேர் கடுகதியில் சிறப்பாக சுந்தரனே அனுமந்தா
தங்கள் பதி தேடிவர தெய்வீக சுந்தரனே அனுமந்தா
திண்ணமாய் அருளுமையா ஆதிமூல சுந்தரனே அனுமந்தா
மூல நாளில் தேரேறி வரவேண்டும் சுந்தரனே அனுமந்தா

மூவுலகும் போற்றும் படி முழுமுதலே சுந்தரனே அனுமந்தா
தங்கள் பதி விளங்க வேண்டும் தார்மிப சுந்தரனே அனுமந்தா
செந்தமிழர் துயர் தீர்ந்து தெய்வீக சுந்தரனே அனுமந்தா
பெருவாழ்வு வாழ வைப்பாய் பஞ்சமுக சுந்தரனே அனுமந்தா

❁❁❁❁❁❁

# ஆஞ்சநேயருக்கு அடியவரின் அன்பான விண்ணப்பம்

| | |
|---|---|
| மருதர் பெரும் பதிக்கோயில் | ஆஞ்சநேய சுந்தரா |
| கதலிவனமாக வேண்டும் | ஆஞ்சநேய சுந்தரா |
| கதலிவனம் தங்களுக்கு | ஆஞ்சநேய சுந்தரா |
| தபோவனம் என்னறிவேன் | ஆஞ்சநேய சுந்தரா |
| தபோவனம் பேலே ஐயா | ஆஞ்சநேய சுந்தரா |
| மருதர் பதி விளங்க வேண்டும் | ஆஞ்சநேய சுந்தரா |
| எல்லாமே சிறப்பாக | ஆஞ்சநேய சுந்தரா |
| குருக்களைப் போல் தொண்டர்களும் | ஆஞ்சநேய சுந்தரா |
| பெருவிருப்பாய் பணிசெய்ய | ஆஞ்சநேய சுந்தரா |
| அபிசேகம் அருட்சிறப்பாய் | ஆஞ்சநேய சுந்தரா |
| பெரும் பூசை பேரழகாய் | ஆஞ்சநேய சுந்தரா |
| திரு அமுது மருந்தாக (அமிர்தமாக) | ஆஞ்சநேய சுந்தரா |
| அர்ச்சனையும் அருள்மயமாய் | ஆஞ்சநேய சுந்தரா |
| அருள்வாக்கு திருவாக்காய் | ஆஞ்சநேய சுந்தரா |
| நடக்கின்ற நாமபஜனை | ஆஞ்சநேய சுந்தரா |
| தங்கள் பதி சார்ந்ததாக | ஆஞ்சநேய சுந்தரா |
| தங்கள் பெருமை புகழ்வதாக | ஆஞ்சநேய சுந்தரா |
| வருகின்ற அனைவருமே | ஆஞ்சநேய சுந்தரா |
| சேர்ந்து பாட சேர்ந்துபாட | ஆஞ்சநேய சுந்தரா |
| கேட்பவர்கள் பார்ப்பவர்கள் | ஆஞ்சநேய சுந்தரா |
| அனைவருமே மனமுருக | ஆஞ்சநேய சுந்தரா |
| மெய்மறக்க வேண்டும் ஐயா | ஆஞ்சநேய சுந்தரா |
| ஆலயம் வருபவர்கள் | ஆஞ்சநேய சுந்தரா |
| அனைவருமே அமைதி பேணி | ஆஞ்சநேய சுந்தரா |
| அன்பாகப் பண்பாக | ஆஞ்சநேய சுந்தரா |
| வழிகாட்டிற்கலக்க வேண்டும் | ஆஞ்சநேய சுந்தரா |

எதிலும் ஒழுங்கு எதிலும்அமைதி ஆஞ்சநேய சுந்தரா
அடியவர்கள் பேணவைப்பாய் ஆஞ்சநேய சுந்தரா
வழிபாடே குறிக்கோளாய் ஆஞ்சநேய சுந்தரா
வருபவர் நினைக்க வைப்பாய் ஆஞ்சநேய சுந்தரா
பொய் களவு வஞ்சனைகள் ஆஞ்சநேய சுந்தரா
இல்லாமல் ஒழித்திடையா ஆஞ்சநேய சுந்தரா
தங்கள் பதி வருபவர்கள் ஆஞ்சநேய சுந்தரா
பேரன்பு அடியவராய் ஆஞ்சநேய சுந்தரா
காலமெலாம் வாழவைப்பாய் ஆஞ்சநேய சுந்தரா
கைகொடுத்துக் காத்திடுவாய் ஆஞ்சநேய சுந்தரா
ஊருலகம் வியக்கும் படி ஆஞ்சநேய சுந்தரா
தங்கள் பதிவிளங்க வேண்டும் ஆஞ்சநேய சுந்தரா
தப்புத் பதிவிளங்க வேண்டும் ஆஞ்சநேய சுந்தரா
கருணை கூர்ந்து காத்திடையா ஆஞ்சநேய சுந்தரா
ஆன்மீகம் சிறக்க வேண்டும் ஆஞ்சநேய சுந்தரா
அருள் வெள்ம் பாய வேண்டும் ஆஞ்சநேய சுந்தரா
புண்ணிய சேத்திரமாய் ஆஞ்சநேய சுந்தரா
புண்ணியர்கள் தேடி வந்த ஆஞ்சநேய சுந்தரா
அள்ளிவரம் கொடுத்திடையா ஆஞ்சநேய சுந்தரா
அரசாட்சி செய்திடையா ஆஞ்சநேய சுந்தரா
தங்களைப் போல் பெருமை சேர ஆஞ்சநேய சுந்தரா
ஊருலகை வாழவைப்பாய் ஆஞ்சநேய சுந்தரா
அழுக்காறு ஒழிய வேண்டும் ஆஞ்சநேய சுந்தரா
ஆசையும் ஒழிய வேண்டும் ஆஞ்சநேய சுந்தரா
அன்பும் பண்பும் நிறையவேண்டும் ஆஞ்சநேய சுந்தரா
அன்பு மக்கள் அனைவருமே ஆஞ்சநேய சுந்தரா
அருள் வாழ்வு வாழ வேண்டும் ஆஞ்சநேய சுந்தரா
உலகம் நிலையில் வை என்று ஆஞ்சநேய சுந்தரா
எல்லோரும் உணரவைப்பாய் ஆஞ்சநேய சுந்தரா

| | |
|---|---|
| பேரோடு புகளுக்கும் | ஆஞ்சநேய சுந்தரா |
| பட்டம் பதவிகட்கும் | ஆஞ்சநேய சுந்தரா |
| அடிமையது பட்டிடாமல் | ஆஞ்சநேய சுந்தரா |
| தங்களைப் போல் தொண்டனாகி | ஆஞ்சநேய சுந்தரா |
| தங்களைப் போல் தக்தனாகி | ஆஞ்சநேய சுந்தரா |
| தங்களைப் போல் வீரனாகி | ஆஞ்சநேய சுந்தரா |
| தெய்வீக புருசனாக | ஆஞ்சநேய சுந்தரா |
| செய்யும் பணி சிறப்பாக | ஆஞ்சநேய சுந்தரா |
| எதையும் சரியாய்ச் செய்து வாழ | ஆஞ்சநேய சுந்தரா |
| எல்லோர்க்கும் அருளுமையா | ஆஞ்சநேய சுந்தரா |
| பேர்துமென்னும் மனம் தந்து | ஆஞ்சநேய சுந்தரா |
| பொன்னடியை மறவாது | ஆஞ்சநேய சுந்தரா |
| வாழ்வாங்கு வாழ வைப்பாய் | ஆஞ்சநேய சுந்தரா |
| கல்விப் பயிர் வளர வேண்டும் | ஆஞ்சநேய சுந்தரா |
| கலைகளெல்லாம் சிறக்கவேண்டும் | ஆஞ்சநேய சுந்தரா |
| இயற்கை எல்லாம் சிறப்பாக | ஆஞ்சநேய சுந்தரா |
| பயிர் வழளம் சிறப்படைந்து | ஆஞ்சநேய சுந்தரா |
| பஞ்சம் பசி ஒழிய வேண்டும் | ஆஞ்சநேய சுந்தரா |
| ஏமாற்றிப் பிழைப்பவர்கள் | ஆஞ்சநேய சுந்தரா |
| அடியோடு ஒழிய வேண்டும் | ஆஞ்சநேய சுந்தரா |
| கடல் பொங்கி பூமிநடுங்கி | ஆஞ்சநேய சுந்தரா |
| புயலடித்து வெள்ளம் போட்டு | ஆஞ்சநேய சுந்தரா |
| அழிவுகள் ஏற்படாமல் | ஆஞ்சநேய சுந்தரா |
| கண்ணியமாய்க்காத்திடையா | ஆஞ்சநேய சுந்தரா |
| போர் முழக்கம் முடித்தது போல் | ஆஞ்சநேய சுந்தரா |
| எம் உரிமை அத்தனையும் | ஆஞ்சநேய சுந்தரா |
| தப்பாமல் சேர வைப்பாய் | ஆஞ்சநேய சுந்தரா |
| இடம் பெயர்ந்த மக்களெல்லாம் | ஆஞ்சநேய சுந்தரா |
| இருப்பிடம் சேரவைத்து | ஆஞ்சநேய சுந்தரா |

தொழில் துறைகள் சிறப்பாகி ஆஞ்சநேய சுந்தரா
மீண்டும் புதுவாழ்வருளி ஆஞ்சநேய சுந்தரா
புதிய தோர் உலகம் செய்வாய் ஆஞ்சநேய சுந்தரா
அரசியலில் லாபத்துக்காய் ஆஞ்சநேய சுந்தரா
பிழை செய்ய நினைப்பவரை ஆஞ்சநேய சுந்தரா
ஆட்சியிலே அமர்ந்தாதே ஆஞ்சநேய சுந்தரா
மக்களுக்காய் மக்களைப்போல் ஆஞ்சநேய சுந்தரா
வாழ்பவரை வையகத்தில் ஆஞ்சநேய சுந்தரா
ஆட்சி செய்ய வைத்திடையா ஆஞ்சநேய சுந்தரா
எங்களின் மன்னவன் நீ ஆஞ்சநேய சுந்தரா
என்றும் உன் அடிமை நாங்கள் ஆஞ்சநேய சுந்தரா
பாரமெல்லாம் தங்களுக்கே ஆஞ்சநேய சுந்தரா
ராமநாம மந்திரத்தை ஆஞ்சநேய சுந்தரா
நாங்களும் மறவாமல் ஆஞ்சநேய சுந்தரா
உச்சரித்து உச்சரித்து ஆஞ்சநேய சுந்தரா
கடைந்தேறச் செய்திடையா ஆஞ்சநேய சுந்தரா
தியானத்திலே மனமொடுங்க ஆஞ்சநேய சுந்தரா
திருவடியில் சரணமையா ஆஞ்சநேய சுந்தரா

ராம நாம சங்கீர்த்தனம்

ராமா ராமா

ஸ்ரீ சுந்தர பஞ்சமுக ஆஞ்சநேய சுவாமியே

சரணம், ராமா , ராமா.

# அனுமந்தன் ஆலயம் உருவாகி சிறப்பாக மேலோங்கிய நிலையில் வரலாறு சார்ந்த பாடல்

## வெண்பா

01. பூர்வீகம் கொண்ட பார்போற்றும் தல மான
மருதர் பெரும் பதியின் மாதவனே - உன் வரவு
நினைக்க மனமினிக்கும் உள்ளம் கசிந்துருகும்
வரலாறு படைத்தனே மாருதியே திருவடிகள் சரண்.

02. பூர்வீக ஞானம் துணைசே உசன் பதியில்
அவதரித்த பெருமகனாம் சுந்தரரும் - இப்புவியில்
நாளொரு வண்ணமென் வளர்பிறையாய் வையகத்தில்
நல்லம்சம் கொண்ட ஞான குருஆனார் அறி.

03. உலகம் புகழ்ந்துரைக்கும் உசன் பதியில் முருகனுக்கும்
அருட்குருவாய் அங்கு பணிபுரிந்து - சிந்தையிலே
அனுமந்தன் அருள் நினைப்பு அடிமனதில் சிறப்பாய்
முருகனொடு அனுமந்தன் வழிபாடும் சிறப்பாக நடந்த செயலறி.

04. பல சிறப்பும் சேரப் பக்குவம் நிறைந்தவராய்
அருள் சேர வாழ்ந்து வரும் நாளினிலே - அருட்தாயாம்
தங்கம்மை அருட்கண்ணில் சுந்தரராம் சற்குருவும்
அகப்படலே சுந்தரரும் அருட்துற்கைக் குருவானார் அறி.

05. உசன் முருகன் அருளோடு அனுமந்தன் சிந்தனையும்
அருட்துற்கை அருள்வலுவும் சிறப்பாக - சுந்தரரும்
அதி உயர்ந்த பெருநிலையில் தவமிருந்த வேளையிலே
அனுமந்தன் அருள் வலுவும் சிறப்பாகி உயர்ந்ததனை அறி.

06. அனுமந்தன் அருள்வலுவும் குருநாதன் தவவலும்
ஒன்றாகச் சிறந்து வளர்ந்துவர - கலியுகத்தின்
தேவை சிறப்பாக நிறைவுபெறச் சுந்தரரும்
அனுமனுக்கு கோயில் அமைக்க மனம் நினைத்தார் அறி.

07. கோயில் அமைப்பதற்குப் பல இடமும் நிலந்தேடி
மனமலைந் நேரத்தில் அனுமந்தன் - சிறப்பாக
மருதர் பெரும் பதியாம் தலமதனை விரும்பி
நிலம் சேரத் தலமனமக்க வழிவகுத்தானறி.

08. நிலம் சேர்ந்த போர்தும் தலமமைக்கும் இடம் குறிக்
அளவையூர் சஞ்சீவியாம் பெரும் சித்தர் - அருள் நிலையில்
நாராயணன் செயலால் நல்லிடம் வதித்திடவே
சிறப்பாக அருட்கேயில் அமைந்து வளர்ந்ததனை அறி.

09. மாடிமலைக் கோயிலென அனுமந்தன் திருக்கோயில்
சிறப்பாக அமைப்பதற்கு அன்பர்கள் - பெருவிருப்பாய்
வேண்டும் பொருள் கொடுக்க ஆலயமும் நிறைவாகி
குடமுழுக்கும் நிறைவாகி முடிந்ததனை அறி.

10. கவியரசன் கம்பன் புகழ்ந்துரைத்த கவியரசை
அறியாத மக்கள் செயலாலே - சிலகாலம்
எதிர்ப்பு அலை வீசி முயற்சி தோல்வியுற
அனுமந்தன் அருள்வலு பிறைபோல் வளர்ந்தனை அறி.

11. மாடிமலைக்கோயில் சிறப்பாக அமைந்தது போல்
கோபுரமும் சிறப்பாக விரைவினிலே மலை போல
ஆலயத்தின் முன் அருட்கோலங்காட் நிற்க
அதன் மேலே அனுமந்தன் வெளிப்பட்டு நிற்பதனைப்பார்.

12. கோயிலின் கீழ் மண்டபம் சிறப்பாக இயங்கி
அமுதூட்டும் பணியும் அங்கு நடந்துவர - ஆலயத்தில்
அடியவர்கள் வரவு அதிகரித்த காரணத்தால்
தனியான மடமமைக்கும் தேவை தானாக வந்தது பார்.

13. அனுமந்தன் திருவருளால் ஆலயத்தின் பின்னாக
அடியவரின் அன்பான ஆதரவால் - சஞ்சீவி
மடமொன்று சிறப்பாக அமைக்க முயலுகையில்
வஞ்சகக்கொடியோரால் சபாசர்மா மறைந்த செயல் அறி.

14. மலை சரிந்த நிகழ்வாலே குருநாதன் மனம் தளர
மடமமைக்கும் செயலும் தடையாக - அடியவர்கள்
மனம் வருந்தி அனுமனை வேண்டிடவே
குருநாதன் மீண்டும் மடமமைக்க நினைந்த செயல்அறி.

15. அனுமந்தன் திருவருளால் ஆலயத்தின் பின்னாக
பேரன்பு அடியவரின் ஆதரவால் - சஞ்சீலி
எனும் நாமங்கொண்ட மாடி மட மண்டபமும்
ஆலயம் போல் அழகாக அமைந்ந செயலறி.

16. எல்லாமே அமைந்திருந்தும் வீதி சுற்ற வழியின்றி
தொல்லை பல அனுபவித்த வேளையிலே - எம் ஐயா
அடியவரின் வேண்டுதலை ஏற்று மனம் விரும்பி
வடபுறத்தின் காணி தனைச் சேரவைத்த செயலை அறி.

17. ஊர்மக்கள் ஆதரவும், சுவிஸ் அன்பர் ஆதரவும்
ஒன்றாகச் சேர்ந்து வலுவடைய - அருள் நிறைந்த
குருநாதன் செயலாலே அனுமந்தன் துணை சேர்
பஞ்சமுக சுந்தரனார் எமை நாடி வந்ததனை அறி.

18. எமைத்தேடி வந்த எழில் கொஞ்சும் ஐம்முகற்கு
குடமுழுக்குக் கருமங்கள் சிறப்பாக - நிறைவாக்க
பேரன்பு கொண்ட சுவிஸ் வாழும் அன்பர்கள் அருட்கொடையால்
குடுமுழுக்குக் கர்மாங்கம் சிறப்பாக நடந்த செயலறி.

19. பேரன்பர் குணசீலர் அருள் சேர்ந்த பத்மனார்
சுவிஸ் வாழும் அன்பர்கள் சார்பாக - பெருந்தவிப்பாய்
மருதர் பெரும் பதிக்கு மகிழ்வோடு வந்து நின்று
சிறப்பாக குடமுழுக்கு கர்மாங்கம் நடத்தியதை நினை.

20. குருநாதன் நல் மனமும் அனுமந்தன் பேரருளும்
சுவிஸ் அன்பர் பெருநிதியும் துணையாக - அனுமந்தன்
குடமுழுக்கின் கருமங்கள் ஒவ்வொன்றும் சிறப்பாக
பேரன்பர் பத்ம நாதனவர் இட்டபூருண ஆகுதியின் அருளென்றறி.

21. அலுப்பொடு சலிப்பின்றி காலையிலும் மாலையிலும்
கருமங்கள் அனைத்திலுமே கலந்து நின்று - குருநாதன்
மனம் விரும்பும் செயல்யாவும் செய்ய நிதி கொடுத்து
துணைநின்ற பக்தி நிறை பத்மனார் பல்லாண்டு பல்லாண்டே.

22. பிறந்த மண் தனை மதித்து உறவுமுறை பேணி
குடும்பக் கடமைகளும் சிறப்பாக - மேலாக
சுந்தர அனுமந்தன் ஆலய வளர்ச்சியிலே
பேரன்புத்தவிப்புடைய பத்மநாதன் மலைமேல் விளக்காதுகவே.

23. இறைபணியே பெரும் பணியாய் கண்ணியம் மிக்கவராய்
சுவிஸ் மக்கள் மனம் கவர்ந்த சுந்தரனாய் - பெருநிதியம்
அன்பர்கள் மூலம் அழகாய்ப்பெற்று உவந்து
அனுமந்தன் கோயில் அறப்ணிகள் செய்யும் தலம் அறி.

24. ஆலயத்திருப்பணியும் அமுதளிக்கும் பெரும் பணியும்
மூலத்திருநாளின் உற்சவமும் - சிறப்பாக
பஞ்சமுகன் தோற்றச் செலவினமும் மேலாக
குடமுழுக்காம் பெரும் பணியும் சுவிஸ் அன்பர் அருட்பணியே.

25. அனுமந்தன் ஆலயத்தின் அரிய பெரும் பணிகளெல்லாம்
சிறப்பாக நிறைவு செய்யும் சுவிஸ்மக்கள் - திண்ணமென
அனுமந்தன் அருளாலே அட்டமாசித்தியொடு
மங்களமாம் பெருவாழ்வு பெறுவது திண்ணமென்றறி.

26. குடமுழுக்கின் கர்மங்கள் அனைத்தையும் சிறப்பாக
நிறைவாக்கித் தந்த பெருமகனாம் சரவணபவனாரை - பத்மனார்
மனமுருக பொன்னாடை போர்த்துக் கௌரவித்த செயல்
குடமுழுக்கின் நிகழ்விற்கு மகுடமாகுமறி.

27. என் இதயம் இடம் பிடித்து என்னையுமோர் பொருளாளராக்கி
என் உள்ளம் குளிரும்படி சிறப்பாக - மனமார
பாடல்தனை ஏற்றுக் பக்குவமாய்ப் பொள்ளாடையை
அன்பாகப் போத்த பெருமகனே நிறைவாக வாழி வாழி.

28. காலத்தின் தேவைதனைக் கருத்தில் கொண்டிட்ட
குருநாதன் சிறப்பாக எமக்களித்த - அருள் சிறந்த
அனுமந்தன் கோயில் அடியவர் தங்களுக்கு
தலை சிறந்த கற்பக விருட்சக்கலைக்கேயில் அறி.

29. அனுமந்தன் வழிபாட்டை அறிமுகம் செய்து வைத்து
அது மேலும் வளர்ச்சி உறப் பெரும்பணிகள் - சிறப்பாக
அருள்மயமாய்ச் செய்து வரும் குருநாதன் உறவெல்லாம்
நிறைவாக சிறப்பாக மேலோங்கி மங்களமாய் வாழ்க வாழ்கவே.

❁❁❁❁❁❁

## குடமுழுக்கின் மண்டலாபிஷேக நேரத்தில் பஞ்சமுகனை வேண்டுதல்

01. அருட்பெருக்கம் கொண்டு ஐம்முகனாய் உருவெடுத்து
திருமேனி ஒளிவீசும்படியாக - திருக்கரத்தில்
அருட்சக்தி கொண்ட ஆயுதங்கள் தனை ஏந்தி
எமை ஆள வந்தவனே பஞ்சமுகாதிருவடிகள் சரண்.

02. வேத விதிமுறையாய் அருள்மயமாய் அன்போடு
மங்களமாய்க் குடமுழுக்கை ஆற்றிவைத்தோம் - சிறப்பாக
அருள் பெருகத்துயர்தீர முழுமண்டலமாய்ச் செய்கின்ற
அபிசேகம் அர்ச்சனை எல்லாமே சிறப்பாக அருள்சேரவை.

03. பேரன்புத் தவிப்போடு பெருவிருப்பாய் பயங்கள்
அருள் மயமாய்ச் செய்யும் அன்பர்கட்கு - வாழ்வினிலே
மங்களங்கள் பொங்க மனத்துயரம் போயகல நிறைவாக
சீரான சிறப்பாக மங்களமாம் பெருவாழ்வருள்.

04. தினம் தினமும் அபிசேகம் சிறப்பாக நிறைவாக
அருள்மயமாய் நடந்து வருவதனால் - திருமேனி
ஒளிவீச அருள் முகங்கள் அருள்பரப்பகண்குளிர
தவஜோதியான தத்துவனே ஐம்முகனே சுந்தரனே அருள்.

05. அபிசேகம் சிறப்பாக அர்ச்சனையும் நிறைவாக
அடியவரும் பக்கவமாய்க் கையெடுக்க அருள் பொங்க
மருதர் பெரும் பதியின் மாதவனே மாருதியே
இல்வுலகம் உன்பெருமை அறிந்து உன் பதியைத் தேடிவரவை.

06. கேட்டவற்குக் கேட்டவரம் தப்பாமல் கொடுத்தருளி
நாட்டினிலே மக்கள் நலமோங்க - திண்ணமென்
நல்லரசு பக்குவமாய்ச் சிறப்பாய் அமைய வைத்து
குடிமக்கள் யாபேரும் ஒருதாயின் மக்களாய் நலமாக வாழவை.

07. தங்கள் நல்வரவால் இயற்கை வழம் சிறப்பாகி
கொடு நோய்கள் அத்தனையும் ஒழிந்தோட - நாட்டில்
பஞ்சம் பசி அகன்றொழிய கல்வி யொடு கலை சிறக்க
அச்சமில்லை பெருவாழ்வு அனைவருக்கும் அருள்.

❁❁❁❁❁❁

# செந்திரு மருவும் சுந்தரன் மாருதி

செந்திருமருவும் சுந்தரனே
அஞ்சனை தந்த தவமகனே
அகிலத்தை ஆள வந்தவனே
கம்பனின் சிந்தையில் அமர்ந்தவனே
கற்பகதருவாய் மிளிர்பவனே
உருத்திர சிவமாய் உதித்தவனே
உலகினைக் காக்கும் உத்தமனே.

பூர்வீக ஞானம் படைத்தவனே
பூலோக நாயகனானவனே
இராமரின் அவதாரம் அறிந்தவனே
இராமனைத் தெய்வமாய் தொழுதவனே
இராமனின் கவசம் ஆனவனே
இராமனுக்கினிய சேவகனே
பெருவீரசுந்தரனானவனே
பெருவெளி எங்கும் நிறைந்தவனே
அருளொளியாகி வந்தவனே
அருளலைச் செய்திட வந்தவனே.

சீதையைத்தாய்போல் மதிப்பவனே
சீரியதவநெறி கொண்டவனே
பாரிய பெருவலி தன்னாலே
பாதாளம் சென்று வந்தவனே
மயிலியை வதம் செய்த சுந்தரனே
பஞ்சமுககே மாதவனே
தீயதை ஒழித்திட வல்லவனே
திருவருள் ஞானம் படைத்தவனே
கலியுகக் கொடுமையை ஒழித்திடையா
காத்தருள் புதிய வேண்டுமையா.

அருட்பெரும் தோற்றம் கொண்டவனே
பஞ்சமுகனாம் சுந்தரனே
தனிப்பெருங்கருணை தன்னாலே
வஞ்சனை எல்லாம் போக்கிடையா

குடுமுழுக்கேற்றாய் குலும் விளங்க
குடிமுழுதாண்டு அருளுமையா
மண்டல அபிசேக சுந்தரனே
மக்கள் மனங்கொண்ட நாயகனே
அருள்நிலை நெருகிட அபிசேகம்
அன்பான அர்ச்சனை எல்லாமே
நிறைவாக ஏற்று நீ எமக்கு
நல்வாழ்வு தந்து காத்திடையா.

மண்டலப்பூர்த்தி நிறைவினிலே
அருட்பெரும் சோதிக் கனலாகி
எம் இனம் பட்டிடும் துயரொழிய
நல்லதைச் செய்து காத்திடையா
வசந்த மண்டபம் அருள்மயமாய்
அலங்காராக விளங்கிடவே
அருட்பெரும் ஜோதியாய் நீ அமர்ந்து
அரசாட்சி செய்து அருளுமையா.

தங்களினாட்சியில் பஞ்சமுகா
தீயது அனைத்தும் ஒழிய வேண்டும்
திருவருள் வெள்ளம் பாய வேண்டும்
வருபவர் அனைவரும் பணிவாக
அன்பாக அடக்கம் கொண்டவராய்
ஆலய நெறிமுறை அனைத்தையுமே
பேணிக்காத்து வழிபடவும்
பணிப்பாய் பணிப்பாய் திண்ணமென
பக்குவமாக வழிபடுவோர்
வாழ்வினிலே வழங்களை வரையாமல்
வாரியே வழங்கி அருளுமையா.

கலியுக வழிபாடு நாமஜெபம்
என்பதை அனைவரும் உணரவைத்து
தங்களின் திருப்பதி தன்னிலையா
பிரார்த்தனை வேளையில் பக்குவமாய்
மனமது உருக மனம் விரும்பி
தங்களை மறந்த நிலையினிலே
அருள்நாமம் பாட அருளுமையா.

வழிபடுபலனால் அருள்பெருகி
அனுமனின் பெருமையை அகிலமெல்லாம்
உணர்ந்து தேடி வரவேண்டும்
அருளின் பெருமை தன்னாலே
ஆலயக் குறைவேலை அத்தனையுமே
நிறைவால் முடிந்து சிறப்பான
புண்ணிய சேத்திரமாய் விளங்க
அருள்வாய் அருள்வாய் அனுமந்தா.
பஞ்சமுகனே அனுமந்தா
பக்குவப்பொருளே அனுமந்தா
எழுந்தருளி மூர்த்தி ஆனவனே
லட்சார்ச்சனைப் பூர்த்தியில் அனுமந்தா
எழுந்தருளி விதி உலா வரவேண்டும்
எழுந்தருளத் திருத்தேர் வேண்டுமையா
திருத்தேர்ப்பணியமு அனுமந்தா
விரைவாய் நிறைவாய் முடியவைத்து
தேரதை இங்கு வரவழைத்த
வெள்ளோட்டக் காட்சி எமக்கருளி.
மூலத்திநாள் தன்னிலையா
முழுமுதற்பொருளாய் தேரேறி
பஞ்சமுகனாய் அனுமந்தா
பக்குவப்பொருளாய் அனுமந்தா
அருட்பெருஞ்ஜோதியாய் அனுமந்தா
தேரேறி வீதியுலா வரவேண்டும்
தெய்வீகக் காட்சிதரவேண்டும்
தேரேறி நீ வர அனுமந்தா
அதர்மம் அனைத்தும் அழியவேண்டும்
அருளர்சி எமை வந்து சேரவேண்டும்
சகலதும் நிறைவாய் அனுமந்தா
ஆனந்த வாழ்வு அனைவக்கும்
திண்ணமாய் அருளிக் காத்திடையா.

உன்தன் அருளால் அனுமந்தா
எழுதிய பாடல் அத்தனையும்
சிறப்பாக முறையினில் அனுமந்தா
அச்சேற்றி வெளியிட அனுமந்தா
துணையது செய்வாய் அனுமந்தா
பாடலும் நீயே அனுமந்தா

பொருளும் நீயே அனுமந்தா
சந்தமும் நீயே அனுமந்தா
ஆசி உரையும் அனுமந்தா
ஆய்வு உரையும் அனுமந்தா
நீயே செய்து அனுமந்தா
சிறப்பான முறையில் அனுமந்தா
வெளியீடு செய்வாய் அனுமந்தா
அடியவர் அனைவரும் அனுமந்தா
தப்பாமல் பெற்று அனுமந்தா
பாடிப்பணிந்து அனுமந்தா
பயன் பெறவைப்பாய் அனுமந்தா
பேரது வேண்டாம் அனுமந்தா
புகளது வேண்டாம் அனுமந்தா
சகலதும் உமக்கே அனுமந்தா
சரணம் சரணம் அனுமந்தா
திருவடி சரணம் அனுமந்தா.

❀❀❀❀❀❀





## ஆக்கியோன் பற்றி.....

"ஞான ஏந்தல்" திரு வயிரமுத்து சிவநேசன் அவர்கள் அளவெட்டி அளவோலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உடுவிலை வசிப்பிடமாகக் கொண்டவர். சிறுவயதிலிருந்தே அளவோலைப் பிள்ளையார் மேல் மிகுந்த பக்தி கொண்டவர். இயற்கையாகவே அவரிடம் பாடல்கள் பஜனைகள் இயற்றிப் பாடும் தன்மையினால் பிள்ளையார் மேல் பல பக்திப்பாடல்கள் இயற்றிப்பாடி வழிபட்டுவந்தார். 1966ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கதிர்காமக் கந்தனின் உற்சவ காலங்களில் அங்கு தங்கி நின்று பழனி சந்நிதானத்தில் நடைபெறும் அகண்டநாம பஜனையில் கலந்து கொண்டும், வீதி பஜனையில் கலந்து கொண்டும் பாடிப் பரவசமடைவார். இயற்கையாகவே சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி பஜனை பாடும் ஆற்றல் உடையவர்.

அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் குடமுழுக்கு நடந்தகாலத்திலிருந்து அங்கு நடைபெறும் உற்சவகாலங்களிலும் திருப்பணிகளிலும் முழுமையாகக் கலந்து அவற்றை விவரித்துப் பாடல்கள் பஜனைகள் இயற்றிப் பாடி வந்தார். அப்பாடல்கள் இன்று புத்தக உருவில் வெளிவருகிறது. பஜனைகளுடன் பல கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார். இசையாசிரியையான இவரது மனைவி திருமதி.ஞானகுமாரி சிவநேசன் அவர்கள் பாடல்களுக்கு இசை அமைத்து இசைக் கச்சேரிகளில் பாடி வருகின்றார். வாழ்க இவரது இறைபணி வளர்க அவரது ஆன்மீகம்.

வணக்கம்

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
மருதனார்மடம், சுன்னாகம்,
இலங்கை.

*Printed by:*
Virus Printers, Inuvil. 021 224 1815